
KALKI 17.2.85
ரூ-1-50



# கல்கி


நறுமணத்துடன் புது மலர்ச்சிதரும் அந்த
முதற் காப்பியின் சுவை...
...நாளில் எந்நேரத்திலும்.
ஆஹா ! ஒவ்வொரு காலையும் எத்தனை சிறப்பாக தொடங்கலாம். அம்மா தயாரித்த அந்த புத்துயிரூட்டும் அருமையான முதற் காப்பியுடன் ! ஈடு இணையற்ற அந்த கமகமவென்ற மணம் மற்றும் முழுமையான சுவைதரும் நிறைவு...உங்களுக்கு புத்துணர்ச்சி-யூட்டி, புலன்களைத் தட்டியெழுப்பும் அதன் மகிமை !
காலங்காலமாய் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு மாதிரி இருக்கும் அந்த காப்பியே எங்களையும் ஸன்ரைஸை தயாரிக்க ஊக்கமளித்தது.
ஸன்ரைஸ். சிறந்த காப்பிக்கு ஒரு நற்சான்று.
அம்மா தயாரிக்கும் காப்பி போலவே தயாரிக்கப்பட்டது ஸன்ரைஸ். புது மலர்ச்சியளிக்கும் அந்த முதற் காப்பியை எந்நேரத்திலும் விரும்பும் காப்பி அன்பர்களுக்காக. அந்த முதற் காப்பியின் நறுமணத்தையும், சுவையையும் எந்நேரத்திலும் நீங்கள் வேண்டும் போதெல்லாம் அளிக்கும் ஒரு சிறந்த காப்பி-சிக்கரி கலவை.
Nestlé
Sunrise
Instant
a coffee chicory blend
Refill Pack
50g
Nestlé
ஸன்ரைஸ்
இன்ஸ்டன்ட் காப்பி-சிக்கரி ப்ளெண்ட்
அம்மாவின் காலை காப்பியின் புத்துணர்ச்சியூட்டும் நறுமணத்துடன்.

# துப்பாக்கி சண்முகம்

துப்பாக்கிச் சுடும் தேசியப் போட்டிகள் சென்னை எழும்பூர் துப்பாக்கிச் சுடும் களத்தில் நடைபெற்றன. எல்லா மாநிலத்தவரும் பங்கு பெற்றனர். தமிழகத்தைச் சேர்ந்த மாணவர் என். சண்முகம், Air Pistol போட்டியில் 400 பாயிண்ட்களில் 370 பாயிண்ட்களை எடுத்துத் தேசிய ரிகார்டை முறியடித்தார். இதற்குமுன் ராணுவத்தைச் சேர்ந்தவர்தான் (பஜ்ரால் சிங்) 400க்கு 365 பாயிண்ட்களை எடுத்திருந்தார்.

• கிரீஷ்



• கௌதம்



சென்னையில் இந்த நிகழ்ச்சியை முன்னின்று நடத்தியவர்கள் போலீஸ் கமிஷனர் ஸ்ரீபால்; சிவந்தி ஆதித்தன் ஆகியோர்.

என். சண்முகம் கோவை ஜியார்ஜி ஹையர் செகண்டரி ஸ்கூலில் 12—வது வகுப்பு மாணவன். இவரது தாத்தா சுப்பையா பிள்ளை, தந்தை நமச்சிவாயம் எல்லோரும் துப்பாக்கிச் சுடும் கலையில் தேர்ந்தவர்கள். ஐந்நூறுக்கு மேற்பட்ட விருதுகளையும், கோப்பைகளையும் குடும்பம் பெற்றுள்ளது. கோவையில் நமச்சிவாயம் பிரபல வணிகர். சண்முகத்தின் மாமா பாலகிருஷ்ணன் பறக்கும் பறவையைச் சுடும் போட்டியில் வெற்றிவாகை சூடினர். இவரது சகோதரருக்கும் இந்தக் கலையில் ஈடுபாடு உண்டு.

திரு. சண்முகத்துக்கு வாரம் ஒரு முறை துப்பாக்கிச் சுடும் கலையில் பயிற்சி தருபவர் தந்தை நமச்சிவாயமே. இவர் கோவைத் துப்பாக்கிச் சுடும் கிளப்பில் துணைக் காரியதரிசி.

இளைஞர் ஆண்டில் திரு. சண்முகம் தேசிய ரிகார்டை முறியடித்தது மாணவர் உலகம் பெருமைப்படக் கூடிய சாதனை.

மாணவர் சண்முகத்துக்குள்ள ஆசை சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொண்டு புகழ்பெற வேண்டும் என்பதுதான்!

இந்தத் துப்பாக்கிச் சுடும் போட்டிகளின் போது அனைவர் கவனத்தையும் வெகுவாகக் கவர்ந்த குழந்தைகள் கௌதம், கிரீஷ். இரட்டையரோ என்று எண்ணுமளவுக்கு உருவ ஒற்றுமை கொண்டு விளங்கிய இவர்கள் டான் பாஸ்கோ மாணவர்கள். பதினைந்து வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டிகளில் பங்கேற்றனர். கௌதம் (வயது 11) தேசிய ரைஃபில் சுடும் போட்டியில் மூன்றாவதாகவும், கிரீஷ் (வயது 10) தென்னக மாநிலங்களுக்கிடையேயான போட்டியில் இரண்டாவது இடமும் பெற்று முறையே வெண்கல, வெள்ளி மெடல்களைத் தட்டிக் கொண்டு போனார்கள். இவ்வளவு இளம் வயதிலேயே இத்தனை ஆர்வம் காட்டும் சகோதரர்கள் எதிர்காலத்தில் பெரும் சாதனைகளைப் புரிய வாழ்த்துவோம்.



• சண்முகம்

—குண்டுமணி.

**சென்றோம்; பார்த்தோம்; சொல்கிறோம்:—**

## எம். ஜி. ஆர். வரவேற்பு விழாவிற்குச் சென்று வந்த நமது நிருபர்கள் எழுதுகிறார்கள்...

வரவேற்பு நடந்ததற்கு முன் நாள் மதியம் பரங்கிமலை திடலில் போலீஸ்காரர்களும், அரசாங்க சிப்பந்திகளும் தான் இருந்தார்கள். அன்று மாலை 6 மணிக்குச் சின்னச் சின்ன ஜன முடிச்சுக்கள். பின்பு அதுவே பெரிதாகி இரவு 10 மணிக்கே திடல் நிரம்பி வழிந்தது. எம். ஜி. ஆர். விமானத்தில் பறந்து கொண்டிருந்த நேரத்தில் திடலில், மக்கள் அவரைத் தொழிலாளியாகவும், ரிக்ஷாக்காரனாகவும், எங்க வீட்டுப் பிள்ளையாகவும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

* சரியாக 5.45—க்கு விமானம் வந்தது. இறங்கும் முன்னர் வானத்தில் வட்டமடித்த அந்த விமானத்தைப் பார்த்தே, கைகளை ஆட்டிக் கரகோஷம் செய்தனர் அ. தி. மு. க. தொண்டர்கள்.

* ஸ்பெஷலாகச் செய்யப்பட்டிருந்த வேனில் தான் வருவார் என்று ஆவலாக மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது, முதல்வர் அவருடைய காரில் வந்து நேராக மேடைக்குச் சென்று இறங்கினார்.

* எல்லா அமைச்சர்களும் மேடையிலிருந்து 25 அடி தூரத்தில் அமர்ந்து இருந்தார்கள். பாக்கியராஜும், அமைச்சர்களோடு, அமர்ந்திருந்தார். ஆனால் பாரதிராஜா, மற்றும் முக்கியஸ்தர்கள் மேடையிலிருந்து 125 அடி தள்ளி அமர்ந்திருந்தனர்.

* மைதானங்களில் ஆங்காங்கே ஐம்பதுக்கும் மேற்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள் வைத்து இருந்தும், பல இயங்காமல் காலை வாரி விட்டன.

* முதல்வரைப் பார்த்தவுடன் கூட்டத்தில் தொண்டர்களிடையே ஆனந்தக் கண்ணீர்.. "இவரைப் போய் என்னவெல்லாம் சொன்னாங்கப்பா — ஐஸ் பொட்டியிலே வைச்சு இருக்காங்க, அது, இதுன்னு, ஆனா இப்பப் பார்"— இவ்வாறு ஒரு தொண்டர் கண்ணீர் மல்கக் கூறினார்.

* புகைப்படக்காரர்கள் 75 அடி தூரத்தில் இருந்துதான் படம் எடுக்க வேண்டுமென்ற முடிவு தளர்த்தப்பட்டு, எம். ஜி. ஆருக்கு 5 அடி முன்னால் இருந்து படம் எடுக்கும் வாய்ப்பு தரப்பட்டது.

* அமைச்சர் சௌந்தர்ராஜனைப் பார்த்தவுடன் முதல்வர், 'என்ன விஷயம்; தாடி வளர்த்திருக்கிறீர்கள்?' என்று சைகையிலேயே கேட்க 'நீங்கள் நலமுடன் திரும்பி வரப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன்' என்று அவர் சொல்ல, எம். ஜி. ஆர். கண்களில் கண்ணீர். கட்டிப் பிடித்துக் கொண்டார்.

* 'எங்கப்பா ஜெயலலிதாவைக் காணோம்' என்று ஒரு தொண்டர் கேட்க, இன்னொருவர் செய்த "அர்ச்சனை" இருக்கிறதே... காதை மூடிக் கொள்ள வேண்டும். கூட்டம் நடந்து கொண்டிருந்த நேரத்தில் விமான நிலைய வி. ஐ. பி. அறையில் பாதுகாப்பாக காட்டார வைக்கப்பட்டிருந்தார் ஜெயலலிதா? இது பற்றி மன்ற விசிறியார் ஒருவர் "எப்படி அடக்கி வைச்சுட்டோம் பார்த்தீங்களா?" என்றார். பாதுகாப்பைக் கொஞ்சம் தளர்த்தி

# பனி சூழ்ந்த காலையில்

* தமிழக அரசு அளித்த சிறப்பான வரவேற்பில் மக்கள் வெள்ளம்.





பரங்கிமலை ராணுவ போலோ மைதானத்தில் டாக்டர் நாவலர் அவர்கள் தமிழக முதல்வருக்குப் பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தார்.

# பரங்கி மலைத் திடலில்

பொது மக்களின் மகிழ்ச்சியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கையசைத்து ஏற்றுக் கொள்கிறார்.

தமிழக ஆளுநர் குரானா இராமாவரம் தோட்டத்தில் முதல்வரிடம் மலர்ச்செண்டு வழங்கி, தமது மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொண்டார்.







**டாக்டர் பி.ஸி. ரெட்டி சொல்கிருர்:**

''மிக்க தன்னம்பிக்கையும் தைரியமும் உள்ளவர் எம். ஜி. ஆர். 1984 அக்டோபர் 6—ம் தேதி அப்போலோவில் அனுமதிக்கப் பட்ட அவரை 13—ம் தேதி பக்கவாதம் தாக்கியது. ஆனலும் நாங்கள் தளர வில்லை. அமெரிக்காவிற்குச் செல்லாமல் இருந்திருந்தால், இங்கேயே நவம்பர் 2—ம் தேதி ஆபரேஷன் செய்து நவம்பர் 22—ம் தேதி வீட்டுக்கு அனுப்பி விடுவதாக இருந்தோம். அமெரிக்காவில் அவர் இருந்த போது மூன்று முறை சென்று பார்த்தேன். மூளையில் உள்ள கட்டி, ஒரு பத்துப் பைசா அளவுக்கு இப்போது இருக்கிறது. முழுவதுமாகக் கரைந்துவிடும் என்று சொல்ல முடியாது. எனவேதான் 'தெரபி' மூலம் பேச்சை வரவழைக்க முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. பக்கவாதம் தாக்கிய மூன்றும் நாளே 'பலவீனமாக இருக்கிறீர்கள்' என்று நான் குறிப்பிட்டபோது என்னுடைய இடதுகையைக் கொடுத்துப் பலப் பரீட்சை செய்து வலிமையைக் காட்டினர் எம். ஜி. ஆர்.

யிருந்தாலும் அந்தம்மா விமான ஓடு தளத்துக்கே ஓடி விடுவார் போலிருந்தது என்ருர் காவல் காத்துக் கொண்டிருந்த ஐ. பி. எஸ். அதிகாரி ஒருவர்.

* எம். ஜி. ஆர். இங்கில்லாத போது பிரமாதமாகப் பேர் அடிபட்டுக் கொண்டிருந்த ஆர். எம். வீயைத் திடலில் தேடும்படியிருந்தது. ஒதுக்கமாக, அடக்கமாக உட்கார்ந்திருந்தார்.

எம். ஜி. ஆரை வரவேற்றுப் பேசும் போது நெடுஞ்செழியன் கூறிய புகழுரைகளைக் கேட்ட எம். ஜி. ஆர். ப. வு. ச.வைக் கூப்பிட்டு 'என்ன, ரொம்பப் புகழுகிருரே' என்று சைகையிலேயே கேட்டார்.

* எம். ஜி. ஆர். திடலிலிருந்து தோட்டத்திற்குக் கிளம்பியதும், முக்கியமான மந்திரிகள் அவருடன் கிளம்ப, குட்டி மந்திரிகள் மைதானத்தில் ஆங்காங்கு சின்னக் கும்பல்கள் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

* தொண்டர்கள் மத்தியில் சென்று அமர்ந்து ஓட்டுக் கேட்டபோது, சிலர், 'என்ன இருந்தாலும் கலைஞரும் வந்திருக்கலாம்' என்றவுடன், இன்னெருவர், 'அவருக்கு அழைப்புக் கொடுத்தார்களோ, இல்லையோ' என்று சந்தேகக் கேள்வி கேட்டார்.

* அந்த அதிகாலைப் பனியில் தலையில் போர்வையைச் சுற்றிக் கொண்டு வந்திருந்த ம. பொ. சி. யைப் பார்த்த போது மார்கழி மாத பஜனை கோஷ்டியில் ஒருவர் போல இருக்கிருரே என்ற எண்ணம் தோன்றியது.

* 'புது டி.ஜி.பி. லட்சுமி நாராயணனுக்கு இதுதான் முதல் சவால். லட்சக்கணக்கில் கூடிய கூட்டத்தை, எந்தவிதச் சலசலப்பும் இல்லாமல், திட்டமிட்டபடி முடித்துத் தந்த பெருமை போலீஸுக்கு உண்டு. சபாஷ் லட்சுமி நாராயணன்!



சிறப்புக் கட்டுரை

# பரீட்சைக்குப் படிப்பது எப்படி?




அடுத்த வாரம்

# N.S.K.

# N.S.K.

# N.S.K.

## சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்



**வாடிக்கையாளர்கள் பொதுமக்கள் இவர்களின் நல்லாதரவினைப் பெற்ற என். எஸ். கே. வின் வெற்றிகரமான மூன்றும் ஆண்டு துவக்க விழா!**

**அன்பளிப்பு:- வெள்ளி குத்துவிளக்குகள்.**

அன்புமிக்க வாடிக்கையாளர்களுக்கும், பொது மக்களுக்கும்... நாளை 16.2.85 அன்று எங்களது இரண்டாம் ஆண்டின் நிறைவு விழாவினையொட்டி வாடிக்கையாளர்களின் வருகையையும், பொது மக்களின் ஆசியையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். 16.2.85 முதல் 28.2.85 வரை சீட்டு சேரும் அங்கத்தினர்களுக்கு சீட்டின் மதிப்பிற்கு தகுந்தாற்போல் வெள்ளியினாலான குத்துவிளக்கு அன்பளிப்பாக அளிக்கப்படும். தங்களுடைய அன்பான வருகையையும், ஆதரவையும் இன்று போல் என்றும் அளிக்க வேண்டுகிறோம்.

ஆரம்பமாகும் புதிய குருப்புகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ரூ. | 1,000 | x | மாதங்கள் | 50 | ரூ. | 50,000 |
| ரூ. | 1,000 | x | மாதங்கள் | 25 | ரூ. | 25,000 |
| ரூ. | 500 | x | மாதங்கள் | 50 | ரூ. | 25,000 |
| ரூ. | 500 | x | மாதங்கள் | 20 | ரூ. | 10,000 |
| ரூ. | 250 | x | மாதங்கள் | 40 | ரூ. | 10,000 |
| ரூ. | 250 | x | மாதங்கள் | 20 | ரூ. | 5,000 |
| ரூ. | 125 | x | மாதங்கள் | 40 | ரூ. | 5,000 |

ஏலமுறை:- பாதுகாப்புத் தொகையுடன் பகிரங்க ஏலம்.

குறிப்பு:- புதிய அங்கத்தினர்களை அறிமுகப்படுத்தும் என்.எஸ்.கே. அங்கத்தினர்களுக்கும், அன்றே உறுப்பினராகி, புதிய அங்கத்தினரை அறிமுகப்படுத்தும் நபர்களுக்கும், பூஜைக்கேற்ற வெள்ளியினாலான ஸ்ரீலட்சுமி உருவம் பதித்த வெள்ளிக் காசுகள் சிறப்பு பரிசாக அளிக்கப்படும்.

சீட்டுகள் சேர, தொடர்பு கொள்க:

**N.S.K.** சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்
எண். 38B, பர்கிட் ரோடு (முதல் மாடியில்)
(தி.நகர் பேருந்து நிலையம் எதிர்புறம்) தி.நகர்,
சென்னை-600 017. போன் : 447135

**எதிர்கால சேமிப்பிற்கு என்.எஸ்.கே.**

## டெஸ்ட் தொடர்: மினி அலசல்

அண்மையில் இந்தியா வந்திருந்த டேவிட் கோவர் அணிதான் இங்கிலாந்திலிருந்து இங்கு வந்த கிரிக்கெட் அணிகளிலேயே மிகவும் பலவீனமானது. ஆனால் அப்படிபட்டவர்கள்தான் பெரும் புகழுடன் வெற்றிக் கொடி பட்டொளி வீசிப் பறக்கத் தாயகம் திரும்பியுள்ளனர். பம்பாயில் முதல் டெஸ்டில் தோற்ற போதிலும் அதன் பிறகு இரண்டு டெஸ்ட்களில் வென்று டெஸ்ட் தொடரில் ஜெயக் கொடி நாட்டிவிட்டனர். ஒருநாள் சர்வதேச ஆட்டங்களில் இன்னும் அதிகமாகச் சோபித்து ஒரு தோல்வியை மட்டுமே கண்டு நாலு வெற்றிகளைப் பெற்றுவிட்டனர். முதல் தோல்விக்குப் பிறகு சோர்வடையாமல் டில்லியில் இரண்டாவது டெஸ்ட்டில் ஊக்கமுடன் மிக நன்றாக ஆடி வென்றதால் கவரப்பட்ட பீட்டர் மே (இங்கிலாந்து ஆட்டக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவின் தலைவர்) மனமகிழ்ந்து விடுமுறை எடுத்துக் கொண்டு நாலாவது டெஸ்ட்டின் போது அவர்கள் ஆட்டத்தை நேரில் காணச் சென்னை வந்திருந்தார். இதனால் பெருமையுற்ற இங்கிலாந்து அணியினர் பிரமாதமாக ஆடி ஒன்பது விக்கெட்டுகள் கைவசம் இருக்கும்போதே டெஸ்ட்டை வென்று காட்டினர். ஆக, சராசரித் திறமை உள்ள ஆட்டக்காரர்களின் அணி என்றாலும் அவர்கள் ஒற்றுமையாக ஒத்துழைத்து உற்சாகமாக ஆடினால் அதுவே மிக்க பலம் வாய்ந்த அணியாக மாறி விடும் என்பது நிரூபணமாயிற்று. அந்த ஒட்டு மொத்த சக்திக்கு கவாஸ்கர், கபில் தேவ், வெங்ஸர்க்கார், கிர்மானி போன்ற மிகப் பிரபலமான கிரிக்கெட் நட்சத்திரங்களைக் கொண்ட இந்திய அணி அடிபணிய வேண்டியதாகிப் போயிற்று என்றால் முக்கியக் காரணம் அங்கே இருந்த 'டீம் ஸ்பிரிட்' இங்கு இல்லாததுதான்.

முதல் டெஸ்ட்டில் பன்னிரண்டு விக்கெட் எடுத்த சிவராமகிருஷ்ணனின் லெக் ஸ்பின்னுக்கு மளமளவென்று பலியானவர்கள் அந்தப் பலவீனத்தை உடனடியாக இட்டு நிரப்பி அடுத்த டெஸ்ட்களில் அவரைச் சரியான முறையில் நம்பிக்கையுடன் சந்தித்துச் சமாளிக்கத் தயாராகி விட்டதானது, அவர்களுடைய அணுகுமுறை எவ்வளவு சிறப்பானது என்பதை உணர்த்தும். ரன்களைக் குவித்து ஸ்கோரை உயர்த்தியதோடு, சிறந்த ஃபீல்டிங்கும் காட்ச் பிடிக்கும் திறமையும் இந்திய அணியினரின் விக்கெட்டுகளை வீழ்த்த உதவின. டேவிட் கோவரின் ஆட்டம் அவ்வளவாகச் சிறக்கவில்லை என்றாலும் அந்தக் குறைபாடு தமது தலைமைப் பொறுப்பைப் பாதிக்க அவர் விடவில்லை. மிகச் சிறந்த காப்டனாக இயங்கி முதல் டெஸ்ட்டில் சறுக்கிச் சரிவில் விழுந்தவர்களை உற்சாகப்படுத்தி வெற்றி சிகரத்துக்கு உயர்த்திச் சென்றார். அவரது ஆட்டத் திறன் விகசித்தது கடைசி டெஸ்ட்டில் மட்டுமே

• இரட்டைச் சதம் கண்ட ஃபௌலர்.



# பூனையாக வந்தனர்...



• சிவராமகிருஷ்ணனின் அதிர் சாதனை.



ஃபாஸ்ட்ரின் பௌலிங்கில் அதிக விக்கெட்கள்



செஞ்சுரியில் ஹாட்ரிக் சாதனை பெற்ற அசாருதீன்.

# ...புலியாகத் திரும்பினர்



இரட்டைச் சதம் எடுத்த காட்டிங்.

என்றாலும் அதுவே அவருக்குத் தனிப்பட்ட முறையில் மிகுந்த மன நிறைவைத் தந்திருக்கும். ஏனெனில் இதன் மூலம் தான் இங்கிலாந்து அணி தோல்வியைத் தவிர்த்து மாட்சை டிரா செய்து டெஸ்ட் தொடர் வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள முடிந்தது.

நம்முடைய விஷயம் இதற்கு நேர்மாறானது. ஆட்டக்காரர்களைத் தேர்ந்தெடுப்பதில் அரசியல் குறுக்கீடுகள், கோஷ்டி மனப்பான்மைகள், எல்லாம் முப்பதாண்டுகளுக்கு முன்பு இருந்தது போல் இன்று உள்ளன. நடுவே பட்டோடி தலைமை ஏற்றிருந்த கால கட்டத்தில்தான் இவை இல்லாதிருந்தன. இப்போதோ எனில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கம் இழுக்கிற ஆட்டக்காரர்களை ஒன்றாகக் கட்டிவைக்க முயன்றது போலிருந்தது. கவாஸ்கரும், கபில்தேவும் எவ்வளவுதான் மறுப்புக்களை விட்டாலும் சரி, இந்த ஆரோக்கியமற்ற நிலைமைக்கு அவர்களே முக்கியக் காரணம். போதாக்குறைக்குக் கவாஸ்கருக்கு 35 வயதாகிவிட்டது. ஊக்கம் குறைந்திருக்கிறது. கபில்தேவுக்கு 25 வயதுதான் என்றாலும் சக்திக்கு மீறி அதிகம் விளையாடியதும் முழங்கால் கோளாறும் அவர் திறமையைப் பாதித்துள்ளன.

இருப்பினும் இளம் ஆட்டக்காரர்கள் சிலர் விடிவெள்ளிபோல் தோன்றியுள்ளது மகிழ்ச்சி தருவதாகும். அஸருத்தினும், சிவராமகிருஷ்ணனும் மறக்க முடியாத சாதனைகளைப் புரிந்துள்ளனர். கான்பூரில் முதல் டெஸ்ட் அனுபவம் பெற்ற கோபால் சர்மா மற்றொரு நம்பிக்கை நட்சத்திரம். ரவிசாஸ்திரியிடம் எதிர்கால காப்டன் பதவியை ஏற்பதற்குரிய தகுதிகளைப் பார்க்கிறோம்.

—பி. என். சுந்தரேசன்.

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்:

குட்டிகிருஷ்ணன்.

புகைப்படங்கள்: பாலாஜி.



ஜனதா
பாரதீய ஜனதா
சரண் சிங் கட்சி
இ.காங்கிரஸின் இளம் வேட்பாளர்கள்
ஜெயலலிதா
ஒண்ணும் தெரியாதபடி வெள்ளை அடிச்சுடறேன்
ராஜினாமா கடிதம் அனுப்பி விட்டேன்.
அமெரிக்கா சென்று புரட்சித் தலைவரைச் சந்திப்பேன்.
தலைவரின் பெயரால் மோசடி நடக்கிறது!




# கல்கி

1985 பிப்ரவரி 17

மலர்: 43 இதழ்: 29

ரக்தாக்ஷி மாசி 6




## பிரதமக் காரியதரிசிகளின் பிரமாத சாதனை!

பிரதமராகப் பதவி ஏற்றதிலிருந்து நாட்டுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற ஆத்மார்த்தமான நல்லெண்ணத்துடன் மளமளவென்று பல காரியங்களைச் செய்துவருகிறார் ராஜீவ். அண்மையில் மாநில அரசுகளின் பிரதமக் காரியதரிசிகளைப் புதுதில்லிக்கு வரவழைத்து மகாநாடு நடத்தியதும் ராஜீவின் செயல் ஊக்கத்துக்கு ஒரு உதாரணம். இம்மாநாட்டின் சிபாரிசுகள் முக்கியமானவைதாம் என்றாலும் மாநாட்டில் அலசப்பட்ட பிரச்னைகள் தீர்வதற்கு இந்தச் சிபாரிசுகள் உதவுமா என்பது சந்தேகமே.

இன்றையச் சூழலில் பாரதக் குடிமகன் பிறந்ததும் பிறப்புச் சான்றிதழ் தொடங்கி இறந்ததும் மரணச் சான்றிதழ் பெறுவதுவரை சகலத்துக்கும் அரசு அதிகாரிகள், ஊழியர்கள் முன் கைகட்டி நிற்க வேண்டியுள்ளது. நேடிவிடி சான்றிதழ், பிற்பட்ட வகுப்புச் சான்றிதழ், பட்டா, வில்லங்கம், கிஸ்தி, கடன், வரி என்று வாழ்க்கையில் முன்னேற அவன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் அரசு குறுக்கிடுகிறது; அரசு ஊழியர் அல்லது அதிகாரியின் தயவு அவனுக்கு வேண்டியிருக்கிறது. தொழில் அல்லது வியாபாரம் தொடங்கினாலோ கேட்கவே வேண்டாம். மூலதனம் அல்லது கடனுக்காக அரசுடைமை ஆன வங்கியில் போய் நிற்பதில் ஆரம்பித்து வரிசையாக எக்ஸைஸ் அதிகாரி, விற்பனைவரி அதிகாரி, மின்வாரிய அதிகாரி, தொழிலக இன்ஸ்பெக்டர், தொழிலாளர் நலன் அதிகாரி, கார்ப்பரேஷன் ரெவின்யூ அதிகாரிகள், வருமானவரி அதிகாரிகள், சுகாதார இன்ஸ்பெக்டர்கள், ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் எனில் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கஸ்டம்ஸ் அதிகாரிகள், தொழிலாளருக்குக் காண்டீன் நடத்த எண்ணினால் ஸிவில் ஸப்ளை அதிகாரிகள் இத்யாதி, இத்யாதி என்று மிக நீண்ட பட்டியல். சிறு தொழில் எனில் அதற்கு வேறு பிரிவுகள் உள்ளன. இப்படி அரசின் நூற்றுக்கணக்கான கரங்களுக்கிடையில் சகலரும் சிறைப்பட்டுத் தவிக்க நேர்கிறது. ஒவ்வொரு இடத்திலும் லஞ்ச ஊழல் சகஜமாகிவிட்டது. உருட்டல், மிரட்டல்களும் உள்ளன.

எனவே தாமதங்களைத் தவிர்க்க வேண்டும், அரசு அதிகாரிகள் முடிவெடுக்கப் பழகவேண்டும், எடுக்கும் முடிவுக்குப் பொறுப்பேற்கவும் வேண்டும், தேவையற்ற விதிமுறைகளை நீக்கி நடைமுறையை எளிதாக்க வேண்டும், லஞ்ச ஊழல் பேர்வழிகளைச் சீக்கிரமாகக் கண்டுபிடித்துத் தண்டிக்கவேண்டும், அரசியல்வாதிகளின் தலையீட்டைத் துணிச்சலுடன் புறக்கணிக்கவேண்டும் என்றெல்லாம் மாநிலப் பிரதமக் காரியதரிசிகளை அழைத்து வைத்து உபதேசித்துத் திருப்பி அனுப்பினால் மட்டும் போதாது. இந்தச் சிபாரிசுகள் அமுல்படுத்தப்படுவதென்பது எளிதல்ல. அமுலாகாது என்றே கூறிவிடலாம்.

செய்ய வேண்டியது என்னவெனில் அரசு அதிகாரிகளைக் குடிமகன் அணுக வேண்டிய சந்தர்ப்பங்களைக் கணிசமாகக் குறைப்பதுதான். குடிமகனுக்கும் சிறிய, பெரிய தொழில் வர்த்தக நிறுவனங்களுக்கும் அதிகபட்சச் சுதந்திரங்களை வழங்கி, அரசின் குறுக்கீடுகளையும் கட்டுப்பாடுகளையும் குறைந்தபட்சமாக்குவதுதான். தும்பைவிட்டுவிட்டு வாலைப்பிடித்தால் காளை அடங்காது; துள்ளவே செய்யும்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்.

## நேரம் நல்ல நேரம்

**52. போன வாரம், ஏந்தல் இளங்கோ, திடீரென்று நீங்கள் பயணம் செய்யும் விமானம் ஹைஜாக் செய்யப்பட்டால், உங்கள் மனநிலை எப்படி இருக்கும் என்று கேட்டிருந்தார்...**

அது.. வந்து... எந்தக் காரணத்துக்காக ஹைஜாக் செய்யப்படுகிறது 'ஏர்கிராஃப்ட்' என்பதைப் பொறுத்து இருக்கும். நான் ஏதும் புரட்சி செய்வதாக இருக்குமேயானால், அதற்கு ஒத்துழைப்பாக இந்த ஹைஜாக் செய்யப்படுகிறது என்றால், ''ஜெய் தமிழ்நாடு!'' என்று சொல்லிக் கொண்டு நானும் அவர்கள் கூடப் போனாலும் போவேன். ஆனால் அது. இந்தியாவையே பிரிக்கும் ஒரு செயலாக இருக்குமேயானால், இந்தியன் என்ற முறையில் அது எனக்கு மனக்கஷ்டத்தை ஏற்படுத்திவிடுமேயானால், பதற்றமாக இருக்கும், இப்படியெல்லாம் செய்கிறீர்களே என்று. எனக்கு அவர்கள் பேசும் பாஷை புரியுமானால், மெதுவாகத் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகாமல், அவர்களிடம் பேசிச் சமாளித்து, கோமாளித்தனங்கள் செய்து, ''போக்கை மாத்திக்குங்களேன்... மொதல்ல நாங்க போக வேண்டிய ஊருக்குப் போயிட்டு அப்புறம் நீங்க போங்களேன்...? எதுக்காக இப்படிப் பண்றீங்க? பிளேனை ஹைஜாக் பண்றதுனால, நீங்க கேக்கறதெல்லாம் நடந்துடுமா? உங்களுக்கு என்ன வேணும்? இதுதானே வேணும்?... அதுதானே வேணும்?... இல்லே உங்களுக்கு என்ன பத்தாயிரம் ரூபாய் வேணுமா? நீங்க வாங்க, பாங்குல இருக்கு, எடுத்துத் தர்றேன்...'' அப்படீங்கற மாதிரி எல்லாம் பேசிச் சமாளிக்கப் பார்ப்பேன். கொஞ்சம் ஆள் பலஹீனமாத் தென்பட்டான்னா, ''மேல பாருங்க குருவி பறக்குது''ன்னு சொல்லி, திரும்பும்போது துப்பாக்கியைப் பறிக்க முயற்சி பண்ணுவேன். என்ன பண்ணுவேன்னு சொல்ல முடியாது. அது நிலவரத்தைப் பொறுத்தது... ஹைஜாக் செய்பவர்கள் பெண்களாயிருந்தால், அவர்கள் கையில் துப்பாக்கி இருந்தால்... அவர்களுக்குப் பயப்படும்படியான நிர்ப்பந்தம் எனக்கு ஏற்படும்... இது இக்கட்டான கேள்வி. மனசில் பல குறும்பான பதில்கள் தோன்றுகின்றன. அதனால்தான் இத்தனை தடுமாறறேன் நான்!

**53 தாமல் கண்ணன், சென்னை—54. சகல கலா வல்லவரே, நீங்கள் தொடர்கதை எழுதுகிறீர்கள்... மேலும் எழுதும் எண்ணம் உண்டா? அப்படியாயின் அதற்கு நேரம் எப்படி ஒதுக்குவீர்கள்?**

முதல் கேள்வி நீங்க கேக்கற கேள்வி. இரண்டாவது கேள்வி எப்படி நேரம் ஒதுக்குவேன்ங்கறது நானே என்னைக் கேட்டுக்கற கேள்வி. இது கடினமான விஷயம். இந்த எழுத்துங்கறது ஏதோ ஆசைப்பட்டு—ஆபீசுல வேலை பார்க்கிறவங்க ஏதாவது நாடகத்துலே நடிக்கணும்கிறதுக்காக ஒரு நாள் அரிதாரம் பூசிக்கிட்டு நாடகத்துலே நடிக்கிற மாதிரி — நான் 'ஏதோ' ஒரு ஆசைக்குக் கதை எழுதினேன். 'ஏதோ ஒரு இண்ட்ரஸ்ட்' இருக்கலாம். அதுக்கான திறமை இருக்கான்னு நானே என்னை விமர்சித்துப் பார்த்து, சந்தேகப்பட்ட ஒரு விஷயம். அப்படி இருக்கும்போது இதுக்கான நேரத்தைக் கூட ஒதுக்கிடலாம்... ஆனா அதுக்கான திறமையை வளர்க்கிறதுக்கான நேரத்தை எப்படி ஒதுக்கறது? இதுதான் எனக்குத் தெரியாத ஒரு விஷயம்!

**54. ஏ. சித்ரா ஆறுமுகம், ஈரோடு. பாரதியின் ஏ.வி.எம்.மின் அல்ல—புதுமைப் பெண்ணைப் பற்றி, உங்கள் கற்பனையில் நாலு வரி புதுக்கவிதை எழுத முடியுமா? 'ஜஹாங்' என்ற பதிலை எதிர்பார்க்கவில்லை.**

அதாவது பாரதியின் — ஏ.வி.எம்.மின் அல்ல — என்று சொல்லியிருக்கிறீர்கள். பாரதி எல்லோருக்கும் — ஏ.வி.எம்.முக்குக் கூட — சொந்தம் என்று சொல்லலாம். இன்னும் சொல்லப் போனால், ஏ. வி. எம். மைப் பொறுத்தவரையிலும், பாரதிக்கும் ஏ.வி.எம்.முக்கும் நிறையத் தொடர்பு உண்டு. பாரதியாரின் பாடல்களை அதிகமாக, முதல் முறையாகச் சினிமாவில் பயன்படுத்திய பெருமை திரு. ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் அவர்களையே சாரும். ஆக, பாரதி, ஏ.வி.எம். மின் பாரதியும் கூட என்று சொல்லிக்கொண்டு, பாரதியின் புதுமைப் பெண்ணைப் பற்றிப் புதுக்கவிதையில் சொல்லச் சொல்லியிருக்கும் உங்கள் கேள்வியைப் பார்க்கிறேன்: 'இதற்கு 'ஜஹாங்' என்று பதில் சொல்லக்கூடாது. என்று கூறியிருக்கிறீர்கள். 'பாரதியாரைப் பற்றி ஒரு கவிதையில் சொல்லும் திறமை எனக்கு இருந்தால் நான் நடிகனாக இருக்க மாட்டேன்; வேறு ஏதாவது கவியரங்கத்தில் பேசிக் கொண்டிருப்பேன். ஆக, பாரதியாரைப் பற்றிய கேள்விக்கு 'ஜஹாங்' என்ற பதிலை நீங்கள் எதிர்பார்க்கவில்லை.

# கமல் பதில்கள்



''காதல் காட்சிகளில் நடிக்கக் கற்றுக் கொடுத்தவரே கமலஹாசன்தான்!''—

என்ற பட்சத்தில் 'சஹாஹாஹாஹம்' என்று சொல்லிவிடுகிறேன்!

**55. மங்களா சேஷாத்ரி, பாடி.**
**காதல் காட்சிகளில் நடிப்பது எப்படி என்று எனக்குக் கற்றுக் கொடுத்ததே கமலஹாசன் தான் என்று வெளிப்படையாகச் சொல்லி யிருக்கும் ஸ்ரீதேவி பற்றி...?**

புள்ளி, புள்ளி, கேள்விக்குறியா? அது வாத்தான் இருக்கும்னு நெனச்சேன்... ஸ்ரீதேவி இப்படித்தான் ஏதாவது ஏடாகூட மாப் பேட்டி குடுத்துடுவாங்க... நல்ல எண்ணத்துலதான் குடுத்துருப்பாங்க. அவர்கள் சொன்னது விகல்பம் இல்லாமல் இருக்கும். காதல் காட்சிகளில் நடிக்க அவருக்குப் பாலசந்தர்தான் கற்றுக் கொடுத்தார். நான் கூட இருந்து பார்த்திருக்கிறேன். சிறிது கோபப்படுவார் திரு. பாலசந்தர். ''இது என்ன இப்படிப் பண்றே? தப்பு!''ன்னு கூடச் சொல்லுவார். கடுமையாக இருக்கும் விமர்சனங்கள்... அவர் பயந்துவிடக் கூடாதே என்பதற்காக, ''அவர் என்ன சொல்றாரு... இப்படி இருந்து என்னைப் பார்த்தீங்கன்னு... அதுதான் அவர் கேக்கறாருன்னு நினைக்கறேன். வேணு அப்படி செஞ்சுப் பாருங்க. அவர் கோபப்பட மாட்டார்''னு உதவியா நான் சொல்லியிருப்பேன். மற்றபடி தமிழ்ப்படத்துல காதல் காட்சிகள்ள நடிக்கறதுக்குக் கத்துக் குடுத்தாலும் அது விரசமான ஒரு விஷயமில்லே. அதையே ஒரு ஆங்கிலப் படத்துல ஒரு நடிகை இப்படிச் சொல்லியிருப்பாரேயானால் அது ஒரு இக்கட்டான பிரச்னையில் என்னை உட்படுத்தியிருக்கும். அது இல்லேங்கறதுனால, இது ஒண்ணும் பெரிய பிரச்னை இல்லே. ஸ்ரீதேவிக்குக் காதல் காட்சியில நடிக்க நான் சொல்லிக் கொடுத்தேன்னு அவர் சொல்லியிருந்தால், அதில் பெருமை அடைகிறேன், சந்தோஷப்படுகிறேன்!

**56. எம். விஜயராயன், அல்லி நகரம், தேனி.**
**பெண்களிடம் தங்களுக்குப் பிடித்த குணம் எது? பிடிக்காத குணம் எது?**

தாய்மை; வேசித்தனம். தாய்மை பிடித்தது. வேசித்தனம் பிடிக்காதது.

**57. கே. லலிதா, பிலாய்.**
**விண்வெளிப் பயணத்துக்கு உங்களுக்கு அழைப்பு வந்தால், உங்கள் மனநிலையும், பதிலும் என்னவாக இருக்கும்?**

மனநிலை புவியீர்ப்புக்கு அடிமைப்படாது பறக்கும். பதில்: ''செகண்ட் சண்டேயாப் பார்த்து வச்சுக்குங்க சார்! அன்னிக்குத் தான் ஷூட்டிங் இருக்காது!'' என்பதாக இருக்கும்.

**58. கே. ராஜாராம், சென்னை—4.**
**நீங்கள் சினிமா வாழ்க்கையில் எல்லாவற்றையும் சாதித்துவிட்டீர்கள். நோ டவுட் அபவுட் இட். பப்ளிக் வெல்ஃபேரில் என்ன சாதிக்கலாம் அல்லது செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?**

ஒரு சினிமா நடிகன் பப்ளிக் வெல்ஃபேராகச் செய்வது, அந்தத் தொழிலில் அவன் அடையும் வெற்றி. நீங்கள் சொல்வது போல் நான் எல்லாவற்றையும் சாதித்துவிட்டதாக உங்களுடன் சேர்ந்து 'உம்' கொட்டுவேனே ஆயின், என்னுடைய ரிடையர்மெண்ட் தேதி நெருங்கிவிட்டது என்று அர்த்தம். ஆக அதற்கு நான் ஒத்துக் கொள்ள மாட்டேன். சோஷியல் வெல்ஃபேர் என்னுடைய தொழிலில் எனக்கு நானே ஏற்படுத்திக் கொள்ளும் முன்னேற்றம்தான்.

**59. ஆர். ஜகதீசன், பீளமேடு.**
**இந்தி நடிகைகளுக்கும், தமிழ் நடிகைகளுக்கும் உள்ள ஒரு நல்ல வேறுபாடு?**

—பதில் அடுத்த வாரம்!

தொகுப்பு: சித்தார்த்.

# சமீபத்தில் ரசித்தது



• எம். ஜமால், போடிநாயக்கனூர்.
? மலேசியா வாசுதேவன் நடிப்பு எந்த ரகம்?

! வாழ்ந்து காட்டுகிற ரகம். அதுவும் சிலைத் திறப்புவிழாவில் வியர்வை வழிய சொற்பொழிவாற்றும் போது நிஜ அரசியல்வாதி கெட்டான் போங்கள்!

• எஸ். ரவீந்திரன், கடலூர்.
? கலைமாமணி பட்டம் எந்த அடிப்படையில் தரப்படுகிறது?

! மானாவாரி அடிப்படையில்.

• லீலா இராம், தக்கலை (குமரி).
? விவேகமானவர் என யாரைச் சொல்வீர்கள்?

! இந்த வாரம் திருநாவுக்கரசு.

• மணிவண்ணன், தூத்துக்குடி.
? சுதந்திரப் போராட்டத்தில் வீரர்களைக் காட்டிக் கொடுத்தவர்கள், பெரும் ஊழல் களை மூடி மறைக்கும் அரசியல்வாதிகள், இப்போது நாட்டையே காட்டிக் கொடுத்து வாழ நினைப்பவர்கள்— இவர்களில் யார் தேவலாம்?

! மூன்று பேரில் நடுவில் சொன்னவர் தான் படுமோசம். ஏனென்றால் இவர்கள் மக்களின் நம்பிக்கையை வளர்த்து வோட்டுப் பெற்றபின் அவர்களுக்குத் துரோகம் செய்கிறார்கள். ஆக இந்த சுயநலமிகள் இரட்டிப்புத் துரோகம் செய்கிறார்கள். முதலிலும் மூன்றாவதாகவும் பேசப்பட்டவர்களும் சுயநலத் துரோகிகளே என்றாலும் பொது மக்கள் முன் இவர்கள் தூயவர்கள் போல் நாடகமாடி நடிப்பதில்லை.

• மேஜர் தாசன், ஈரோடு.
? தன் நாடக கம்பெனியை எடுத்து நடத்த முன் வருகிறவருக்கு 15 லட்சம் மதிப்புள்ள சீன் செட்டிங்குகளை இலவசமாய்த் தருவதாகக் கூறுகிறாரே மனோகர்?

! சீன் செட்டிங் எல்லாம் வழங்கலாம். நடிப்பாற்றலை, பிறரை இயக்கும் திறனை, நிர்வாக சாமர்த்தியத்தை யார் கொடுப்பது?

• எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப் பட்டி.
? கிசுகிசுக்கள் பெரும்பாலும் நடிகர், நடிகைகளைப் பற்றி வருகிறது. ஏன் பத்திரிகையாளர் பற்றிய கிசுகிசு வருவதில்லை...?

! உங்கள் வரை எட்டவில்லை என்று வேண்டுமானால் சொல்லுங்கள்.

• இராசன் பழனிச் சாமி, தாரமங்கலம்.
? தி. மு. க. வுக்கு ஏற்பட்ட இந்தச் சிறிய வெற்றி அனுதாப அலையினால்தானே?



• கண்ணும் காதும்



• யார் கொடுப்பது?

! கிடையாது. சேர்ந்தாற்போல் தேர்தல் நடந்திருந்தால் இந்த இடங்களையும் அனுதாப அலையில் அ. தி. மு. க. — இ. காங்கிரஸ் அடித்துக் கொண்டு போயிருக்கலாம். இப்போது யோசிக்க வேண்டியுள்ளது. பெரு வெற்றி மிதப்பிலிருந்த அ. தி. மு. க. ஊழியர்கள் அலட்சியமாய் இருந்தது ஒரு காரணம். கட்சிக்குள் பிளவுகள் விசுவரூபமெடுத்துத் தலைவர்கள் ஒருவர் மீது ஒருவர் அவதூறு சேற்றினை வாரி இறைக்க, மக்கள் அருவருப்படைந்தது ஒரு காரணம். எப்போதுமே இந்தத் தொகுதிகளில் தி. மு. க. பலம் வாய்ந்ததாயிருந்தது மூன்றாவது காரணம். அண்மையில் ஏற்பட்ட தலைகுனிவை ஓரளவேனும் சரிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தி. மு. க. ஊழியர்கள் கடுமையாக உழைத்தது நாலாவது காரணம்.

• எம். இராஜேந்திரன், வால்குடி.
? ரயில் பயணத்தின் போது உட்கார்ந்து தூங்கிய அனுபவம் உண்டா?

! ஸ்லீப்பர் கிடைத்தால் ரயில் கிளம்பிய

# அரசியல் ஜோக்?



• விவேகம்



• தமிழைக் காப்பாற்று



• வாழும் நடிப்பு

துமே காலை நீட்டிக் கைப்பையைத் தலையணை யாக்கிக் கொர். கொர். ஸிட்டிங் மட்டுமே கிடைத்தால் மற்றவர்களுக்கு முன்னால் அவசரமாக அன்றைய மாலை நாளிதழை (ஞாபகமாய் வாங்கிவர வேண்டும்) தரையில் பரப்பி கட்டையை விரிப்பேன். சில சமயம் இதுவும் அதுவும் இன்றி ஜெனரல் கம்பார்ட்மெண்ட்டில் அவசரப் பயணம் நிமித்தம் ஏற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுப் போகும். அப்பப்பா அந்தச் சித்திரவதை! ஒருசமயம் மாயூரத்திலிருந்து எழும்பூர் வரை ஜன்னல் விளிம்பில் புருஷ்டத்தை நுழைத்து அமர்ந்து முதுகு முன்னுக்குச் சரிய தலை நிமிர்ந்திருக்க முழங்கால் முகவாயை இடிக்கச் செய்த பயணமும் அப்புறம் அனுபவித்த மூன்று நாள் உடல் வலியும் ஜன்மத்துக்கும் மறக்காது!

• எஸ். கந்தசாமி, திருச் செந்தூர்.
? நாத்திகத்தைவிட ஆத்திகம் தற்போது வேகம் பெற்றுள்ளது தெரிகிறதா?

! எஸ். டி. எஸ். ஒருவரும் வெளியேறிவிட அ. தி. மு. க. தலைவர்கள் எல்லோருமே கண் திறந்ததாக எண்ணும்போது வேறு எப்படி இருக்க முடியும்? ஆனால் இறையுணர்வு நல்லறங்களை வளர்த்துக்கொள்ளப் பயன்படவேண்டுமேயன்றி குற்றங்களை மறைக்கப் பயன்படுத்தப்படுமேயானால் விபரீத விளைவுகளுக்குத் தயாராக இருக்கவேண்டும்.

• எஸ். தேவராஜு, சேலூர்.
? எந்த மாநிலத்து உணவு உங்களுக்குப் பிடிக்கும்?

! மல்லிப்பூ இட்டிலியும், கமகமக்கும் வெங்காய சாம்பாரும், உறிஞ்சிக் குடிக்க எலுமிச்சை ரசமும், பொன்னிற முறுமுறு தோசையும், நெய் மிதக்கும் அக்காரவடிசலும்... நினைக்கும்போதே வாயில் ஜலம் ஊறுகிறதே... தமிழகத்தின் நளபாகத்தைவிடச் சிறந்ததாக உலகிலேயே ஒன்றும் கிடையாது. உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

• சி.சௌந்தரபாண்டியன், கிருஷ்ணகிரி.
? லஞ்சப் பேயைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் யார்?

! சுயநலமும் பேராசையும்.

• எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.
? சமீபத்தில் ரசித்த அரசியல் ஜோக்?

! "ஆங்கிலத்திடமிருந்து தமிழைக் காப்பாற்றுங்கள்."
—ம.பொ.சி., வீரப்பன்.

• இரா. சம்பத்குமார், இராசிபுரம்.
? நான் எம். ஜி. ஆருக்குக் கண்ணாகவும், காதாகவும் இருந்திருக்கிறேன் என்று ஜெயலலிதா கூறியதைக் கேட்டதும் என்ன நினைக்கத் தோன்றுகிறது?

! நல்லவேளை இந்த மட்டோடுவிட்டாரே. அவரது மனச்சாட்சியாகவும் சொல்லாகவும் செயலாகவும் இருந்திருந்தால் தமிழகத்தின் கதி என்ன ஆவது?

• ரூ. 10 பரிசு பெறுபவர்:
மணிவண்ணன்,
34—A, கிப்ஸன்புரம்,
தூத்துக்குடி—2.

## நீங்கள் கேட்டவை
## — தராசு

# சோகக் கதையும்

17

இரண்டாவது உலகப் போரினாலும் இட்லரின் நாஜி இயக்கத்தினாலும் ஐரோப்பிய யூதர்கள் பயங்கரமான அளவு பாதிக்கப்பட்டார்கள். வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட இந்தப் பாதிப்பை ஞாபகப்படுத்தவும் நினைவு கூரவும் இன்று மேற்கு ஐரோப்பாவிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் பல சின்னங்கள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன. கிழக்கு ஐரோப்பாவில் போலந்திலுள்ள **Auschwitz** கான்சென்ட்ரேஷன் காம்ப் நினைவகமும், மேற்கு ஐரோப்பாவில் ஆம்ஸ்டர்டாமிலுள்ள 'அன்னே ஃபிராங்க் நினைவு இல்லமும்' இவற்றில் மிகவும் முக்கியமானவையாகும். சொல்லப்போனால் 'ஆஸ்ச்விட்ஸ்'க்கும், 'அன்னே ஃபிராங்க்' இல்லத்திற்கும் வரலாற்றுத் தொடர்பு கூட இருக்கிறது. இட்லரின் ஆஸ்ச்விட்ஸ் கான்சென்ட்ரேஷன் காம்பில் தான் அன்னே பிராங்கின் தாய் பசிக் கொடுமையால் மடிய நேர்ந்தது. அன்னேயின் உறவினர் பலரும் இங்கு மாண்டனர்.

இன்று ஆம்ஸ்டர்டாம் நகரில் '**Prinsengracht**' பகுதியில் உள்ள மியூஸியமான அன்னே ஃபிராங்க் ஹவுஸ்' நமக்கு அவளது சோகக் கதையை எல்லாம் விரிவாகச் சொல்லுகிறது.

*1933*—இல் இட்லர் ஜெர்மனியின் சான்ஸலர் ஆனபின் ஜெர்மனி முழுவதும் யூதர்களுக்குத் தலைவலி ஆரம்பமாயிற்று. யூதர்கள் பயமுறுத்தலுக்கும், கொடுமைக்கும் ஆளானார்கள். யூத வியாபாரிகள் ஜெர்மனியிலிருந்து வெளியேறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. *1929*—ல் ஃபிராங்க்பர்ட் மெயினியில் பிறந்த அன்னே ஃபிராங்க்கிற்கு 4 வயதாயிருக்கும் போது இந்த நிலைமை ஏற்பட்டது. அன்னே ஃபிராங்க்கின் தந்தையான ஒட்டோ ஃபிராங்க் (**Otto Frank**) குடும்பத்துடன் ஆம்ஸ்டர்டாமிற்குக் குடிபெயர்ந்தார். *1933*—க்கும் *1939*—க்கும் இடையே ஆயிரக்கணக்கான ஜெர்மன் யூதர்கள் இப்படிப் பிற நாடுகளுக்கு ஓடி வரும்படி ஆயிற்று. இட்லரின் பயங்கரமான யூத எதிர்ப்புக் கொள்கையே இதற்குக் காரணம். தப்பி வெளி வருவதுகூட *1938*—க்குப் பின் மிகவும் கடினமான காரியமாகிவிட்டது. அன்னே ஃபிராங்க்கின் பள்ளிப் பருவம் ஆம்ஸ்டர்டாமில் தொடங்கியது.

*1940* மே மாதம் இட்லர் ஹாலந்தை ஆக்கிரமித்த போது புகலிடம் தேடி ஆம்ஸ்டர்டாமில் தங்கியிருந்த ஃபிராங்க் குடும்பத்தினரின் தவிப்பும், குழப்பமும் அதிகமாயின.


தலைமறைவாக ஒளிந்து வாழ்வதற்கு அவர்கள் ஓர் இடம் தேட வேண்டியிருந்தது. மெர்வெட் சதுக்கத்தில் (**Mewede Square**) ஒரு வீட்டில் குடியேறி வசித்துவந்த ஃபிராங்க் குடும்பத்தினர் பகிரங்கமாக அந்த வீட்டைக் காலி செய்துவிட்டு வேறு ஒளிவிடம் நாடும்படியாகிவிட்டது. ஆம்ஸ்டர்டாமில் குடியேறிய நாளிலிருந்து ஒட்டோ ஃபிராங்க் 'பிரின்சென் கிராச்ட்' பகுதியில் தம்முடைய வியாபாரத்தை நடத்தி வந்த வீட்டின் இணைப்புப் பகுதியான — ஒரு சிறிய வீட்டை மறைவிடமாகத் தேர்ந்தெடுத்தார். ஆம்ஸ்டர்டாம் நகரத்து வீடுகளின் அமைப்பில் — ஒவ்வொரு வீட்டிற்கும் அநேகமாக ஓர் அனெக்ஸ் — அதாவது இணைப்பகம் உண்டு. இம்மாதிரி இருந்த இணைப்பகத்தில் ஃபிராங்க் குடும்பத்தினர் பல மாதங்கள் மறைந்து வாழ நேர்ந்தது. வெளியே இருந்து பார்ப்பவருக்கு— முதல் பார்வையில் புத்தக அலமாரி போல் தோன்றக் கூடிய ஓர் வாசற் கதவை அமைத்து அதன் மூலம் தந்திரமாக உள்ளே போய் வர முடிந்தது. யாரும் புழங்காத சமயங்களில் பிரதான வீட்டைச் சேர்ந்த புத்தக அலமாரியைப்போல் அந்த வாசல் காட்சியளிக்கும்.

ஜீலாண்ட்



# சுடரொளி வைரங்களும்


மறைந்து வாழ்வதற்கான சகலவிதமான ஏற்பாடுகளும் பக்காவாகச் செய்துமுடிக்கப் பட்டபின் இப்போது நினைவுச் சின்னமாகி விட்ட இந்த 263 'பிரின்செண்கிராசட்' வீட்டில் 1942 ஜூலையில் ஃபிராங்க் குடும்பத்தினர் பதுங்கினர். இப்படிப் பதுங்கியவர்களில் ஃபிராங்க் குடும்பத்தினரும் அவர்களுக்கு மிகவும் வேண்டிய யூதர்களும் இருந்தனர். வேண்டிய மற்றவர்களின் உதவியுடனும், ஒத்துழைப்புடனும் 1944 ஆகஸ்டு மாதத் தொடக்கம் வரை இந்த அஞ்ஞாத வாசம் நீடித்தது. நாஜிகளின் கடுமையான கண்காணிப்பில் யூதர்கள் எங்கெங்கு இருக்கிறார்கள் என்று தேடிக் கண்டுபிடித்துக் கட்டாய வேலைக்காக (Mandatory work) சம்மன்



• ப்ரீஸ்லாண்ட் — படகுகள் புறப்படத் தயார்.

அனுப்பி வந்தார்கள். இதிலிருந்து தப்பிக்கவே ஃபிராங்க் குடும்பத்தினர் தலைமறைவு வாழ்க்கையை நடத்த வேண்டியிருந்தது. தலைமறைவு வாழ்க்கையின்போதும், அதற்குமுன்பும் தனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து — நடந்தவற்றையெல்லாம் இளம் அன்னே தேதிவாரியாகத் தனது நோட்டுப் புத்தகங்களில் குறித்து வந்தாள். பின்னாளில் இந்தக் குறிப்புக்களே வரலாறாகியது.

1944—ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் தேதி பதுங்கியிருந்த யூதர்களின் துரதிர்ஷ்டம் அவர்களைத் தேடி வந்தது. புத்தக அலமாரி போல் தந்திரமாக மறைக்கப்பட்டிருந்த அனெக்ஸின் வாயிலில் ஜெர்மன் போலீஸார் வந்து நின்று 'open up' என்று கூப்பாடு போட்டார்கள். மறைந்திருந்த அனைவரையும் கைது செய்ததோடமையாமல் மறைவிடம் அணு அணுவாக 'ரெய்ட்' செய்யப்பட்டது. அவ்வாறு சோதனையிட்டுக் கைப்பற்றியவற்றில் அன்னேயின் நாட் குறிப்பு விவரங்களைப் பள்ளிக் குறிப்புகள் என்று நினைத்தோ என்னவோ அங்கேயே சிதறி விட்டுப் போய்விட்டார்கள். ஆம்ஸ்டர்டாமில் தங்களுக்கு நடந்த கொடுமைகளையும், பிற அனுபவங்களையும் பற்றி இளம் அன்னே எழுதிய நாட் குறிப்புவிவரங்கள் இந்தவிதமாகத் தான் தப்பின. இந்த நாட்குறிப்புத் தான்கள் மட்டும் தப்பவில்லையாயின் அன்னே ஃபிராங்கின் சோகக் கதையே எதிர்



• ஷீவனென்ஷன்

காலத்திற்குத் தெரிய வாய்ப்பில்லாமல் போயிருக்கும்.

ஆம்ஸ்டர்டாமில் மறைந்திருந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுக் கைது செய்யப்பட்ட யூதர்கள் முதலில் போலீஸ் நிலையத்திற்கும், பின்பு 'வெஸ்டர் போர்க்கிற்கும்' (Westerbork) இறுதியாக ஆஸ்ச்விட்ஸ் கான்செண்ட்ரேஷன் முகாமிற்கும் கொண்டு செல்லப்பட்டார்கள். பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டர்ர்கள். எப்படி எப்படி எல்லாம் யூதர்கள் அந்தச் சித்திரவதை முகாமில் கொடுமைப்படுத்தப் பெற்றார்கள் என்பதை இன்றும் போலந்திலுள்ள 'ஆஸ்ச்விட்ஸ்' நினைவுச் சின்னக் காட்சியில் சித்தரித்துள்ளார்கள். ஃபிராங்க் குடும்பத்தினருடன் வான்டான், டஸ்ஸல், பீட்டர் முதலியோரும் ஆம்ஸ்டர்டாமில் கைதாகி ஆஸ்ச்விட்ஸ் வந்திருந்தனர். ஓட்டோஃபிராங்கின் மனைவியும் அன்னேயின் தாயுமான திருமதி

நா. பார்த்தசாரதி

ஃபிராங்க் ஆஸ்ச்விட்ஸ் வந்த சில நாட்களில் பசிக்கொடுமை தாளாது மரணமடைந்தார். அவர்களோடு பிடிபட்டிருந்த மற்றொரு யூதரான வான்டான் (Van Dann) காஸ்சேம்பரில் (விஷவாயுவைச் செலுத்தி மூச்சு முட்ட வைத்துக் கொல்லுமிடம்) தள்ளப்பட்டார். பீட்டரும் மற்றும் எண்பத்தெட்டுப் பேரும், ஜெர்மன் இரகசியப் பிரிவு போலீஸாரால் கொண்டு செல்லப்பட்டார்கள்.

ரஷ்யப்படை 'ஆஸ்ச்விட்ஸை'க் கைப்பற்றி யூதர்களை விடுவித்தது. அதற்குமுன்பே 'Neuengamme'—க்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த இளம் அன்னேயும் அவளுடைய மூத்த சகோதரி மார்காட்டும், டஸ்ஸலும் typhus ஆல் அவதியுற்றார்கள். டஸ்ஸல் இறந்தார். மற்றும் பலரும் மாண்டனர். அன்னேயும், மார்காட்டும் மறுபடி ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து மற்றொரு சித்திரவதை முகாமாகிய பெர்கன்பெல்ஸனுக்கு (Bergen Belsen) அனுப்பப்பட்டனர். 1945 மார்ச்சு மாத வாக்கில் அன்னேயும் அவளுடைய சகோதரி மார்காட்டும் ஒருவர் பின் ஒருவராக மாண்டனர். சாகும்போது அன்னேஃபிராங்கின் வயது 19. மார்காட்டின் வயது 22. நாஜிகளின் கொடுமையால் வாழ ஆரம்பிக்க வேண்டிய வயதில் சாகத் தொடங்கினர் அவர்கள்.

ரஷ்யப்படையினர் ஆஸ்ச்விட்சை ஜெர்மானியரிடமிருந்து மீட்டு அந்த முகாமிலிருந்தவர்களை விடுவித்த போது அதில் பிழைத்தார் ஓட்டோஃபிராங்க்.

1944 ஆகஸ்டு முதல் தேதி ஆம்ஸ்டர்டாம் பிரின்சென்கிராச்ட் 263—ம் எண் இல்லத்து மறைவிடமாயிருந்த அனெக்ஸில் ஜெர்மன் போலீஸாரால் கைது செய்யப்பட்ட யூதர்களில் கடைசிவரை பிழைத்து உயிரோடு மீண்டவர் குடும்பத் தலைவரான ஓட்டோஃபிராங்க் மட்டும்தான்.

ஜெர்மன் போலீஸார் மேற்படி வீட்டை ரெய்ட் செய்தபோது அங்கேயே விட்டுவிட்ட இளம் அன்னேயின் நோட்டுப் புத்தகக் குறிப்புக்களை ஃபிராங்க் குடும்பத்தின் அப்போதைய உதவியாளர்களில் ஒருவராயிருந்த மியெப் (Miep) என்பவர் எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்.

ஆஸ்ச்விட்சிலிருந்து ரஷ்யர்களால் சுதந்திரமாக விடுவிக்கப்பட்ட ஓட்டோஃபிராங்க் ஆம்ஸ்டர்டாம் திரும்பிய போது மியெப் அவரிடம் அன்னேயின் டைரி போன்ற இந்த நோட்டுப் புத்தகங்களைப் பத்திரமாகத் திருப்பிக் கொடுத்தார். தன் கையெழுத்தால் அன்னேயே அந்த நாட்குறிப்பு விவரங்களுக்கு 'The Annex' என்று பெயர் சூட்டியிருந்தாள்.

1947—ல் ஓட்டோ ஃபிராங்க் அன்னேயின் நாட்குறிப்புக்களை வெளியிட்டார். இப்படி முதலில் வெளியான டச்சுப் பதிப்பைத் தொடர்ந்து பிரெஞ்சு, ஜெர்மன், இங்கிலீஷ் மொழிபெயர்ப்புக்களும் வெளிவந்தன. இன்று பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஐம்பது மொழிகளில் அன்னேயின் நாட்குறிப்புக்கள் மொழிபெயர்த்துப் பிரசுரிக்கப்பட்டு விட்டன. ஆங்கிலத்தில் வெளியான ஓர் அமெரிக்கப் பதிப்பிற்கு எலினூர் ரூஸ்வெல்ட் (Elenor Roosevelt) பிரமாதமான முன்னுரை ஒன்றை எழுதியிருக்கிறார். எல்லா மொழிப் பதிப்புக்களுமாகச் சேர்ந்து அன்னேயின் நாட் குறிப்புக்கள் இதுவரை பதிமூன்று மில்லியன் பிரதிகள் விற்பனையாகி இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இந்நாட்குறிப்பின் அடிப்படையில் ஒரு மேடை நாடகமும் திரைப்படமும் கூட உருவாக்கப்பட்டுப் பிரபலமாயின. டைரியின் ஒரிஜினல் பிரதியை இன்று அன்னேஃபிராங்க் மியூசியக் கட்டிடத்தில் வைத்திருக்கிறார்கள். பார்க்கலாம்.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு இடிபாடுகளோடு — இடித்துத் தள்ளப்பட இருந்த இக்கட்டிடத்தை மீட்டுப் புதுப்பித்து 'அன்னேஃபிராங்க் ஃபவுண்டேஷன்' இன்று ஒரு பொருட்காட்சியாக நடத்துகிறது. பார்வையாளர்களின் கட்டணத்தையும், நன்கொடைகளையும் கொண்டு இன்று ஓர் அறக்கட்டளை இந்த ஃபவுண்டேஷனை நன்கு நிர்வகிக்கிறது. யூதப் பெருமக்களுக்கு ஆம்ஸ்டர்டாமிலுள்ள அன்னேஃபிராங்க் ஹவுஸ் (Anne Frank House) ஒரு க்ஷேத்திரமாகவே ஆகிவிட்டது. Anne Frank Foundation—க்கு ஓர் அமெரிக்கக் கிளை யுனைடெட் ஸ்டேட்ஸில் இயங்குவதால் அமெரிக்க யூதர்கள் வாரி வழங்கி இந்நிறுவனத்தை வளர்க்கிறார்கள். பத்தொன்பது வயதில் இளம் மொட்டாகவே கருகி மடிந்த அன்னேஃபிராங்கின் சோகக் கதையைச் சித்தரிக்கும் படங்கள், பண்டங்களை எல்லாம் இங்கே பார்த்து முடித்தபின்— ஆம்ஸ்டர்டாமின் புகழ்பெற்ற பழைமையான வைரப்பட்டறை ஒன்றின் முகப்பில் போய் நின்றது எங்கள் கோச். 'நான்கு தலைமுறையாக வைரத்துடன் பழகுபவர்கள் நாங்கள்' — என்ற போர்டு எங்களை முகப்பில் வரவேற்றது.

(தொடரும்)

ஒரு திருத்தம்

7 நாடுகளில் 8 வாரங்கள் கட்டுரைத் தொடரில் 10.2.85 இதழில் 16—வது கட்டுரையில் 30—ம் பக்கத்தில் 'ஆன்ஃபிராங்க் ஹவுஸ் என்ற ஒரு வைரப்பட்டறையைக் காண்பதுடன் டூர் முடியும்' என அச்சாகியுள்ளது. இதை 'ஆன்ஃபிராங்க் ஹவுஸ்' என்ற இடத்தையும் ஒரு வைரப்பட்டறையையும் காண்பதுடன் டூர் முடியும்' — என்று திருத்திப் படிக்கவும்.

உளுந்து மாவும், எலுமிச்சம் பழச்சாறும் கலந்து அதனைச் சேற்றுப் புண்ணுக்கு மருந்தாகத் தடவினால் குணமாகும் என்கிறது மருத்துவ நூல்.

—புதுவை நித்திலன்.

# N.S.K.

ஃபைனான்சியர்ஸ்

# அன்பளிப்பு

## வெள்ளிக்குத்துவிளக்கு

## பாங்க் கேஷ் சர்ட்டிபிகேட்

உங்களின் முதலுக்கு பாதுகாப்பு

**18%** வட்டியுடன் டெபாசிட் தொகைக்கு உத்திரவாதம்.

## பிக்செட் டெபாசிட் திட்டம்

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள்

| 1 yr | 2 yrs | 3 yrs | 5 yrs |
|---|---|---|---|
| 17% | 18% | 19% | 21% |

**24%** வழக்கமான வட்டி விகிதங்களின் மேல் 3% கூடுதல் வட்டி. இந்த சலுகை 15-1-85 முதல் 30-4-85 வரை.

(minimum deposit acceptable Rs. 1000/- multiple)

உங்களுடைய முதலீடு 48 மாதங்களில் எங்களது
''கோல்டன் கேஷ் சர்டிபிகேட் திட்டத்தின் மூலம் இருமடங்காகிறது''

**N.S.K.** ஃபைனான்சியர்ஸ்

எண். 38-B, பர்கிட் ரோடு, (முதல் மாடியில்)
(தி.நகர் பேருந்து நிலையம் எதிர் புறம்)
தி.நகர், சென்னை—600 017. போன்: 447135

எதிர்கால சேமிப்பிற்கு என்.எஸ்.கே.

# மோகினி திருக்கோலம்

## ஸ்ரீ வேணுகோபாலன்

18

### செஞ்சுகா எங்கே போனாள்?

செஞ்சுகாவின் கூடாரத்துக்குச் சற்று தூரத்தில் அந்தத் துரிதச் சண்டை நடந்தது. ஆசான் கற்பித்த வித்தைகள் அத்தனையும் கைகொடுக்க, வர்மன் ஒரு போர்ப்புயலாகச் சுற்றி இரண்டு வெள்ளையர்களை வீழ்த்தி விட்டான். வான் சண்டை அது!

இதற்குள் வெள்ளையர்களின் எக்காளம் திடீரென முழங்க, அவர்கள் சிப்பாய்களும் காவலாட்களும் விரைவாகத் திரும்பினார்கள். படை ஆர்க்காட்டுக்குள் திரும்பியது.

கிளைவுக்கு ஒரே கலக்கமாக இருந்தது. மூன்று வெள்ளை அதிகாரிகள் இறந்துவிட்டார்கள். சிப்பாய்களில் 18 பேர் கொல்லப்பட்டார்கள். அவன் கொண்டு வந்திருக்கும் சைனியமோ சிறியது. இதில் இனியும் ஆட்களை இழக்கக் கூடாது. கோட்டையை விட்டு வெளியே போகக் கூடாது என்று தீர்மானித்தார்கள்.

இதற்கிடையில் சென்னையிடம் கேட்டிருந்த 18 பவுண்டு பீரங்கிகள் வந்துவிட்டன என்று உளவுச் செய்தி வந்துவிட்டது. அவற்றை எப்படிக் கோட்டைக்குள் கொண்டு வருவது என்பது அவனது பிரச்னையாகப் போய் விட்டது.

ஆர்க்காட்டுக்கு வெளியே கில்லூதார் அகமத்கான் வர்மனை அழைத்து வெகுவாகப் பாராட்டிக் கொண்டிருந்தார்.

அவன் இல்லாவிட்டால் வெள்ளையர்கள் செஞ்சுகாவைப் பறித்துப் போயிருப்பார்கள்.

வர்மன் அப்படி ஒரு தனி வீரன் என்றே யாருக்கும் தெரியாது.

"தம்பி" என்றார் கில்லேதார். "இப்படிச் சூரனாக இருக்கிறாயே! நீ இன்றிலிருந்து எங்கள் தளகர்த்தரில் ஒருவன். இந்தா பிடி" என்று உத்தரவுச் சின்னமாக வெள்ளி வாள் ஒன்றை அவனிடம் நீட்ட, "ஐயா, ஐயா!" என்று ஆட்சேபனை சொல்லுவாய் எடுத்தும் அது முடியாமல் கையில் திணிக்கப்பட்ட வாளை ஒரு மரியாதைக்காக ஏற்றுக் கொண்டான்.

பிறகு கண்ணீர் மல்க, "ஐயா! நான் வந்திருக்கும் காரணமே வேறு! நான் என் வேலைகளை முடித்துவிட்டு நெல்லைச் சீமை திரும்ப வேண்டும். எனக்கு உத்தியோகம் ஏதாவது கொடுத்துத் திணற வைக்காதீர்கள்!" என்றான்.

கில்லேதார் அவனை விடவில்லை. அவனைத் தன்னோடு சம ஆசனத்தில் அமர்த்தினான். வெள்ளையரை வெற்றி கண்டதற்காக ஒரு விமரிசையை அங்கு நடத்த ஆரம்பித்தான்.

அழகிய பணிப் பெண்கள் மதுக் கோப்பைகளைக் கொண்டு வந்தார்கள்.

மழமழத்த ஜாடிகளிலிருந்து மது வார்க்கப்பட்டது.

இரண்டு நாட்டியப் பெண்கள் தோன்றி ஆட வந்தார்கள்.

வெளியே ஷெனாய் ஒலித்தது.

திமுதிமு என்று நகராக்கள் முழங்கின.

படை ஆட்கள் சந்தோஷத்தில் ஆரவாரிக்க, அந்தச் சத்தமும் ஏகோபித்த 'ஹோ' வாகக் கேட்டது.

அந்தத் தர்கை வெளி எங்கும், மகிழ்ச்சியும், பரவசமும் கொந்தளித்தன.

கில்லேதார் சாயங்காலம் வரை வர்மனை விடவில்லை.

எல்லாக் கேளிக்கைகளிலும் உடன் இருக்க வைத்தார்கள்.

அந்தி அணைந்ததும் வாண வேடிக்கைகள் கூட நடந்தன.

இரவு போஜனத்திலும் வர்மன் அவர்களுடன் இருக்க வேண்டி வந்தது.

நடுநிசிமேல் தனது கூடாரத்திற்குச் சென்று உறங்கிவிட்டுக் காலையில் எழுந்த வர்மன் முதல் காரியமாகச் செஞ்சுகாவைப் பார்க்க விரைந்தான்.

அவளைப் பார்த்தால் என்ன சொல்வாள்? அவள் முகத்தில் எவ்வளவு மகிழ்ச்சி ததும்பும்?

"வீரரே! பிரமாதமாகச் சண்டைபோட்டீர். நீர் மட்டும் இல்லாவிட்டால் அந்தப் பரங்கியர் என்னைப் பிடித்துப் போயிருப்பார்கள்" என்று கன்னம் குழையச் சொல்லுவாள்.

ஜமீன் அரண்மனை முன் அவன் பரங்கிய

ரோடு சண்டை போட்டதை அவள் அன்று பார்க்கவில்லையா?

கண்களை விரித்து இரண்டு நீலக்கடல்களை பார்ப்பதுபோல் பார்த்தாளே!

வாய்கூட ஆச்சரியத்தில் திறந்து இருந்ததே!

அதன் மென்மைச் சிவப்பில் சூரிய அந்தியின் சாயை வீசியதே!

முகவாயில் மென்மை முறுவல் சின்ன விசிறியாய் விசிறியதே!

அதில் காந்தமான கதிர்கள் வசீகரமாகக் குழைந்தனவே.

அவளே காலையின் முதல் மலர் போல உயர்ந்து, பரந்து, கம்பீரமாக நின்றாளே!

அந்தக் காட்சி அத்தனையையும் நினைவு வைத்திருந்தான் வர்மன்.

ஒருவேளை அவன் வைத்திராமல், மனம் அதை அவனுக்காக ஆழத்தில் பதித்துவைத்திருந்ததோ?

எப்போதாவது சோர்வுறும் வேளையில் இந்தா, பார்த்துக் கொள் என்று காட்டுகிறதோ?

வர்மன் விரைந்தான்.



அவளது கூடாரம் எட்டத்தில் தென்பட்டதும் மனம் ஒரு தத்துக்கிளி போல் துள்ளியது.

கண்களில் கனவு சுரந்தது.

பெருகிவரும் உவகை எல்லாவற்றையும் சிரமத்துடன் அடக்கிக் கொண்டான்.

கூடாரத்தை அடைந்தான்.

வாசலில் பணிப் பெண்ணைக் காணவில்லை. அடுத்து அந்தத் தாதி அமர்ந்திருப்பாள். அவளையும் காணவில்லை.

சோம்பல் முறித்துக் கொண்டு ஒரு சிப்பாய் எழுந்து வந்தான்.

"உள்ளே இளவரசி இல்லையா?" என்றான்.

"இளவரசியா?" என்றான் அவன்.

"இங்கேதான் இருந்தார்களே!" என்றான் வர்மன்.

"எனக்குத் தெரியாது. நாங்கள் இங்கே நேற்று இரவு படுத்திருந்தோம்!" என்று கூறினான் அவன்.

வர்மனுக்கு ஆத்திரம் வந்தது. எங்கே அவள்?

கூடாரம் மாறிவிட்டாளா?

அல்லது ஆற்றுக்குக் குளிக்கப் போய்விட்டாளா?

எங்கே அவள்?

அருகிலுள்ள மற்றக் கூடாரங்களில் கேட்டுக் கொண்டே போக, ஒரு ஹவில்தார் விஷயத்தைக் கூறினார்.

"நேற்றைக்கே தளபதி அவர்களைத் திருச்சிராப்பள்ளி அனுப்பிவிட்டார்களே!"

"திருச்சிராப்பள்ளியா? அங்கே எதற்கு?"

"நவாப் (சந்தாசாகிப்) படைகள் அங்கே தானே இருக்கின்றன?"

"ஏன் அங்கே அனுப்பித்தார்?"

"இங்கே இருந்தால் ஆபத்து. வெள்ளைக்காரர்கள் அவளை அபகரித்துவிடுவார்கள்! நவாபிடம் இருந்தால் அது நடக்காது. அது மட்டுமல்ல, திருப்பதிப் பணம் அவருக்கு ஒழுங்காகப் போய்ச் சேரும்."

வர்மன் கண் ஒருகணம் இருண்டது. தரையில் நிற்க முடியவில்லை. பாதங்கள் ஆட்டம் கண்டன.

"ஐயா!" என்றான் நெஞ்சு நெகிழ. "ஏன் இப்படிச் செய்தார்கள்? என்னிடம் கேட்க வேண்டாமா? என்னைத்தான் ஜமீன்தார் அனுப்பியிருக்கிறாரே! அவருக்கு நான் எப்படிப் பதில் சொல்லுவது?" என்று பாதியும் புலம்பினான்.

"இல்லை தம்பி! இது கில்லேதார் உத்தரவு! அவரிடமே கேள்!" என்று கூறினான்.

வர்மன் கூடாரத்தை விட்டு வெளியே வந்தான்.

அவனை ஒரு ஆத்திரம் பற்றியது. 'ச்' என்று காற்றில் கையை எறிந்தான். பற்கள் கடிபட்டன. தரதர என்று நடந்தான். கில்லேதார் கூடாரத்தை அடைந்தான்.

"பிரபு! பிரபு!" என்று கூறிக் கொண்டு உள்ளே போனான். காவலாளிகள் வழிவிட்டார்கள்.



உலகில் இரண்டே இரண்டு நாடுகளில் மட்டும் தயாராகும் திரைப்படங்கள் தணிக்கை செய்யப்படுவதில்லை. தணிக்கை முறை அமுலில் இல்லாத அவ்விரு நாடுகள் டென்மார்க், ஹாலந்து.
ஸ்கிரீனிலிருந்து. —தோபஞ்சு.

கில்லேதார் ஹூக்கா பிடித்துக் கொண்டிருந்தார். அவனைப் பார்த்ததும் முனையை வெளியே இழுத்து, ஆச்சரிய விழியாக அவனை விழித்தார்.

"பிரபு! எங்கள் இளவரசியை என்ன செய்தீர்கள்?" என்றான். அவனை மீறி ஆத்திரம் அந்த வார்த்தைகளின் ஓரங்களைப் பற்றியது.

"உட்கார் தம்பி! ஏன் பதற்றமடைகிறாய்?"

"இல்லை, எனக்குத் தெரிய வேண்டும், இளவரசியை எங்கே அனுப்பினீர்கள்?"

உட்கார்ந்து கொண்டே கேட்க, கில்லேதார் புன்னகை புரிந்தார். "ஏன் தம்பி? பத்திரமான இடத்துக்கு அவளை அனுப்பியிருக்கிறேன்!"

"எங்கே?"

"எங்கள் நவாப் தண்டுக்கு!"

"அங்கே ஏன் அனுப்பினீர்கள்?"

"தம்பி! இங்கே வெள்ளையர்கள் நமக்குத் தொல்லை தருவதை நீதான் கண்ணால் பார்த்தாயே! இங்கே இளவரசியை விட்டு வைத்திருந்தால் ஆபத்து ஆயிற்றே! அதுவும் இளவரசியை இந்த வெட்ட வெளியில் எத்தனை நாள் பாதுகாக்க வைப்பது? மேலும் திருப்பதிப் பணம் எங்கள் நவாபுக்குச் சொந்தமாயிற்றே! அதை அவரிடம் கொடுத்துப் பெண்ணைப் பெற்றுக் கொள்வதன்றோ முறை! இதை எல்லாம் ஆலோசித்துத்தான் இளவரசியை நவாப்பு சமூகத்திற்கு அனுப்பித்துவிட்டேன்" என்றார்.

"சரியில்லை பிரபு, சரியில்லை! தாங்கள் செய்தது சரியில்லை. என்னைக் கேட்டிருக்க வேண்டாமா?" என்றான் வர்மன் ஆத்திரமாக.

"பொறு தம்பி! சண்டை சமயம் இது. இதில் அவசரமாக நாங்கள் தீர்மானிக்க வேண்டி வந்தது. அனுப்பி விட்டோம்!" என்றார் ஒரு முறை ஹூக்காவை உறிஞ்சி.

"நான் ஒப்பவில்லை! ஒப்பவும் மாட்டேன். இந்தாருங்கள்! உங்கள் வெள்ளி வாள்! நான் உங்கள் தளகர்த்தர் அல்ல. போகிறேன், நான் இளவரசியைப் பார்த்தாக வேண்டும்!"

என்று வாளை அவர் முன்னால் படக்கென்று போட்டுவிட்டுக் கிளம்பினான் வர்மன்.

கூடார வாயிலுக்குப் போயிருக்க மாட்டான். "இந்தா தம்பி!" என்றார் கில்லேதார். திரும்பினான்.

''நீயும் அங்கேதானே போகப் போகிறாய்?''

''எங்கே?''

''திருச்சிராப்பள்ளிக்கு!''

''ஆமாம்.''

''நானே உனக்குக் கடிதம் எழுதித் தருகிறேன். அப்போதுதான் படைத்தண்டு அருகில் நீ போக முடியும்.''

அவரை நோக்கி வந்தான் வர்மன்.

கில்லேதார் தம் கைப்பட எழுத ஆரம்பித்தார்.

வர்மன் உன்மத்தமாக வெளியே வந்தான்.

நேராக ஓடோடி அந்தக் கூடாரத்தை அடைந்தான்.

செஞ்சுகா தங்கிய கூடாரம் அந்தச் சமயம் உள்ளே யாருமில்லை.

உள்ளே பல நிமிடங்கள் பிரமித்து நின்றான்.

காற்றை முழுசாக இழுத்துவிட்டான். நெஞ்சு விம்மியது.

''இந்தக் காற்றைத்தானே அவளும் சுவாசித்திருப்பாள்?''

தரை மீது மிருதுவான மணல் மேல் மென்மையாக நடந்தான்.

''இந்த மண்ணில்தான் அவள் பாதங்கள் பதிந்தன.''

கண்ணில் நீர் மல்கிறது.

கூடாரத்தின் உள் திரைகளைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

''ஐயா!'' என்று குரல் கேட்டது. வெளியே போனான்.

ஒரு பணியாள் ஒரு குதிரையைக் கொணர்ந்திருந்தான்.

''இதை எங்கள் தளபதி தங்களிடம் கொடுக்கச் சொன்னார்.''

வர்மனுக்கு மகிழ்ச்சி!

''அவருக்கு நன்றி செலுத்துகிறேன்,'' என்றான் அவன்.

பிறகு குதிரை அருகில் வந்து அதன் கறுப்பு மேனியை இருமுறை தட்டினான்.

குதிரை அன்போடு திரும்பிப் பார்த்தது. ஒரு துள்ளுத் துள்ளி ஏறி அமர்ந்தான். பிறகு தெற்கே நோக்கிப் பறக்க ஆரம்பித்தான்.

அந்த ஆர்க்காட்டுப் படையின் கூடாரங்களைத் தாண்டியிருக்க மாட்டான்.

''ஐயா! ஐயா!'' என்று குரல் கேட்டது. பெண் குரல் அது! ஆச்சரியத்தோடு குதிரையை நிறுத்தினான்.

ஒரு துருக்கிய இளம்பெண். அவசரத்தோடு தன் முகத் துணியைக் கழுத்தில் திணித்தவாறு ஓடி வந்தாள்.

வர்மன் குதிரையிலிருந்து இறங்கினான். ஒரு பாறையை அடுத்து வந்து நின்றான்.

''ஹுஸூர்! இதைத் தங்களிடம் தரும்படி செஞ்சுகா சொன்னார்கள்...'' என்றாள்.

இருபத்திநாலு வயது இருக்கும். கண்ணில் மைதீட்டிப் பெரிதாக்கியிருந்தாள். முகம் பனிபோன்ற வெளுப்பு. காதில் குழைகள் தொங்க, தன் வளைக் கைகளை நீள நீட்டி ஒரு ஓலையை அவனிடம் கொடுத்தாள்.

''நீ யார்?'' என்றான் அவன்.

''நான் பணிப் பெண்! இளவரசியிடம் வேலை செய்தேன்.''

வர்மன் அவசரமாக ஓலையைப் பிரித்தான்.

படிக்க ஆரம்பித்தான்.

(தொடரும்)




நாக
சத்தியம்
ஆறுமுகனேரி
மனோகரன்

ரிவெக்ஸ் வால்கிளாக் பத்துமுறை பீம்.. பாம்... ஒலித்தது.

எங்கிருந்து வருகிறது என்று கண்டு பிடிக்க முடியாத ஒளிக்கற்றைகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன.

நவநாகரீகத்தின் ஆளுகைக்குட்பட்ட அந்தப் பங்களாவின் ஹாலில் நடுவாக இருந்த சோபாவில், மக்களால் பக்தியுடனும்; பாசத்துடனும் சாமியார் என்று அழைக்கப்படும் மிராசுதார் கோலப்பன் அமர்ந்திருந்தார்.

சாமியார் எனும் பெயருக்கு ஏற்றாற் போல் நீண்ட வெண் தாடி மீசையுடன், திரளான திருநீறுப் பூச்சுடன் தோற்றமளித்தார்.

வயது எழுபத்து ஐந்தைத் தாண்டிவிட்டாலும், கட்டான உடல் அமைப்பு, ஒழுக்கம் நிறைந்த ஒரு மிராசுதாராக வாழ்ந்ததற்குச் சாட்சி கூறியது.

மலர்ந்த நிலையில் தரையில் கிடத்தப்பட்டிருந்த பெண்ணைக் கவனித்தார் சாமியார்.

பதினாறு வயதின் இளமையும் செழுமையும் பூரணமாக நிறைந்திருந்தாள்.

இயற்கையான எலுமிச்சை நிறத்தில் சிறிது நீலம் பரவியிருந்தாள். அதுவும் அவள் மேனிக்கு மெருகூட்டியது.

பாவாடை தாவணி கலைந்திருந்த நிலையோ... துறவிகளுக்குச் சவாலே... சமானி!

அவளின் உள்ளங்கை மேல்புறத்தில் இரத்தம் காய்ந்திருந்த இரண்டு சிவந்த புள்ளிகளைப் பார்த்தார்.

நாடித் துடிப்பைச் சோதித்தார்.

மிக பலவீனத்தை ஒலித்தது.

தலைமுறை அனுபவக் குறிப்புகளைத் தேக்கி வைத்திருந்த நெற்றிச் சுருக்கங்கள் விரிய, சோகத்துடன் நின்றிருந்த கூட்டத்தினரைப் பார்த்து நிமிர்ந்தார்.

''—பக்கத்து சேலம்பட்டி எங்க ஊருங்க. ஆத்திலே தண்ணி எடுக்கப் போன பொண்ணைப் பாம்பு கடிச்சிடுச்சிங்க.'' பெண்ணின் தகப்பனார் தாள முடியாத சோகத்துடன் கூறினார்.

''—சாயங்காலம் ஆறு மணிக்குப் போன பொண்ணு ராத்திரி எட்டு மணியாகியும் திரும்பி வரலியேன்னு பயந்து போயி ஊர் ஜனங்களக் கூட்டிக்கிட்டுப் போய்த்தேடினோம். ஆத்தோரம் உள்ள மாந்தோப்பில் விழுந்து கிடந்தா. கையிலே பாம்பு கொத்தின அடையாளம் இருந்திச்சி. அதான் ஐயாகிட்டே தூக்கிட்டு வந்தோம்.''

தாய் பதறிக் கொண்டு விவரித்தாள்.

கையை உயர்த்தி அமைதிப்படுத்திய சாமியார் வேலைக்காரனை அழைத்தார்.

''—மாதவா, பூஜை சாமான்களெல்லாம் தயாரா இருக்கா...?''

''—இருக்குது ஐயா.''

குறிப்பறிந்தவன். அது அவனுக்கு வழக்கமான, பழக்கமான காரியங்களில் ஒன்று.

எதிரே இருந்த பூஜை அறைக்குள் சென்று அமர்ந்து கொண்டார் சாமியார்.

22''X18'' அளவில் பிரேம் செய்யப்பட்ட சாமி படங்களின் வரிசைக்குக் கீழே மத்தியாக ஒரு பெரிய நாகப்பாம்பின் சிலை. மாலை அணிவிக்கப்பட்டிருந்தது. பூஜைக்குரிய தேங்காய், பழம், வெற்றிலைப் பாக்கு மற்றும் ஒரு கிண்ணம் நிறைய பசும்பால் வைக்கப்பட்டிருந்தது. இவற்றின் நடுவே ஒரு சிறு குருத்துப் பனை ஓலை.

அலை அலையாகச் சுழன்று கொண்டிருந்த சாம்பிராணிப் புகை நடுவே தியானத்தில் ஆழ்ந்திருந்த சாமியாரின் தோற்றம், ஒரு தெய்வீக பய உணர்வைத் தோற்றுவித்தது.

''—இந்தக் காலத்தில் இது ரொம்ப ஆச்சரியமுங்க.'' கூட்டத்தில் ஒருவர் கிசுகிசுத்தார்.

''—எதைச் சொல்றீங்க...?''

மற்றவர் கேள்வி.

''—சாமியார் மந்திரம் உச்சரித்ததும் கடித்த பாம்பே விரைந்து வந்து, கடிவாயிலிருந்து விஷத்தை உறிஞ்சி எடுத்துப் பால் கிண்ணத்தில் விஷத்தைக் கக்கிவிட்டுச் சென்றுவிடுவது!''

''—உண்மைதான்!''

''—ஏங்க கடித்த பாம்பு தற்செயலாய் வேறு எங்காவது இறந்து விட்டால் என்ன ஆகும்?''

''—பாம்பு இறந்துவிட்டதென்றால், அதோ பூஜையில் வைத்திருக்கிறார் பாருங்கள், குருத்துப் பனை ஓலை. அதை வைத்துக் கண்டு பிடித்துவிடுவார் சாமியார்.''

''—அது எப்படிங்க?''

''—மந்திரம் உச்சரித்து அந்தப் பனை ஓலையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கிழிப்பார். கடித்த பாம்பு விரைந்து வந்து விஷத்தை உறிஞ்சி எடுத்துவிடும். பாம்பு இறந்துவிட்டாலோ அவ்வோலையை இரண்டு துண்டாக முழுவதும் கிழிக்க முடியாது.''

''—அப்படியா...?''

''—ஆமாம். பிறகு சாமியாரே கடிபட்ட இடத்திலிருந்து தமது வாயால் விஷத்தை உறிஞ்சி எடுப்பார்.''

''—இதை முதலிலே செய்தாலென்ன? வீணாகப் பாம்பை வரவழைப்பானேன்?''

''—கடித்த பாம்பு உயிருடன் இருக்கும் போது சாமியார் வாயால் விஷத்தை எடுத்தால், அது நாக தோஷமாம்!''

''—அது சரிங்க... இங்கே வந்த பாம்பு விஷத்தை எடுக்க மறுத்துவிட்டால்...?''

''—பனை ஓலையை முழுவதும் இரண்டாகக் கிழித்து விடுவார். உடனே பாம்பு இறந்துவிடும். பின்னர் சாமியாரே விஷத்தை எடுத்துவிடுவார்.''

''—நினைக்கவே உடம்பு புல்லரிக்குதுங்க. ஆமா... இவ்வளவு கஷ்டப்பட்டு இதையெல்லாம் செய்யும் சாமியாருக்கு என்ன லாபம்? பணம் ஏதாவது?''

''—பத்துப் பைசாக் கூட வாங்கமாட்டார். எனக்குத் தெரிஞ்சி நாப்பது வருஷமா, இலவசமா எந்நேரத்திலும் மனம் கோணாமச் செஞ்சிக்கிட்டு வராரு. அவருக்கு முன்னாலே அவரு அப்பா பெரிய மிராசுதார் இந்தப் பணியைச் செஞ்சுக்கிட்டு இருந்தாராம். இலவசமாகத்தான். அவங்ககிட்டே இருக்கும் ஆஸ்தியே இன்னும் நாலு தலைமுறைக்குப் போதும்.

''—சாமியாருக்கு ஒரு மகன் இருக்காருல்ல. அவரும் இதைக் கத்துக்கிட்டு இருக்காரா?''

''—இல்லீங்க. அவரு பட்டணத்திலே படிச்சிட்டு வந்தாரு. நாகரீகமான பேர்வழி. நடத்தை கூடச் சரியில்லேன்னு கேள்வி. எப்படியோ... சாமியாரின் தன்னலமற்ற சேவையால் இப்பகுதி மக்கள் சாமியாரைக் கடவுளாகவே வணங்கி மதித்து வர்றாங்க.''

சாமியார் தியானத்திலிருந்து விழித்து விட்டார்.

''—வாசல் பக்கம் பாம்பு வருவதற்கு வழி விட்டு நில்லுங்கள்..''

ஒரு குரல்.

அனைவர் விழிகளும் பரபரப்புடன் சாமியாரை முற்றுகையிட்டன.

பூஜை அறையிலிருந்த பால் கிண்ணம் பெண்ணின் அருகே வைக்கப்பட்டது.

மந்திரம் கூறிக் கொண்டே குருத்துப் பனை ஓலையைக் கையிலெடுத்தார் சாமியார்.

சிறிது கிழித்தார்.

அனைவரும் ஆவலுடன் வாசலைப் பார்த்தனர். பத்து நிமிட மந்திரத்திற்குப் பிறகு மீண்டும் ஓலையைக் கிழித்தார்.

வாசலில்...

பாம்பு வரவில்லை...!

சாமியாருக்குக் குளிரிலும் வியர்த்தது.

''—பாம்பு இறந்திருக்கலாம்!'' ஒருவர் விமர்சனம்.

''—அப்படியானால் ஓலை முழுவதும் கிழியாமல் இருக்க வேண்டுமே...?'' இன்னொருவர் பதில்.

சாமியார் இன்னும் சிறிது கிழித்தார். ஓலை கிழிபட்டது, முழுவதுமாக!

பாம்பு வரவேயில்லை.

ஐம்பது வருட அனுபவத்தில், சாமியாருக்கு முதல் முறையாகக் குழப்பமேற்பட்டது.

ஐந்து நிமிடம் சிலையாக அமர்ந்திருந்தார்.

திடீரெனத் துள்ளி எழுந்தார்.

பெண்ணை நெருங்கினார்.

கடிவாயை மீண்டும் பரிசோதித்தார்.

ஏதோ முடிவிற்கு வந்தவராய், விரைந்து சென்று பூஜை அறையிலிருந்த வெற்றிலைகளில் மூன்றை எடுத்தார்.

கூட்டத்தினர் சிலைகளாயிருந்தனர்.

அரை மணி நேரம் மந்திரம் கூறி முதல் வெற்றிலைக் காம்பைக் கிள்ளி நாக சிலை மீது வீசினார்.

''—அய்யோ...''

பெரும் கூக்குரல் எழுந்தது.

சாமியார் பங்களாவின் மாடியிலிருந்து.

ஆண் குரல்.

இரண்டாம் வெற்றிலைக் காம்பைக் கிள்ளி எறிந்தார்.

''ஆ... அய்யோ...!''

மீண்டும் அதே குரல்...

தொடர்ந்து தடதடவென்ற சப்தம்.

திடீர்க் கூக்குரலால் திகிலடைந்து போயிருந்த கூட்டத்தினர், மயிர்க்கால்கள் சிலிர்க்க மாடியைப் பார்த்து நின்றிருந்தனர்.

அங்கே...

சாமியாரின் மகன் பாம்பைப் போலவே உருண்டு நெளிந்து கொண்டிருந்தான்.

அனைவரும் பேயறைந்தாற்போல் நின்று கொண்டிருந்தனர்.

சாமியார் முகத்தில் எவ்வித சலனமுமில்லை. உதடுகள் மட்டும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தன.

மூன்றாவது வெற்றிலைக் காம்பையும் ஆவேசமாகக் கிள்ளி எறிந்தார்.

அவன் மாடிப்படிகளில் மிக விரைவாக நெளிந்து, ஊர்ந்து, இறங்கிக் கிடத்தப்பட்டிருந்த பெண்ணின் அருகே வந்து, கடிவாயில் தனது வாயை வைத்து விஷத்தை உறிஞ்சினான்.




எல்லோரும் பெரிய மனிதர்களுடன் கைகுலுக்க விரும்புவது இயல்பு. இங்கிலாந்து அரசி சுமார் 1.5 லட்சம் தடவைகள் கைகுலுக்கியதாகக் கூறப்படுகிறது.

கைகுலுக்கலில் சாதனை புரிந்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருப்பவர் அட்லாண்டிக் நகரத் தந்தை ஜோசப் லஸாரோ. அவர் 3.7.1977 அன்று 11 மணி 5 நிமிட நேரத்தில் 11,030 பேர்களுடன் கைகுலுக்கியுள்ளார்!

—காயத்ரி.


# வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர். பற்சிதைவை எதிர்த்திடுவீர்.




# கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர் !

தவறாமல் கோல்கேட் உபயோகிப்பதால்,
உங்கள் குடும்பத்தினரின் பற்களுக்கு ஆரோக்கியம், வலிமை, புத்துணர்ச்சி
தரும் தூய சுவாசம் கிடைக்கிறது.
இதுவே கோல்கேட்டின் பாதுகாப்பு வளையம்.


நீங்கள் பல் துலக்கும் ஒவ்வொரு முறையும்
கோல்கேட்டின் நம்பகமான பார்முலா
செயல்படுவது எப்படி என்றால்...



உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே
சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும்,
பற்சிதைவையும் உண்டாக்கும்
பாக்டீரியாக்கள் வளருகின்றன.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயல்புரியும்
நுரை ஆழ ஊடுருவிச் சென்று,
துர்நாற்றத்தை ஏற்படுத்தும் உணவுத்
துணுக்குகளையும் சிதைவு ஏற்படுத்தும்
பாக்டீரியாக்களையும் அகற்றுகிறது.



முறையாக கோல்கேட் கொண்டு பல்
துலக்குவதால் புத்துணர்ச்சி தரும்
தூய சுவாசமும், வலிமை மிகுந்த
ஆரோக்கியமும் தருகிறது.

ஒவ்வொரு முறையும் சாப்பிட்ட உடன்,
உங்கள் குடும்பத்தினர் தவறாமல் கோல்கேட்
கொண்டு பல் துலக்கட்டும்.
வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்.
கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தை பெற்றிடுவீர்.




GK&E B84.55 Tam

*கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும்*
*பெப்பர்மெண்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது !*

# அமானுஷ்ய அனுபவம்



**போட்டி 42**

அமானுஷ்யக் கதைகள், திரைப்படங்கள், இப்போதைய ஃபாஷன், இவற்றில் ஏதேனும் உண்மை உண்டா? உங்களுக்கோ, உங்கள் நண்பருக்கோ ஏற்பட்டிருக்கக் கூடிய அமானுஷ்ய அனுபவத்தைக் கீழே வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப்பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு. தவிர குலுக்கல் முறையில் ஒருவருக்குப் பட்டுப் புடைவை. உறையின்மேல் ''அமானுஷ்ய அனுபவம்'' என்று குறிப்பிடுதல் அவசியம்.

முடிவு தேதி: 4.3.85

# பட்டுப் புடைவை பரிசுத் திட்டம்

இன்னும் 11 பட்டுப் புடைவைகளே பாக்கி. ஒன்றைப் பெற்றே தீருவது என்ற வைராக்கியத்துடன் வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறவும்.

என் பெயர்:..........................

விலாசம்:..........................

..........................

அவள் சிறிது சிறிதாக மஞ்சள் நிறமடைந்தாள்.

அருகிலிருந்த பால் கிண்ணத்தில் விஷத்தைத் துப்பினான்.

பால் நீல நிறமாகியது.

பத்து நிமிட மயான அமைதிக்குப் பின்னர், அவள் தயங்கித் தயங்கி எழுந்தாள். பாவாடை தாவணியைச் சரிசெய்துகொண்டாள்.

அவனும் எழுந்தான்.

கூட்டத்தினர் சாமியார் கால்களில் விழுந்தனர்.

அனைவரையும் ஆசீர்வதித்தார்.

தம் மகனைப் பார்த்தார். என்ன நடந்தது என்று கண்ணாலே கேட்டார்.

அவன் உடல் இன்னும் நடுங்கிக்கொண்டிருந்தது.

''—சேலம்பட்டியைச் சேர்ந்த இந்தப் பொண்ணு மீது எனக்கு ரொம்ப ஆசை. அவ என்னை காதலிச்சா. கல்யாணமும் செய்துக்க விரும்பினா. ஆனால், நான் அவளை ஆசை நாயகியா வச்சுக்கத்தான் நினைச்சேன். அதுக்கு அவ சம்மதிக்கலே. இன்னைக்கி சாயங்காலம் நாங்க வழக்கமா சந்திக்கும் மாந்தோப்பிலே வச்சி அவகிட்டே பலாத்காரமா நடந்துக்கிட்டேன். இதனாலே வெறுப்படைஞ்ச அவ ஊரிலே போயி சொல்லப் போவதாப் பயமுறுத்தினா. அதனாலே ஆத்திரமடைஞ்ச நான் நெருஞ்சி முள்ளில் விஷ மூலிகையைத் தேச்சி அவ உள்ளங்கை மேல்புறத்தில் குத்திவிட்டு ஓடி வந்துட்டேன். முள் குத்தின இடத்தை யார் பார்த்தாலும் பாம்பு கொத்திச் செத்துப் போயிட்டதாகத்தான் நினைப்பாங்க!''

''—நானும் முதல்ல அப்படித்தாண்டா நினைச்சேன். பாம்பு வரலேங்கிறதால்தான் சந்தேகப்பட்டுக் கையைச் சோதித்துப் பார்த்து, பாம்பு கொத்தலே, வேறு ஏதோ சூழ்ச்சின்னு தெரிஞ்சிக்கிட்டேன்!''

சாமியார், தாடியை உற்சாகமாகத் தடவிவிட்டுக் கொண்டார்.

''—ஐயா.. ஒங்க புள்ளை பாம்பு மாதிரியே வந்து விஷத்தை எடுத்தது ஆச்சர்யமா இருக்கு.''

''—உண்மைதான். நாக சத்தியத்தின் மகிமை அது. கடுமையான மந்திரத்தை உச்சரித்ததால், பாம்பு கொத்தியதைப் போன்று காயம் ஏற்படுத்திக் கொலை செய்ய முயன்றவனை நாக சத்தியம் கட்டுப்படுத்தி பாம்பைப் போலவே நெளிந்து வரச் செய்து விஷத்தை எடுத்து விட்டது!''

''எப்படியோ... எம்பொண்ணைக் காப்பாத்திட்டீங்க ஐயா,'' என்றார் பெண்ணின் தகப்பனார்.

''—என் மருமகளை அல்லவா காப்பாத்தியிருக்கேன்!''

சாமியார் சிரித்தார்.

சாமியாருக்கு இன்னும் ஒரு பல் கூட விழவில்லையே... எப்படி?



கற்பனை பல சிறகடிக்க
இளமை ஊஞ்சலாடும் அழகி.
அவள் நெஞ்சைக் கவர்ந்தவை பல.
மெல்லத் தவழ்ந்து செல்லும் நீரோடை.
செல்லமாக வீசும் தென்றல்.
உள்ளம் கவர்ந்த கட்டழகன்.
கொள்ளை அழகு மலர்கள்.
பளபளப்பான நீண்ட கூந்தல்.
அக்கூந்தலுக்கு
வி.வி.டி.தேங்காய் எண்ணெய்...

V.V.D

**வி.வி.டி. தேங்காய் எண்ணெய்**

**இயற்கைக் கூந்தலின் இளமை ரகசியம்**




V.V.D

EP-VVD-6/84

## 6

ஆராமுதன் டாஜ் ஓட்டலை அடையும் போது மணி நாலேகால். 307—ம் நம்பர் அறைக்கு வெளியே நின்றார். மின்சாரப் பொத்தானை அழுத்துவதா அல்லது கதவு திறக்கும் வரை காத்திருப்பதா என்று ஒரு சில நிமிடங்கள் யோசித்தார். டெல்லி விமானம் ஆறு மணிக்கு. ரிப்போர்ட்டிங் டைம் நாலரை. ஆனால் தாரக்ராமைப் போன்றவர்கள் ஐந்து ஐந்தரைக்குப் போனால் கூடப் போதும்...

கதவு திறக்கவில்லை.

எதற்கு நேற்று இவர் டின்னர் கொடுத்தார்? அரவிந்தன் கல்லுளிமங்கன். பல்லை உடைத்தாலும் சொல்ல மாட்டான். தாரக்ராமிடம் கேட்கலாம் என்றால் தைரியமில்லை. எல்லாம் உப்பிலியப்பன் கையில் இருக்கிறது. இருக்கட்டும்.

சாவித்துவாரம் வழியாகப் பார்த்தார். ஒன்றும் தெரியவில்லை. கடிகாரம் நாலரையை அறிவிக்க, மின்சாரப் பித்தானை அழுத்தினார்.

மறுநிமிஷம் கதவு திறந்தது.

தாரக்ராம் வெறும் வேட்டி, பனியனுடன் காட்சி அளித்தார்.

''குட் மார்னிங் சார்.''

''குட்மார்னிங்... உள்ளே வாங்க ஆராமுதன்... கரெக்டா நாலு மணிக்கு நான் போன் பண்ணினேன்... இப்பத்தான் போனார்னு உங்க மிஸஸ் சொன்னா...''

''எதுக்குப் பாவம் நீங்க போன் பண்ணணும்... நான் விடிய விடியத் தூங்கலே... நாலு மணிக்கு முன்னாலேயே ரெடியாயிட்டேன்...''





பி.வி.ஆர்.

# ஆகாச கங்கை

''நான் டெல்லி போகலே... லெவன் தர்ட்டி ஃப்ளைட்லே பாம்பே போறேன்... அங்கேயிருந்து ஈவினிங் ஃப்ளைட்...''

''சரி. புக் பண்ணிடறேன்...''

''வேண்டாம். எல்லாம் நானே ஓட்டல் மூலமா ஏற்பாடு செய்தாச்சு...''


''சரி...''

''எனக்குக் கொஞ்சம் பேசணும் உங்ககிட்டே...

''முன்னே ஒரு தடவை நீங்க அரவிந்தனைப் பத்தி ஒரு சமாச்சாரம் சொன்னேன்...''

ஆராமுதன் மண்டையை உடைத்துக் கொண்டார். ஒவ்வொரு சிப்பந்தியைப்பற்றியும் ஏதாவது கூறி, சேர்மனுடைய மனத்துக்குத் திருப்தியைத் தேடித் தருவதையே லட்சியமாகக் கொண்டிருக்கும் அவர் அரவிந்தனைப் பற்றி என்னவெல்லாமோ சொல்லியிருக்கிறார். எதை இவர் இப்போது குறிப்பிடுகிறார்?

''என்ன சொன்னேன்னு கொஞ்சம் ஒரு கோடி காட்டுங்க சார்...''



''யாரோ ஒரு வக்கீல் பொண்ணு'' என்று தாரக்ராம் இழுத்தார்.

''ஹாங்... யெஸ்... வசுமதி... அவளை அரவிந்தன் லவ் பண்றான்... சில நாள் ஆபீஸ் வாசல்லே வந்து நிப்பா... அஞ்சரை ஆனதும் இவன் அவளைத் தன்னோட காரிலே போட்டுண்டு போவான்... சினிமா பீச்சுன்னெல்லாம் போறதாக் கேள்வி...''

''ஜமாய்க்கட்டும்... சிறுசுகள்... அதுசரி, வசுமதி வக்கீல்னு, யார்கிட்டேயாவது ஜூனியரா இருக்காளா... இல்லே... இல்லே தனியா...''

''நோ, நோ.. ஒரு ஜூனியர்தான்...''

''பெரிய வக்கீல்ட்டேயா, இல்லே சாதாரண ஸீனியர் ஒருத்தர்ட்டேயா?''

''கம்பெனி லா அதாரிட்டி சார் அவர்... பேர் கே. ஜி. கே.''

''யூ மீன கே. ஜி. கிருஷ்ணமூர்த்தி?'' என்ற தாரக்ராம், ''அவர் கூட ரெண்டு மூணு வருஷம் முன்னே என் கம்பெனி கேஸ் ஒண்ணை ஹாண்டில் பண்ணியிருக்காரே!'' என்றார்.

''அவரேதான்... சாட்சாத் அவரேதான்...''

''ஓய் ஆராமுதன்... நம்ம வீட்டு சர்க்கரைப் பொங்கல் சாப்பிட்டு ரொம்ப நாள் ஆறது... நீராக ஆக்பரும் பண்ண மாட்டேங்கறேள்... என்ன ருசி... பச்சைக் கற்பூர வாசனை... அப்படியே அள்ளிண்டு போகும்... நெய் சொட்டச் சொட்ட முந்திரியும் திராட்சைப்பழமுமா...''

தாரக்ராம் குரல் நெகிழ்ந்தது.

மறுவினாடி ஆராமுதன் அமுதாவுக்குப் போன் பண்ணினார். நிமிடத்துக்கு நூற்றிருபது வார்த்தைகள் என்ற கணக்கில் பேசினார்.

பிறகு அவர் முன் வந்து நின்றார்.

''சார், நீங்க தப்பா எடுத்துக்க மாட்டேள்னு என் வீட்டிலே சாப்பிடலாம்... இதை நான் பெரும் பாக்கியமா எண்ணிப் பெருமாளுக்கு நன்றி சொல்லுவேன்... வெண் பொங்கலும் தயாராறது... ஒம்பது மணிக்குச் சுடச் சுட இருக்கும். சாப்பிட்டு விட்டு ஓட்டலுக்கு வந்து அப்படியே ஏர்போர்ட்டுக்குப் போகச் சரியா இருக்கும்... முடியாதுன்னு சொல்லிடாதீங்கோ.''

''கரெக்டா ஒன்பது மணிக்கு நான் வரேன்...''

''ரொம்ப தாங்க்ஸ் சார்... நான் வந்து பிக் அப் பண்ணிக்கிறேன்...''

''வேண்டாம்... எனக்கு ஒரு சிநேகிதன் வீட்லே ஒரு சின்ன வேலை இருக்கு. அதை

முடிச்சுட்டு அங்கிருந்து வரேன்...''

''ஆபீஸ் வண்டி நிக்கறது...''

''அவனைப் போகச் சொல்லுங்க... நான் பார்த்துக்கறேன்...''

''ரொம்ப சந்தோஷம் சார்... நீங்க என் வீட்டுப்படி மிதிக்கறது, பெருமாளே வீட்டுக்குள்ளே அடி எடுத்து வைக்கிற மாதிரி இருக்கு...''

தாரக்ராம் சிரித்தார்.

''சார், நான் அந்தப் பெண்ணைப் பத்தி முழு விவரமும் சொல்லலே சார்...''

''சொல்லுங்களேன்... நான் தடுக்கமாட்டேன்...''

''வசுமதி பாக்கறதுக்கு அழகா இருப்பா.. மாநிறம் தான்... ஆனா லட்சணம்... ரெண்டு அக்கா... ரெண்டு பேரும் வேலையிலே இருக்கா... இன்னும் கலியாணம் ஆகலே... அப்பா கஸ்டம்ஸ்லே ஒரு சாதாரண வேலையிலிருந்து ரிடையராகி இந்திரா நகர்லே ஒரு ஃப்ளாட்லே இருக்கார். வசுமதிக்கு ஒரு தங்கையும், ரெண்டு தம்பியும் வேறே...''

''அம்மா இல்லியா?''

''இருக்கா... மொத்தம் எட்டு பேர்... டூ பெட்ரூம்... ஃப்ளாட்லே இருக்கார்...''

''சாதாரண மிடில் கிளாஸ் பாவம்...!'' என்றார். பிறகு எங்கேயோ பார்த்துக் கொண்டு, அக்கறை இல்லாதவரைப் போல, ''ஏன் அரவிந்தன் அவளை இன்னும் கலியாணம் பண்ணிக் கொள்ளவில்லே? என்ன ப்ராப்ளம்...?'' என்று கேட்டார்.

''நாம தீர்த்து வைக்க முடியாத பிராப்ளம் சார்... ரெண்டு பேர் கலியாணத்துக்கு நிக்கறப்ப மூணாவது பெண் எப்படி முந்திக்க முடியும்?''

''ஏன் என்ன தப்பு...? இவளுக்கு ஒரு நல்ல பிள்ளை கெடைச்சா, அக்காக்காரிகளே வழிவிட வேண்டாமோ...?''

''அவா வழி விட்டாலும் அப்பா, அம்மா குறுக்கே நிற்பார்களே... ஆனா அரவிந்தன் ரொம்ப ஹோப்ஃபுல்லா இருக்கான், ஒரு வருஷத்திலே அவா ரெண்டு பேருக்கும் கலியாணம் ஆயிடும்னு...''

''மணி அஞ்சு அடிச்சு அஞ்சு நிமிஷம்..''

''அப்ப நான் வரேன் சார்...''

ஆராமுதன் மெதுவாக நடந்து வெளியேறினார். சேர்மன் சர்க்கரைப் பொங்கல் சாப்பிடும் போது, கான்பூர் மாற்றல் நிகழக் கூடாது என்று தாழ்மையுடன் அவரைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

* * * * *

சஷ்டிக் கவசத்தின் கடைசி அடிகளை உதிர்த்துக் கொண்டு கே. ஜி. கே. போர்ட்டிகோ படிக்கு வரவும், ஒரு வெளிறிய வெள்ளை மெர்ஸிடீஸ் தேன் வழிவதுபோல ஊர்ந்து வந்து நிற்கவும் சரியாக இருந்தன.

கே. ஜி. கே. வுக்கு முதலில் யார் என்று புரியவில்லை. வண்டியின் நெம்பர் பிளேட்டில் 'T' என்கிற எழுத்து அவர் கண்ணில் பட்டதால், ஒரு பெரிய மனிதர், பெரிய டூரிஸ்ட் காரில் அவரைப் பார்க்க வருகிறார் என்பதை ஊகித்துக் கொண்டார்.

தாரக்ராம் ஜரிகைக்கரை வேட்டியும் சில்க் ஜிப்பாவுமாக இறங்கிய போதுங்கூட அடையாளம் தெரியவில்லை. ஆனால் இவரை இதற்கு முன் எப்போதோ எங்கேயோ பார்த்திருப்பதான உணர்வு எழுந்தது.

கே. ஜி. கே. காத்திருந்தார்.

தாரக்ராம் மெதுவாக இறங்கி, நிற்கும் அட்வகேட்டைப் பார்த்தவராய் நடந்து, அருகே வந்து, ''நமஸ்காரம், லாயர்... என்னை மறந்து போயிட்ட மாதிரி நிக்கறேளே... தாரக்ராம் ஆஃப் பாம்பே!'' என்றார்.

அவ்வளவுதான்.

''வாங்கோ... வாங்கோ... பார்த்து எத்தனை நாளாச்சு... சே, வருஷமாச்சு... அந்த எம். ஆர். டி. பி. கேஸின் போது ஒரே தடவை பார்த்தது! உள்ளே வாங்கோ...''

இருவரும் அட்வகேட்டின் ஆபீஸ் அறையை அடைந்தார்கள்.

''கம்பெனி லா டீல் பண்ற லாயர்களிலே விகவனாத சாஸ்திரிக்கு அப்புறம் நீங்க தான்னு மெட்ராஸ் பூரா மட்டுமில்லாம டெல்லியிலும் பேசிக்கிறா, கே.ஜி.கே...''

''சாஸ்திரி எங்கே, நான் எங்கே... உம்... எல்லாம் முருகன் அருள்...''

''இப்ப நான் ரெண்டு விஷயமா வந்தேன்...லெவன் தர்ட்டி ஃப்ளைட்லே பாம்பே போகணும்...''

''விஷயத்தைச் சொல்லுங்கோ.''

''என்னை மன்னிச்சுடுங்கோ... மேட்டர் கான்ஃபிடென்ஷியல்...''

''சரி... புரியறது...''

''மொதல் விஷயம்... என் கம்பெனிக்கு ஒரு பெரிய லாயரை ரீடைனரா வைச்சுக்க ஆசைப்படறேன்... பாம்பே ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட், இங்கே மெட்ராஸ்லே எல்லாம் அப்பப்ப ஏதானும் வரலாம்... உங்களாலே முடியுமா?''

''முடியாதுன்னு சொல்லிட்டா அவன் அட்வகேட்டே இல்லே...''

''முப்பதாயிரம் ரீடையனர் ஃபீயா அனுப்பிடறேன்... அப்புறம் கம்பெனிக் கேஸ்னு வர்றப்ப நீங்க உங்க ஃபீஸைத் தகுந்தாப்படி வாங்கிக்கலாம்... என்ன சொல்றேள்...?''

''கரும்பு திங்கக் கூலி கேட்பாளா?''

''அட்வகேட் அதுக்கும் கேட்பான்னு எனக்கு ஒரு நினைப்பு!''

இருவரும் கலகலவென்று சிரித்தார்கள்.

அப்புறம் இரண்டாவது விஷயம். இது கொஞ்சம் பெர்ஸனல்... உங்க உதவி வேண்டும்...

''ஃபீஸ் கெடையாதுன்னு சொல்றேன்!'' என்றார் கே. ஜி. கே.

''ஆனா நீங்களும், உங்க ஒய்ஃபும் என் செலவிலே பிளேன்லே பாம்பே வருவேள்... கல்யாணச் சாப்பாடு சாப்பிடுவேள்...''

''விஷயத்துக்கு வாங்கோ...''

''என் கம்பெனியிலே அரவிந்தன், அரவிந்தன்னு ஒரு என்ஜினியர் இருக்கான்...''




"ட்ரபிள் கொடுக்கிறானா?"

"நோ, நோ... ஆன் தி அதர் ஹாண்ட் ரொம்ப நல்லவன். கெட்டிக்காரன்... அவன் என்னோட டியரஸ்ட் ஃப்ரண்டோட பிள்ளை.. ஃப்ரண்ட் காலமாயாச்சு..."

"உம்... சரி..."

"அவனுக்கு நான் என் பெண்ணைக் கொடுக்க ஆசைப்படறேன்..."

"சந்தோஷம்..."

"ஏன் தெரியுமா? என் பெண் கொஞ்சம் அவாதி... ஸ்மால் மெண்ட்டல் பிராப்ளம்... அரவிந்தன் மாதிரி ஒருத்தன் ஹஸ்பெண்டா வாய்ச்சா, நாளடைவிலே அவ எல்லாப் பெண்களையும் மாதிரி ஆயிடுவான்னு படறது... ஷி வாண்ட்ஸ் ஸிம்பதி, கைண்ட்னஸ், அண்டர் ஸ்டாண்டிங் அண்ட் லாஸ்ட்லி ப்ரொட்டக்ஷன்."

"இதை எல்லாம் இந்த அரவிந்தன்ட்டேந்து கெடைக்கும்னு நீங்க நம்பறேள், இல்லியா?"

"எக்ஸாக்ட்லி."

"அவன்கிட்டே பேசினேளா?"

"ஷ்யூர்... ஒளிவு மறைவு இல்லாமப் பேசினேன்..."

"என்ன சொல்றான்...?"

"பிடி கொடுத்துப் பேசலே. சரின்னும் சொல்லலே... மாட்டேன்னும் எழுந்திருக்கலே..."

"சரி, நான் என்ன செய்யணும்?"

"உங்களோட பல ஜூனியர்களிலே வசுமதின்னு ஒரு பெண் இருக்கா, இல்லியா?"

"ஆமாம். ரொம்பக் கெட்டிக்காரப் பொண்ணு... அரவிந்தனுக்கு அவ சொந்தமா?"

"அவளைச் சொந்தமாக்கிக்க அவன் பார்க்கறான்... ரெண்டு பேரும் பழகிண்டிருக்கா."

"அப்படியா... இன்னிக்கு மார்னிங் பிளேன்லே அவ டெல்லி போயிருக்கா... சுப்ரீம் கோர்ட்லே ஒரு சின்ன ஒர்க்... அவ இதைச் சொல்லவேயில்லையே?"

தாரக்ராம் சிரித்தார்.

"ஒரு பெண் ஒருவனை லவ் பண்ணினா எல்லார்ட்டையும் சொல்லிண்டிருப்பாளா...?"

"ஓ.கே.. அதுவும் சரிதான்... நான் எங்கே இதிலே வந்தேன்...?"

"வசுமதி வழி விட்டாத்தான் என் பெண்ணுக்கு வழி கெடைக்கும்."

"அவளுக்கு அட்வைஸ் பண்ணச் சொல்றேளா? அப்படியே அவ கேட்டு ஒதுங்கினாலும் அரவிந்தன் உங்க பெண்ணைக் கலியாணம் செய்துப்பான்னு என்ன நிச்சயம், தாரக்ராம்?"

"குட் பாயிண்ட் கே.ஜி.கே! வசுமதி வழியை மட்டும் விட்டாப் போதாது... என் பெண்ணை அரவிந்தன் கலியாணம் பண்ணிக்கறதுதான் சிறந்ததுன்னு அவ அவன்கிட்டே சொல்லணும்... இவ சொன்னா அவன் கேட்பான்னு எனக்கு ஒரு நம்பிக்கை."

"நாம ரெண்டு பேரும் போகாத ஊருக்கு வழிதேடறோமோன்னு படறது... வசுமதி பச்சைக் குழந்தை இல்லியே... என் சேம்பர்லை விட்டே போனாலும் போயிடுவா."

"நீங்க மனசு வைச்சா, நடக்காத காரியமா, கே.ஜி.கே...?"

"முயற்சி பண்றேன்... முருகன் என்ன நெனைக்கிறானோ? வசுமதி ரொம்ப இன்டிபெண்டெண்ட் டைப்... பார்க்கறேன்..."

"நான் வரேன் கே.ஜி.கே... நாளைக்கு பாம்பேயிலிருந்து உங்களுக்கு லெட்டரும் செக்கும் வரும்... தயவு பண்ணி இரண்டு விஷயங்களையும் முடிச்சுப் போடாதீங்க... இது வேறு, அது வேறு..."

கே. ஜி. கே. சிரித்தார்.

"எனக்குத் தெரியாதா என்ன? ரெண்டும் வெவ்வேறேதான்... ரீடையனர் வேறே... உங்க பெண் கலியாணம் வேறே... ஒண்ணு லாயர் தொழில்... இன்னொண்ணு... இன்னொண்ணு... அதை என்ன தொழில்னு சொல்லலாம்?"

தாரக்ராமுக்குச் 'சுருக்'கென்று பட்டது. தேவைக்கு அதிகமாகத் தாம் சுவாதீனமாக நடந்து கொண்டுவிட்டதன் விளைவை அவர் தாங்க நேர்ந்து விட்டதே! மனத்தின் கோபத்தையும், வேதனையையும் வெளிக்காட்டாமல் புன்னகையுடன் எழுந்தார்.

என்னதான் கே. ஜி.கே. பொடி வைத்துப் பேசினாலும், நிச்சயமாக அவர் தமக்கு உதவி செய்வார் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டாயிற்று.

அந்த வாரக் கடைசியில் தாரக்ராம் சற்றும் எதிர்பாரா வண்ணம் டெலிபோனில் ஒரு தகவல் வந்தது. உடனடியாக ராஜமாளைத் தயார் பண்ணின அவர் மாயாவையும் கவனிக்க விரைந்தார்.

(தொடரும்)

### லாட்டரியை ஒழியுங்கள்

சீட்டின் விலைக்கும் பரிசுத் தொகைக்கும் ஒரு வரம்பில்லாமல் உயர்ந்து கொண்டிருக்கும் லாட்டரிச் சீட்டை ஒழிக்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எல். என். சுப்ரமணியன், தல்லாகுளம்.

### வேண்டாம் கிச்சன் காபினெட்

'கிச்சன் காபினட்' ஒன்று உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

நா. ஆறுமுகம், பரமகுடி.

### பாரதி கனவை நனவாக்குங்கள்

நேர்மையும், அனுபவமும் மிக்க மாதர் நல சமூக சேவகியை அமைச்சராக்கி வரதட்சணைக் கொடுமைச் சாவுகளைத் தடுத்து, பெண்களின் நிலை குறித்து பாரதி கண்ட கனவுகள் நனவாகும்படி செய்யவேண்டும்.

கோமதி சுப்புகிருஷ்ணன், தும்கூர்.

### படிக்க வேண்டும், மதிக்க வேண்டும்

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

எனவே உங்களுக்குச் சரியான எதிர்க்கட்சி தற்சமயம் பத்திரிகைகளே. எனவே அவர்களுக்கு அதிக சுதந்திரம் தாருங்கள். அவற்றைப் படித்தும், மதித்தும் செயல்படுங்கள்.

வி. திரிபுரசுந்தரி, சென்னை—4.

### அரசியலில் ஆன்மீகம்

மகாத்மா காந்தி பிரார்த்தனையுடன் கூடிய ஆன்மீகத்தையும், அரசியலையும் ஒருங்கிணைத்துப் பின்பற்றினார். பின்னால் வந்தவர்கள் ஆன்மீகத்தை மறந்ததனால்தான் ஊழல் பெருகிற்று. அதனால் ஆன்மீகத்துடன் கூடிய அரசியலுக்கு வழி வகுக்கவேண்டும்.

ஆர். மோஹன்ராவ், சென்னை—5.

யார் சொன்னார்கள் என்பது முக்கியமில்லை, என்ன சொன்னார்கள் என்று கவனிக்க வேண்டும்.

கோ. இறைமணி, சேலம்—9.

### துயர் தீருங்கள்

அயல் நாட்டு விவகாரம் என்று அலட்சியமாய் இராமல் இலங்கைத் தமிழர்களின் பிரச்னைக்கு விரைவில் ஒரு முடிவு காணுங்கள்.

மீனு கண்ணன், கும்பகோணம்.

### தாட்சண்யம் பாராமல்....

தமிழ்நாட்டில் அ. இ. அ. தி. மு. க. விற்கு எதிர்க்கட்சியாகச் செயல்பட வேண்டிய நிலைமை இந்திரா காங்கிரசுக்கு ஏற்பட்டுள்ளது. தோழமைக் கட்சி எனப் பார்க்காமல் ஆளுங்கட்சியின் குற்றங்குறைகளைச் சுட்டிக் காட்டி நல்ல எதிர்க்கட்சியாகச் செயல்படுங்கள்.

கோவை. தங்கபாரதி, கோவை.



### விற்பனை வரியை சீர் செய்யுங்கள்

பல முனை விற்பனை வரி நாடு முழுவதும் வியாபித்திருப்பதால் பொருள்களின் விலை உயர்வு, ஊழல், லஞ்சம் இவை அடி மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை விரவியுள்ளன. நாடு முழுமைக்கும் ஒரு முனை விற்பனை வரிச் சட்டத்திற்கு வகை செய்யவேண்டும்.

ஏ. எஸ். ரவீந்திரன், போடிநாயக்கனூர்.

# ஒரு அழைப்பு



### புண்ணியத்தைத் தேடி...

மூதறிஞர் ராஜாஜி வற்புறுத்திக் கூறியது போல் ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக மாற்ற அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைத்தால், இந்தியாவின் ஒற்றுமைக்கு அஸ்திவாரம் இட்ட புண்ணியம் கிடைக்கும்.

**ந. தேனம்மாள், தூத்துக்குடி—8.**

### தொழிற் கல்விக்கு முக்கியத்துவம்

மெக்காலே விட்டுச்சென்ற கல்வி முறையை மாற்றி, ஒவ்வொரு இளைஞனும் அரசிடம் வேலை வாய்ப்பை எதிர்பார்க்காமல் சுயமாகத் தொழில் செய்து வருவாய் தேடிக் கொள்ளும் வகையில் கல்வித் திட்டத்தை மாற்றுங்கள்.

**கிரிஜா, சென்னை—82.**

### லஞ்சப் பேயை விரட்ட...

சுதந்திர பாரதத்தில் எந்தப் பிரஜையும் சுதந்திரமாக வாழ முடியவில்லை. பிறந்தது முதல் எல்லாக் காரியங்களுக்கும் அரசாங்க அதிகாரிகளை நம்பித்தான் வாழ வேண்டியுள்ளது. ஆகவே, லஞ்சம் கேட்கும் நச்சுப் பழக்கம் பெருகியுள்ளது. சட்டங்களைத் தளர்த்தி அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைத்தால் இத்தொல்லை மெல்ல மறையும்.

**த. இராமமூர்த்தி, சேலம்.**

### ஒரு பிரகாசமான கனவு

அகில இந்திய ரேடியோவையும், தொலைக்காட்சியையும் சுதந்திர நிறுவனங்களாக்குங்கள்.

**இரா. அரங்கநாதன், வடமலைக்குறிச்சி.**

### நடுத்தர வர்க்கத்தைக் காப்பாற்ற

மேலேயும் போக முடியாமல் கீழேயும் இறங்க முடியாமல் இருக்கும் எங்களைப் போன்ற நடுத்தர வர்க்கத்தினரின் தவிப்பை நீக்க வருமானவரி மற்றும் சி.டி.எஸ். சலுகையைக் காண்பிக்கவும்.

**திருமதி சுவர்ணம் சந்தானம்,**
**பெங்களூர்—3.**

### வேரோடு களைய வேண்டும்

இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டுமானால் அழிவு சக்தியாகிய கறுப்புப் பணத்தை முற்றிலும் ஒழிக்க வேண்டும். இதற்கேற்ற பொருளாதாரக் கொள்கையை உருவாக்க வேண்டும்.

**எம். பொன்னுசாமி, மதுரை—1.**

### பின் தங்கியவர் பட்டியலை...

குறிப்பிட்ட வகுப்பினர் மட்டும் பின்தங்கியவர் என்று குறிப்பிடுவதைவிடப் பொருளாதார நிலையில் மிகப் பின் தங்கியிருப்பவர்கள் எந்த வகுப்பினரானாலும் அவர்களைப் பின் தங்கியவர் பட்டியலில் சேர்ப்பது இன்றியமையாதது. புதுப் பிரதமர் செய்வாரா?

**திருமதி சந்திரப் பிரபா, மதுரை—1**

→ வாசகர் பங்கு

### அறிவுக் களஞ்சியம்

மால்கம் ஆதிசேஷையா, பால்கிவாலா, இரா. செழியன் போன்ற திறமையும், வாய்மையும் உள்ள பல் துறை அறிஞர்களின் Brain Trust அமைத்து அந்த அறிவுக் களஞ்சியத்தின் சேமிப்பைக் கொண்டு ஆட்சி நடத்த வேண்டும். நாட்டிற்கும், பிரதமருக்கும் எதிர்காலம் ஒளிமயமாக அமையும்.

**ஜே. சரவணன், திருப்பூர்—4.**

### அரசாங்க வேலை அல்வா இல்லை

எவருமே இன்றியமையாதவரல்ல என்கிற நிலையை அரசாங்க ஊழியர்களிடையே ஏற்படுத்தி நம் அரசு அலுவலகங்களில் நிலவும் மெத்தனத்துக்கும், சோம்பலுக்கும் முடிவு கட்டுங்கள். அரசு வேலையில் இருப்பவரை எளிதில் வேலை நீக்கம் செய்ய முடியாது என்பதால்தானே ஊழியர்களிடையே அலட்சியம். இதை மாற்றித் 'திறமையுடன் செயல்படாவிட்டால் வேலை நீக்கம்' என்று சட்டம் பிறப்பியுங்களேன்.

**வி. என். சுப்பாராவ், சென்னை—24.**

### ஒரு குடும்பம் ஒரு வேலை

ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்காவது வேலை வாய்ப்புக் கிடைக்க ஏற்ற வகையில் பொருளாதார, தொழில் கொள்கைகளை மாற்றி அமையுங்கள்.

**சகுந்தலா ராவ், செகந்தராபாத்—94.**

### புதிய சட்டம்

பொது இடங்களை அசுத்தப்படுத்துவோருக்கு அபராதம் விதித்துச் சுற்றுப்புறத் தூய்மையை உருவாக்க வேண்டும்.

**பாபு, சென்னை—4.**

### அன்பால் வெல்லுங்கள்

இந்திய மக்களை அன்பாலும் பண்பாலும், பாசத்தாலும் ஈர்த்து நல்வழிப்படுத்த முடியுமே தவிர பலாத்காரத்தால், பயமுறுத்தலால் எதையும் சாதிக்க முடியாது என்று உணர்ந்து செயல்படுங்கள்.

**ஆர். அன்பரசி, சென்னை—29.**

### போதும் 'மேளா' தாளமெல்லாம்

கடன் உதவி என்ற பெயரில் லோன் மேளாக்கள் நடத்தி உங்கள் கட்சிக்காரர்கள் முறைகேடாக நடந்து கொள்வதற்கு முடிவு கட்டுங்கள்.

**எல். வத்சலா, திருவாரூர்.**

### முதல் கடமை

மின்சாரம் வளர்ச்சிக்கு ஊன்றுகோல். எனவே மின்சார உற்பத்தியைப் பெருக்கி இந்தியா முழுவதும் 24 மணி நேரமும் தடையின்றி மின்சாரம் கிடைக்கச் செய்வது முதல் கடமையாகும்.

**சு. முருகபூபதி, வடுகபட்டி.**

### நினைவூட்டல்

''ஆட்சியில் இருப்பவருக்கு நேர்மை இருந்தால் போதும். திறமையை விலை கொடுத்து வாங்கிவிடலாம்'' என்றார் ராஜாஜி. இதைப் பிரதமருக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

**கே. செல்வராஜ், பனங்காடு.**

### பொருளாதார சீரமைப்பு

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களின் விஷம் போன்ற விலை ஏற்றத்தை தடுத்து நிறுத்தி, குறைக்க வேண்டும். இதற்கு உற்பத்தி அதிகரிக்கவும் பணவீக்கம் குறையவும் வழிவகுக்க வேண்டும்.

**எஸ். என். வி. கோவை—45.**

### அல்சர்' — உஷார்!

பலதரப்பட்ட பிரிவினர்களும் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாய் இருக்கவேண்டும் என்று காரணம் கூறி சினிமா நடிக நடிகையர்களைத் தேர்தலில் நிற்க வைத்தீர்கள். அவர்களை ஊறுகாய் போல் அளவாகப் பயன்படுத்துங்கள். தேவைக்குமேல் பயன்படுத்தினால் அரசியலுக்கு 'அல்சர்' வந்துவிடும்.

**என். விஜயலக்ஷ்மி, தஞ்சாவூர்—1.**

### மூதறிஞர் அறிவுரை


1967—இல் அண்ணா தமிழகத்தில் பதவியேற்றபோது ராஜாஜி வழங்கிய அறிவுரை: ''உங்கள் கட்சி ஆட்களைத் தலைமைச் செயலக வராண்டாக்களிலிருந்து அகற்றி வையுங்கள்.'' இதுவே ராஜீவிற்கு என் அட்வைஸ்.

**டி. ஜெயந்தி, திருச்சி—18.**

**ராகமாலிகா வழங்கும் பட்டுப்புடவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**நா. ஆறுமுகம்,**
**3/85, அய்யாதுரை தெரு.**
**பரமக்குடி—623 707.**

# தலைவலி பலவகை உண்டு



# சிகிச்சை ஒன்றே ஒன்று!

# அனாஸின்

## இதில் அதிக அளவில் வலி-நிவாரணி அடங்கியுள்ளது

துரித நிவாரணம் அளிக்க, உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும், வலி-நிவாரணி மருந்து அதிக அளவில் கொண்டது — அனாஸின். தலைவலி, ஜலதோஷம், ஃப்ளூ, முதுகு வலி, தசை வலி, பல் வலி ஆகியவற்றிற்கு நல்ல பலனளிக்கிறது.

அனாஸின் மீது மட்டுமே நம்பிக்கை வையுங்கள்.



சக்தி வாய்ந்த, நம்பகமான
மேனர்ஸ்
அனாஸின்*

இப்போது பாதுகாப்பான ஃபாயில் உறையில்.

இந்தியாவின் நம்பர் 1 வலி-நிவாரணி மருந்து.

---

* Licensed user of T.M. : Geoffrey Manners & Co.Ltd.

GM-2-84-TM-R

# நெருப்பு மலர்

## 29

"ஓ... நோ... நோ... ப்ளீஸ் லீவ் ஹிம்..." என்கிற பாஸ்கரப்பாவின் கத்தல் கேட்டு அறை வாசலில் காவலாகவும், கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்கவும் படுத்துக் கொண்டிருந்த ராம்சிங் ஓடி வந்தான். அந்த விடியற்காலை தூக்கத்தில் பாஸ்கரப்பா சத்தம் போட்டதில் பயந்து போனான். இதுவரை அவர் அப்படியெல்லாம் சத்தம் எதுவும் எழுப்பியதில்லை. எத்தனை அயர்ந்த தூக்கத்திலும் குறட்டைவிட்டதில்லை. அனாவஸ்ய முனகல் இருந்ததில்லை. தூங்குவதில் கூட அவரிடம் ஒரு ராணுவ அதிகாரியின் கம்பீரம் தெரிவதாக நிறைய தரம் ராம்சிங் நினைத்துக் கொண்டிருக்கிறான். யாரோ அட்டென்ஷன், ஸ்டாண்ட் அட் ஈஸ் சொல்கிற மாதிரி புரண்டு படுப்பதில் லயம் இருப்பதாக எண்ணியிருக்கிறான். அப்படிப்பட்டவர் இன்று வாய் விட்டு உரக்கக் கத்தி சத்தம் போட்டதில் கலவரப்பட்டவனாக எழுந்து ஓடிப் போய் அவரது தோளைத் தொட்டு உலுக்கினான்.

"சாப்... க்யா ஹுவா ஸாப்...?"

சடாரென்று எழுந்து உட்கார்ந்த பாஸ்கரப்பா ஒரு விநாடி ஒன்றும் புரியாமல் விழித்தார். விளக்கு எரிவதையும், ராம்சிங் நிற்பதையும் பார்த்துக் குழம்பிப் போனார். 'என்ன இது...? நாம் வீட்டிலா இருக்கிறோம்...? சற்று முன் ஓடிய ரத்த ஆறும், அதில் மிதந்த உயிரற்ற உடம்புகளும் எங்கே போயின? ஏதோ காட்டு மனிதர்களாகத் தோற்றமளித்த கும்பல் எங்கே? அவர்களால் பிடித்துக் கையும், காலும் கட்டப்பட்ட நிலையில் நின்ற அர்ஜுன், அவன் உடம்பைக் கத்தியாலும், அம்புகளாலும் கீறிக் கீறிக் குத்தி, காயப்படுத்தி....

அம்மா... என்ன கோரம்... எப்படித் துடித்தான் அர்ஜுன்... அணு அணுவாகச் சித்திரவதைப் பட்டு.... உடம்பு முழுவதும் ரத்தம் பெருகி அந்த ஆற்றோடு கலந்து ஓட....

ஓ... நோ... கனவானாலும் மகா கோரக் கனவு. ஏன் இப்படிப்பட்ட கனவு வந்தது? இதற்கு அர்த்தம் ஏதாவது உண்டா?... இது போல் கனவு வரக் காரணம்...? இதுவரை இந்த மாதிரிக் கனவுகளெல்லாம் வந்ததில்லை. நினைவில் தேடியவரை அவர் கனவு கண்டதில்லை. வெறும் கனவுகளில் மிதக்கிற மனிதரில்லை.

பின், ஏன் வந்தது இந்தக் கனவு? எப்படி வந்தது?...

அன்று பகல் வீடியோவில் பயங்கரப் படம் எதையேனும் பார்த்தோமா என்று யோசித்தார். இல்லை. ஒரு நண்பர் கொண்டு வந்து தந்த பழைய ஆங்கிலக் குழந்தைகள் படமான 'சிட்டி சிட்டி பாங் பாங்' தான் பார்த்தார். பார்த்துக் குழந்தைத்தனமாக ரசித்தார். பின் இப்படிப்பட்ட கொடூரக் கனவு ஏன் வரவேண்டும்...?

மின்சார விசிறி முழு வேகத்தில் சுழலும் போதும் அவர் உடம்பிலிருந்து வியர்வை பெருகுவதைக் கவனித்த ராம்சிங் ஐஸ் பெட்டியைத் திறந்து குளிர்ந்த தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தான். பின்னர் அலமாரியிலிருந்து துண்டை எடுத்து முகத்திலும், முதுகிலும் வழிந்த வியர்வையை ஒற்றியபடி கேட்டான்.

"என்ன ஆயிற்று சாஹேப். ஏதாவது கனவு கண்டீர்களா...?"

தன் கனவைச் சொல்லிப் பகிர்ந்து கொள்ள வெட்கப்பட்ட அவர்,

"ஒன்றுமில்லை ராம்சிங்... நீ போய்ப் படுத்துக் கொள்..." என்று புன்னகையை வரவழைத்துக் கொண்டு அவனைப் பார்த்தார். ஆனாலும் அவரது முகம் சரியில்லை என்பதைப் புரிந்து கொண்ட ராம்சிங் வேறு எதுவும் கேட்கவில்லை.

"நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள் சாஹேப்..." என்றான்.


மனத்தை அமைதிப்படுத்த முயன்று படுத்துக் கொண்டபின் கேட்டார் அவர்.

"மணி என்ன ஆகிறது ராம்சிங்...?"

"ஐந்தடிக்கப் போகிறது சாஹேப்..."

"சரி, நீ போய்த் தூங்கு..." என்று அவனை அனுப்பியவர் அதற்குமேல் தூக்கம் வராதவராகப் புரண்டு படுத்தார். திடீரென்று அர்ஜுனைப் பார்க்க வேண்டுமென்று தோன்ற எழுந்து விளக்கைப் போட்டுக் கட்டிலின் பின்னால் இருந்த அலங்காரக் கண்ணாடி பீரோவில் நிற்க வைத்திருந்த அர்ஜுனின் புகைப்படத்தை எடுத்துச் சிறிதுநேரம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். கூடவே கிருத்திகாவின்,

இந்துமதி






நினைவு வந்தது. அவளாவது கூட இருந்தால் தேவலாம் என்று தோன்றிற்று. வயதாக ஆகத்தான் தனிமை விஸ்வரூபம் எடுத்து மருட்டுகிறது. பேச்சுத் துணைக்கு ஆசைப்படுகிறது. கலகலப்பை எதிர்பார்க்கிறது. ராணுவ ஒழுங்கிலும், கட்டுப்பாட்டிலும் வளர்ந்து, ஓரளவு ஆசாபாசத்தைத் துறந்த தனக்கே இப்படித் தோன்றுமானால் சாதாரணமானவர்களுக்கு எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்தார்.

எப்படி இருந்தாலும் அர்ஜுன் வருகிற வரை காத்திருக்க முடியாது என்பதால் கிருத்திகாவை வரச்சொல்ல முடிவு செய்தார். ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிட வேண்டும். அவள்தான் தற்போது தனியாக எங்கோ தங்கியிருப்பதாகச் சொன்னாளே..? ஏன் அம்மாவை விட்டு இந்தப் பெண் தனியாக இருக்கிறது...? தனியாக இருக்கவேண்டிய அவசியமென்ன...? அப்படித் தனியாக இருக்கத்தான் வேண்டுமென்றால் இங்கே வந்து என்னுடன் இருக்க வேண்டியதுதானே, ஒருவருக்கொருவர் துணையாய், பாதுகாப்பாய்...

எல்லாம் அர்ஜுன் வருகிறவரை... வந்த பின் இரண்டுபேருக்கும் உடனே கல்யாணத்தை முடித்துவிட வேண்டும். அவனுக்கு விடுமுறை கிடைக்கும் என்றால் ஹனிமூனுக்கு ஸ்விட்சர்லாந்திற்கு அனுப்பி வைத்துவிட வேண்டும்...

யோசித்துக் கொண்டே லேசாய்க் கண்ணயர்ந்து பின்னர் ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்தவர் அதன்பின் ராம்சிங் வந்து எழுப்பிய போதே கண்விழித்தார்.

"என்ன ராம்சிங்...?"

"சாஹேப், மேஜர் ஜெனரல் பிரார் உங்களை டெலிபோனில் கூப்பிடுகிறார்..."

"மேஜர் ஜெனரல் பி ரா ரா...? என்னையா...? எங்கிருந்து...?"—

பதிலை எதிர்பார்க்காமல் போர்வையை விலக்கி மணி ஒன்பதாவதைப் பார்த்துக் கொண்டே தொலைபேசியிடம் ஓடினார் பாஸ்கரப்பா. பணிவாக ரிஸீவரை எடுத்து, 'குட் மார்னிங்' சொன்னார்.

"சார், நான் பா ஸ் க ர ப் பா பேசுகிறேன்..."

"பிரார் ஹியர். ராணுவ உயர் அதிகாரி ஒருவர் உங்களைச் சந்திக்க வந்துகொண்டிருக்கிறார். இன்னும் அரைமணிநேரத்தில் அவர் உங்கள் வீட்டில் இருப்பார்..."

"சார்... என்ன விஷயமென்று நான் தெரிந்துகொள்ளலாமா...?"

"அவர் வந்து சொல்லுவார். அதன் பின் நான் மீண்டும் உங்களுடன் தொடர்புகொள்கிறேன்..."

தொலைபேசி துண்டிக்கப்பட்ட பின்னர் தான் பாஸ்கரப்பாவிற்கு அர்ஜுனைப் பற்றிக் கேட்டிருக்கலாமென்று தோன்றியது. எதற்காக ராணுவ அதிகாரி வருகிறார் என்கிற கேள்விக் குறியுடன் அவர் ராம்சிங்கை அழைத்துத் தேனீர் தயாரிக்கச் சொல்லிவிட்டு அந்த அதிகாரி வருவதற்குள் குளித்துவிடலாமென்று உள்ளே போனார்.


குளித்து முடித்து, வேறு உடை மாற்றிப் பழைய ராணுவ மிடுக்குடன் வெளியே வந்தபோது வாசலில் ராணுவ ஜீப் வந்து நின்றது. அதிலிருந்து கர்னல் இந்தர்ஜித் கீழே குதிக்க பின்னாலேயே நான்கு ராணுவ வீரர்கள் கீழே இறங்கினர். இந்தர்ஜித்தைக் கைகுலுக்கி உள்ளே அழைத்துப் போன பாஸ்கரப்பாவிற்கு லேசாய் ஏதோ நெருடிற்று. ராணுவ சம்பிரதாயங்கள் புரிந்தவர். ஆதலால் பின்னால் வந்த சிப்பாய்களின் கைப்பொட்டலமும், ஒரு பெரிய தோல் பெட்டியும் உள்ளுக்குள் ஆயிரமாயிரம் கேள்விகளை ஒரே சமயத்தில் எழுப்ப — ஆனாலும் அவர்களாகப் பேசட்டும் என்று மௌனமாய் நின்ற போது உள்ளேயிருந்து வந்த ராம்சிங் டீ கோப்பைகளை டீப்பாய் மீது வைத்துவிட்டு ஓரமாய் மனத்திலும், முகத்திலும் ஒருவித பயமும், திகிலும் எட்டிப் பார்க்க நின்றான்.

இந்தர்ஜித் மௌனமாய் ஒரு வினாடி ராம்சிங்கையும், பின்னர் பாஸ்கரப்பாவையும் பார்த்தார். அதன்பின் பாஸ்கரப்பாவின் தோளை ஆறுதலாக மிக லேசாய்த் தட்ட பாஸ்கரப்பா துடிக்கிற உதடுகளோடு முகத்தை நிமிர்த்திக் கேட்டார்.

"ஈஸ் தேர் எனிதிங் ராங்...?"

அதற்கு நேரிடையாகப் பதில் சொல்லாமல் மறைமுகப்பதிலாக ஆரம்பித்தார் இந்தர்ஜித். "யு நோ மிஸ்டர் பாஸ்கரப்பா... நாம் ராணுவக்காரர்கள். அவ்வளவு சுலபமாக உணர்ச்சிவசப்படாதவர்கள்; அல்லது பட முடியாதவர்கள். சாவையும், ரத்தத்தையும் பார்த்துப்-பார்த்துச் சலித்துப் போனவர்கள். மனத்தை திடமாக்கிக் கொண்டவர்கள். ஆனாலும் நமக்கென்று வரும்போது தாங்கிக் கொள்வது சற்று சிரமமான காரியம்தான்..."

"...ஓ... எதற்காக இத்தனையும் சொல்கிறீர்...கள்...?"— கேட்கிற போதே, கேட்டு முடிப்பதற்குள்ளாகவே தவித்துப்போனார்


வளரும் குழந்தைகளுக்கு சுவையான
துணையாக விளங்கும் பால் பிஸ்கட்
Milk Bikis
BRITANNIA
Milk Bikis
சத்துமிகுந்த,
சுவையான பிஸ்கட்.
பிரிட்டானியா
LINTAS BIN MB 10 2013 TM

பாஸ்கரப்பா.

இந்தர்ஜித் அதற்குள் சிப்பாய்களுக்கு உத்தரவிட அவர்கள் மிகமிக மரியாதையுடன் காகித உறை சுற்றிச் சுத்தமாக ஒட்டப்பட்டிருந்த அந்த பாக்கெட்டை டீப்பாய் மீது வைத்துவிட்டு விறைப்பாய் சல்யூட் அடித்து அகன்றபின்—

இந்தர்ஜித் பேசத் தொடங்கினார். "மேஜர் ஜெனரல் பிராரின் விசேஷ ஏற்பாட்டின்படி நான் இங்கே வந்திருக்கிறேன் மிஸ்டர் பாஸ்கரப்பா. அர்ஜுனைப் போன்ற ஒரு வீரப் பிள்ளையைப் பெற்றதற்காக நீங்கள் மட்டுமில்லே, நாங்களும் பெருமைப்படுகிறோம். நம்மோடு சேர்ந்து இந்த நாடே பெருமைப்படுகிறது..."

அதற்குள் எல்லாம் புரிந்து போனவராக பாஸ்கரப்பா அவரை நிமிர்ந்து பார்த்துக் குரல் நடுங்கக் கேட்டார்.

"யு மீன்... யு மீன்..."

"எஸ். அர்ஜுன் ஈஸ் நோ மோர். அவரது உடைகள், ராணுவக் குல்லாய், பாத அணிகள், எல்லாம் இந்தப் பாக்கெட்டில் வைக்கப்பட்டிருக்கிறது. பொற்கோவிலுக்குள் அவர் ஆற்றிய அந்த ஒப்பற்ற வீரச் செயலுக்கு பிந்த்ரன்வாலேயின் இருப்பிடம் தேடிச் சென்று, தீவிரவாதிகளின் துப்பாக்கிக்கு இரையான அந்த ஒப்பற்ற வீரனுக்கு என்னோடு சேர்ந்து இந்த நாடே அஞ்சலி செலுத்தும்..."

"என்ன... என்ன...?" என்று பதறிய ராம்சிங் தன் அழுகையையும், துக்கத்தையும் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல் "சோட்டா சாஹேப்..." என்று கத்திக் கொண்டு உள்ளே ஓட,

துடித்துத் துவண்டு போன பாஸ்கரப்பா நேற்றைய இரவுக் கனவின் காரணம் புரிந்தவராக வார்த்தை வராமல், அப்படியே நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சோபாவில் சரிந்தார். ஒரு விநாடி பளீரென்று அவர் நினைவில் கிருத்திகாவின் முகம் தோன்றி மறைய 'எப்படிச் சொல்லப் போகிறோம் அந்தக் குழந்தையிடம்...?' என்ற கேள்வி எழுப்பிய துக்கத்தையும், வேதனையையும் தாங்க முடியாதவராக மயங்கிச் சாய்ந்தார்..

(தொடரும்)

## அருள்வாக்கு


தானம் பண்ணிவிட்டு நாம் நம் பெயரைப் பேப்பரில் போட்டுக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனாலும் 'எப்படியாவது நாலு பேருக்கு நாம் தானம் பண்ணினதை நைஸாகத் தெரியப்படுத்த வேண்டும்' என்கிற எண்ணம் உள்ளூற இருந்தால் அதுவும் தோஷம்தான். அந்த நாலு பேர் நாம் தானம் பண்ணினதற்காக ஒரு பங்கு கொண்டாடினால், அதோடு "பண்ணின தானத்தை வெளியிலேயே தெரிவிக்காமல் எத்தனை உத்தமமான குணம்" என்று பத்துப் பங்கு ஸ்தோத்திரம் பண்ணுவார்கள். மனஸுக்குள் நாம் இந்த ஸ்தோத்திரத்துக்கு ஆசைப்பட்டுவிட்டால், பேப்பரில் போட்டுக் கொள்வதைவிட இதுவே பெரிய தோஷமாகிவிடும். ஆனாலும் இப்படியெல்லாம் ஆசை, இச்சை தலைதூக்கிக் கொண்டுதானே இருக்கிறது? அது தலையைத் தூக்கவொட்டாமல் அழுத்தி வைக்க என்ன பண்ணலாம்? ஒன்று பண்ணலாம் என்று தோன்றுகிறது. அதாவது 'தானம் வாங்குகிறவன் நமக்கு அந்நியன் இல்லை; நம்மவனேதான்' என்ற உணர்ச்சியை நன்றாக வளர்த்துக் கொண்டுவிட்டால் கொடுத்ததை வெளியில் சொல்லவே தோன்றாது. நம் குழந்தைக்கு அல்லது நெருங்கிய பந்துக்களுக்கு நாம் ஏதாவது செய்தால் அதை வெளியில் விளம்பரம் செய்துகொள்வோமா? அதேமாதிரிதான். எவரும் நமக்கு பந்துதான். ஸகல ஜந்துக்களும் ஒரே பார்வதி பரமேச்வராளின் குழந்தைகள்தான். அதனால் நாம் 'தானம் கொடுக்கிறோம்' என்ற வார்த்தையைச் சொல்வது கூடத் தப்புத்தான். பகவான் நம்மைக் கொடுக்கும்படி வைத்தான். கொடுத்தோம்' என்று அடங்கி, பவ்யமாகக் கொடுக்க வேண்டும். எங்கே இதிலும் ஓர் அஹங்காரம் வந்துவிடுமோ என்று பயந்து கொண்டு கொடுக்கவேண்டும். "பியா தேயம்" என்கிறது உபநிஷதம். "பியா" என்றால் 'பயந்துகொண்டு' என்று அர்த்தம். ஸாதாரணமாக, வாங்குகிறவன்தான் பயந்து கொண்டு நிற்பான். கொடுக்கிறவன் அதட்டிக் கொண்டு கொடுப்பான். வாஸ்தவத்தில் கொடுக்கிறவன்தான் பயப்பட வேண்டும் என்கிறது உபநிஷத். கடைசியாக "ஞானத்தோடு கொடுக்க வேண்டும் என்று முடிகிறது. 'ஸம்வித்'துடன் என்று சொல்கிறது. 'ஸம்வித்' என்றால் நிறைந்த ஞானம். கொடுக்கிறவன் வாங்கிக் கொள்கிறவன் இரண்டு பேர்வழிகளும் வாஸ்தவத்தில் ஒருவனேதான் என்ற அறிவுதான் அந்த 'ஸம்வித்.'

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



# சுமங்கலி

மாதமிருமுறை பெண்கள் பத்திரிகை



## பெருமையுடன் வழங்கும்
## புதிய தொடர்

# எம் எஸ்-
# இசை உலகின் இமயம்

திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி
அவர்களின் வாழ்க்கை வரலாறு



சுமங்கலி

## பிப்ரவரி-15 இதழில்
## ஆரம்பமாகிறது

## படிக்கத் தவறாதீர்கள்!

விவரங்களுக்கு:

சுமங்கலி பதிப்பகம்,

93—ஏ, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை—34.

# திருமண விசேஷங்களுக்கு

பருப்புத் தேங்காய், அதிரசம், திரட்டுப்பால், சீர்முறுக்கு போன்றவற்றை தயாரித்துத் தருகிறோம்.

சகிப்புத் தன்மைக்கு ஒப்பான தவம் வேறில்லை
திருப்திக்கு ஒப்பான இன்பம் வேறில்லை
நட்புக்கு ஈடான தானம் வேறில்லை
தயைக்கு ஈடான தர்மமும் வேறில்லை
**கிராண்ட் ஸ்வீட்ஸ்க்கு ஈடான இனிப்பு வேறில்லை**

இனிப்புகள்: பாதாம் அல்வா, தூத் அல்வா, கோதுமை அல்வா, குலாப் ஜாமூன், சோன்பப்டி, அதிரசம், தேங்காய் போளி, மங்களூர் போளி, சொஜ்ஜி யப்பம், பொரிவிளங்காய் உருண்டை, ரஸமலாய், ஜாங்கிரி, முந்திரிக்கதலி முதலியன.

காரம்: தட்டை, தேன்குழல், கைமுறுக்கு, சீடை, மிளகு வடை, காராச்சேவு, ரிப்பன் பக்கோடா, வாழைக்காய் வறுவல், உருளைக்கிழங்கு வறுவல், மிக்ஸர், முள்ளுத் தேன்குழல், வெஜிடபுள் சமோசா முதலியன.

சாம்பார் பொடி, ரஸப்பொடி, இட்லி மிளகாய்ப்பொடி பருப்புப்பொடி, முதலியனவும் தயாரிக்கிறோம்.

## தி கிராண்ட் ஸ்வீட்ஸ் அண்டு ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்திநகர், அடையாறு, சென்னை-600 020

போன்: 412557

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி, தேனாம்பேட்டை, சென்னை-18



ஸ்தாபிதம்: 1942 போன்: 2379

"சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு

# கும்பகோணம், லலிதா பார்மஸி

(ஸ்தாபகர் — Dr. V.R.L. சர்மா)

(D.L. No. — 40)

157, பட்டமங்கலத் தெரு, மயிலாடுதுறை-609 001

தற்போது எமது பார்மஸியின் தலைமையகம் மேற்கண்ட விலாசத்தில் செயல்பட்டு வருகிறது. தங்களுக்குத் தேவையான எமது தயாரிப்புகளை தபால் மூலமோ, நேரிலோ இவ்விடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். எமது மருந்துகள் யாவும் கீழ்க்கண்ட எமது கிளைகளிலும் கிடைக்கும்.

1. லலிதா பார்மஸி
   39, ரங்கநாதன் தெரு, தியாகராய நகர், சென்னை-600 017 போன்: 441454
2. லலிதா பார்மஸி
   105, கச்சேரி ரோடு, மைலாப்பூர், சென்னை-600 004 போன்: 73007

நேரிலோ தபால் மூலமோ வைத்திய ஆலோசனை பெற விரும்புபவர் எமது டாக்டரின் உதவியாளர் Dr. R. தியாகராஜன் அவர்களுடன் மயிலாடுதுறை விலாசத்துக்கு தொடர்பு கொள்ளக் கோருகிறோம்.

கடிதம் எழுதுவோர் 50 Np தபால்தலை கடிதத்துடன் அனுப்பக் கோருகிறோம். "எழுத்து தெளிவில்லாமலும், பதிலுக்கு 50 Np ஸ்டாம்ப் அனுப்பாமலும் வரும் கடிதங்களுக்கு பதில் எழுதப்பட மாட்டாது."

**N.B.** லலிதா பார்மஸியின் மருந்துகளும், வைத்ய ஆலோசனையும் இனி கும்பகோணத்திலிருந்து பெற இயலாது.

சித்திரவதைச் சித்திரம்

**விடுதலைப் புலியான கணவனிருக்கு மிடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காக மனைவியைச் சித்திர வதை செய்தது சிங்கள போலீஸ்!**



முதல் நாள் இரவு அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்த குமுதினி, கணவர் வந்து குழந்தையைப் பார்ப்பார், என்று எதிர்பார்த்து, எதிர்பார்த்து, ஏமாந்து போனாள். மறுநாள் மாலை வரை கணவர் வரவே இல்லை. ஆனால் அதிர்ச்சியான செய்திகளை அவள் தோழி வந்து சொல்லி விட்டுப் போனாள்:

—வீடு இலங்கை ராணுவத்தால் எரிக்கப் பட்டது.

—கணவன் ஆஸ்பத்திரிக்கு வந்தால் கைது செய்யப் போலீஸ் தயாராக இருக்கிறது.

தனது கணவர், 'புலிகள்' இயக்கத்தில் ஈடுபட்டு இருப்பது குமுதினிக்கு நன்கு தெரியும். ஒரு லட்சியத்துக்காக உயிரையே

# குமுதினியின் குமுறல்கள்

கொடுக்கச் சித்தமாக இருக்கும் இளைஞனைக் காதலிப்பதைப் பெருமையாகத் தோழிகளிடம் சொல்லிக் கொள்வாள். அவள் பெற்றோர் எந்தத் தடையும் சொல்லாமல் கல்யாணமும் செய்து வைத்தனர்.

தோழி வந்து சொல்லிவிட்டுப் போன செய்திகளைக் கேட்ட பிறகு குழந்தையைக் காணக் கணவர் வந்துவிடப் போகிறாரே என்ற கவலை வந்துவிட்டது குமுதினிக்கு. சிங்கள ராணுவத்திடம் அகப்பட்டுக் கொண்டால், ஆள் இருக்கும் இடம் தெரியாமல் போய் விடுவாரே!

குழந்தை பிறந்த இரண்டாவது நாள் —தோழி வந்து கூறிய செய்தி குமுதினியைத் திகைப்பில் ஆழ்த்தியது. அவளது கணவரைப் பிடிக்க, ஒரே வழி, குமுதினியைக் கொண்டு போய்க் காவலில் வைப்பதுதான் என்று தீர்மானித்துத் திட்டம் போடுகிறார்களாம் போலீஸார். பிறந்த குழந்தையைப் பார்க்கிறாள் குமுதினி. கண்களில் கண்ணீர். அடுத்த ஒரு மணி நேரத்தில் கையில் பச்சைக் குழந்தையோடு, மட்டக்களப்பு ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினாள். கிராமம், கிராமமாகச் சென்று ஒளிந்திருந்தாள். ஆனால் போலீஸும் ராணுவமும் மோப்பம் பிடித்து விரட்டியது. குழந்தை பிறந்த பத்தொன்பதாம் நாள் குமுதினியைப் போலீஸ் கைது செய்தது.

தற்போது சென்னையில் இருக்கும் குமுதினி சொல்கிறார்:

"என்னை அம்பாறை என்ற இடத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றார்கள்: இருபது நாட்கள் அங்கு வைத்திருந்தனர். பிறந்த குழந்தை பாலுக்கு அழும். ஆனால் என்னால் பால் கொடுக்க முடியாது. காரணம், என்னைச் சுற்றி இருபது அல்லது முப்பது போலீஸார் சதா நின்றுகொண்டு இருப்பார்கள். எந்த மறைவிடமும் கிடையாது.. பசித்து, அழும் குழந்தை அழுது, அழுதே தூங்கிவிடும். பிறகு நான் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதன் பேரில் பால் பாட்டிலில் வாங்கித் தந்தார்கள். ஆனால், அந்தப் பால் பாட்டிலைக் கழுவத் தண்ணீர் கொடுக்க மாட்டார்கள். இதனால், நோய்க் கிருமிகள் தாக்கும் அபாயம் இருந்ததால், நானே பாட்டிலில் பால் கொடுப்பதை நிறுத்திவிட்டேன். அந்த இருபது நாட்களும் என்னால் தூங்கக் கூட முடியவில்லை. என் கணவர் எங்கே இருக்கிறார் என்று கேட்டு நச்சரிப்பார்கள். 'எனக்குத் தெரியாது' என்றால் கெட்ட வார்த்தையால் திட்டுவார்கள். ஒரு முறை சிகரெட்டால் என் முகத்தில் சுட வந்

தார்கள். ஆனால் குழந்தையை நான் முகத்தோடு கட்டிப்பிடித்துக் கொண்டதனால் விட்டு விட்டனர். அந்த இருபது நாட்களும் போலீஸ் ஸ்டேஷனில் நான் கண்ட காட்சிகள் கொடூரமானவை. ஒன்றும் அறியாத அப்பாவி இளைஞர்களைக் கொண்டுவந்து லாக் — அப்பில் வைத்துச் சித்திரவதை செய்தனர்.

—படுக்க வைத்துவிட்டு, கு தி. கா லி ல் பெரிய கட்டையால் அடிப்பது.

—நக இடுக்குகளில் குண்டூசியால் குத்துவது.

—உயிர் நிலையில் தாக்குவது...

என்றிப்படிப் பலவிதக் கொடுமைகள்

இதற்கிடையில் என் குழந்தைக்கு, அடிக்கடி காய்ச்சல் ஏற்பட்டு, இளைத்துப் போனாள். போலீஸார் என்ன நினைத்துக் கொண்டார்களோ? என்னைக் கண்டி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோனார்கள். குழந்தை மிகவும் மோசமாகிவிடவே, கண்டி ஆஸ்பத்திரியில் குழந்தையைச் சேர்த்தனர். ஆஸ்பத்திரிக்குச் சென்று குழந்தையைப் பார்க்கவே என்னை அ னு ம தி க் க வில்லை. ஆஸ்பத்திரியில் சேர்த்த ஐந்தாம் நாள் குழந்தையை என்னிடம் திருப்பித் தந்தனர். உடல்நிலை சரியாகி விட்டது என்று கூறித் திருப்பித் தந்தாலும், என்னால் அதை நம்ப முடியவில்லை. முன்னிலும் வெகுவாகக் குழந்தை இளைத்துப் போயிருந்தாள். கண்டி போலீஸ் ஸ்டேஷனிலும், ராணுவத்தினர் செய்த சித்திரவதைக்கு அளவே இல்லை. என் குழந்தைக்காகத்தான் உயிரையே வைத்துக் கொண்டிருந்தேன். பிறகு கொழும்பு நகருக்குப் பக்கத்தில் உள்ள நீர் கொழும்பு (நிகம்பு என்றும் சொல்வார்கள்.) என்ற இடத்தில் உள்ள சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றார்கள் அந்தச் சிறைச்சாலை மிக மட்டமான சிறைச்சாலை. கள்ளச் சாராயம் விற்கும் பெண்களும், விலைமாதர்களும் தான் அங்கு சிறை வைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலோருக்குத் தொத்து வியாதிகள் இருந்தன.

பகலில், கொழும்பு நகரில் உள்ள நான்காவது மாடி (**Fourth Floor**) என்ற இடத்திற்குக் கொண்டு சென்று விசாரிப்பார்கள். இலங்கையில் பெரும்பாலோருக்கு நான்காவது மாடி என்றாலே உடல் நடுங்கும். காரணம் — அங்குதான் ரகசிய போலீஸாரின் தலைமையிடம் இருந்தது. விசா தற் கென்று அந்த இடத்துக்கு அ ழை ழ ச் செல்லப்படும் பலர் திரும்பி வந்ததே லை. சிங்கள போலீஸார் என்னைத் தாக்க ரும் போதெல்லாம் குழந்தையை அணை துக் கொள்வேன். அதுதான் எனக்குப் ாது காப்பு. இதனால் பல சமயம் அடி வாங்காமல் தப்பினேன். ஆனால் இரண்டு முறை குழந்தையை என் கையில் இருந்து பிடுங்கித் தனியாக வைத்துவிட்டு என்னைச் சாட்டையினால் விளாசிவிட்டனர். நான் ஒரு பக்கம் அழ, குழந்தை ஒரு பக்கம் அழ — ஆனால் அந்தச் சிங்களவர்களின் கண்களில் சற்றுக் கூட இரக்கம் தலைகாட்டாது.

குழந்தை மீண்டும் காய்ச்சலில் துவண்டது. என்னைச் சிறையில் அடைத்துவிட்டுக் குழந்தையை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். சிறையில் குழந்தையில்லாமல், தனியாக இருந்த எனக்கு நிலை கொள்ளவே இல்லை. ஒவ்வொரு நிமிடமும், குழந்தை எப்படி இருக்கிறாளோ, என்ற கவலை என்னை வாட்டியது. ஆஸ்பத்திரியில் சேர்ந்த இரண்டாம் நாள் குழந்தையை என்னிடம் ஒப்படைத்தார்கள் — பிணமாக. குழந்தைக்கு இருதய நோய். அதனால் இறந்துவிட்டது என்று பொய் சொன்னார்கள். உண்மையில் போஷாக்கு, சுகாதாரக் குறைவினால் தான் குழந்தைக்கு அடிக்கடி நோய் வந்து இறந்து போயிற்று. 'ஓ' என்று கதறி அழுத எனக்கு ஆறுதல் கூற யாரும் இல்லை. என் மகள் தமிழினி — ஆமாம் அவளுக்கு நான் வைத்த பெயர் அதுதான் — என்னை விட்டுப் பிரிந்த பதினைந்தாம் நாள்தான் என்னை விடுதலை செய்தார்கள்."

குமுதினி தன் துயரக் கதையைச் சொல்லச் சொல்ல நமக்கே உ ண ர் ச் சி மேலிடுகிறது. ஆனால், இவ்வளவு சித்திரவதைகளுக்குப் பிறகும், குமுதினியின் மன உறுதி நம்மை வியக்க வைக்கிறது. தனது கணவர் எங்கேயோ பத்திரமாகத்தான் இருப்பார் என்றும், விரைவில் வருவார் என்றும் நம்பிக்கையோடு காத்து இருக்கிறாள் குமுதினி.

இலங்கையில் இன்னும் இதுபோல் எத்தனை குமுதினிகளோ?

—தில்லப்பா

படம்: சுபா

"என் அம்மாவுக்கும், மனைவிக்கும் சண்டை வந்தா சமரசம் பண்ற வேலையை நிறுத்திட்டேன்."

"ஏண்டா?"

"நான் வீட்டுக்குள் நு ழை ந் தா ல், 'தொடை நடுங்கிச் சிப்பாய்' வந்துட்டா'ன்னு ரெண்டு பேருமே முணுமுணுக்கிறாங்க!"



# பாம்பே டையிங்

## புத்தாண்டு தள்ளுபடி விற்பனை

**15%** தள்ளுபடி

பாலியெஸ்டர் ஸூட்டிங், ஷர்ட்டிங்குகளுக்கு.

**15%** தள்ளுபடி

பாலியெஸ்டர் மற்றும் பருத்திச் சேலைகள், டிரெஸ் ப்ரிண்ட், ரூபியா, கேம்ப்ரிக், லாண் இவைகளுக்கு.

**15%** தள்ளுபடி

பாலியெஸ்டர் மற்றும் பருத்தி விரிப்புகள், டவல்கள், ஃபர்னிஷிங், ப்ளாங்க்கெட், க்வில்ட் இவைகளுக்கு.


இந்தியாவெங்கும் உள்ள அங்கீகாரம் பெற்ற 500 ரீடெயில் ஸ்டாக்கிஸ்டுகளிடமும் விற்பனை உண்டு.

**15%** தள்ளுபடி எல்லா வகை பாம்பே டையிங் துணிகளுக்கும்

BDM-1565

சலுகை, காலவரம்புக்கு உட்பட்டது.

# "லூட்டியடிக்கும் குட்டிகளின் போட்டியைப் பார் ரொட்டிக்கு!"



நினைவுகள் நிறைந்திடும் அழியாத
கோலமே வாழ்க்கையெனும் அற்புதம்.
பாசம், நேசம், உல்லாசம், பெருமிதம் போன்ற
நவரசம் ததும்பும் தருணங்கள் எங்கும்,
எப்போதும் நேரலாம்.

அத்தருணமே அவற்றைப்
புகைப்படமாக எடுத்திடுவீர்! குறிப்பாக,
பிளா[illegible] ஒயிட் பிலிமில் எடுத்தால்
அவை காலமெல்லாம் மங்காது.

புகைப்படங்கள்:
என்றென்றும் வாழும் பசுமையான
நினைவுச் சோலைகள்



மனம் அள்ளும்
நினைவுகளை
சிறை கொள்ளும்!

INDU

**இந்து ரோல் பிலிம்**
**மற்றும் ப்ரோமைடுகள்**

Sista's-HPF.239.84.TM



# ரிடையராகி சம்பாதிப்பது எப்படி?

## 'அப்சரஸ்'

''என்ன சார், ரிடையர் ஆய்விட்டீர்களாமே'' என்று குசலம் விசாரித்துக் கொண்டே நண்பர் நுழைந்தார்.

''போன மாதம் முதல்'' என்றார் கிருஷ்ணகுமார்.

''ஆமாம். வேலையில் இருந்தபோது தொழிலாளர்களுக்காகவே உடம்பைச் செருப்பாய்த் தைத்து உழைத்தீர்கள். தொழிற்சங்கத்தில் முக்கிய புள்ளியாய் இருந்து எத்தனை விதமான வேலை நிறுத்தங்களை, உண்ணாவிரதங்களை, ஊர்வலங்களை நடத்தி இருப்பீர்கள். இப்பொழுது வீட்டில் உட்கார்ந்திருப்பதென்றால் கஷ்டம்தான்'' என்று கிருஷ்ணகுமாரின் சாதனைகளைப் பட்டியலிட்டார் நண்பர்.

''ஆமாம். நீங்கள் சொல்லுவது வாஸ்தவம்தான். ஒவ்வொரு பிரச்னையையும் ஒவ்வொரு விதமாக அணுகி நமது எதிர்ப்பை அதற்கேற்ற முறையில் காட்ட வேண்டும். என் அனுபவம் கொஞ்ச நஞ்சமில்லை, போங்கள்'' என்று தம் தொழிற்சங்க நிர்வாக அனுபவங்களை ஒவ்வொன்றாய் நண்பருக்கு விவரித்துச் சொன்னார் கிருஷ்ணகுமார்.

''ஸார், இதை எல்லாம் நீங்கள் புஸ்தக ரூபமாய் வெளிக் கொண்டுவர வேண்டும். இல்லை.. ஏதாவது ஒரு வார இதழில் தொடர்ச்சியாய் எழுத வேண்டும். எப்பப் பார்த்தாலும் சிறுகதை, தொடர்கதை, துணுக்குகள், என்றுதான் வாரப்பத்திரிகைகளில் கிடைக்கின்றன. உங்களை மாதிரி அனுபவஸ்தர்கள் எழுதி ஜனங்களை எஜுகேட் பண்ணணும், ஸார்'' என்று ஓய்வு எடுத்தவருக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் சொன்னார் நண்பர்.

''அதிலெல்லாம் என்ன ஸார் வந்துடும்? மிஞ்சி மிஞ்சிப் போனா, ஐந்தாறு மாதம் என் பேர் அடிபடும். அவ்வளவுதான். இப்ப என் பிரச்னையெல்லாம் ரிடையர் ஆகி எப்படிச் சம்பாதிப்பது என்பதுதான்.''

''வருமானவரி அதிகாரி முத்துஸ்வாமி தெரியுமில்லையா? போன மாதம் உங்கள் மாதிரிதான் ரிடையர் ஆகிவிட்டார். ரிடையர் ஆவதற்கு ஆறு மாதம் முன்பே பிடித்து 'கன்ஸல்டன்ஸி'யாமே அந்தத் தொழிலுக்கு முன்னேற்பாடுகள் செய்து வைத்திருந்தார். 'முத்துஸ்வாமி — வரி கன்ஸல்டெண்ட்'' என்று போன வாரம் போர்டு மாட்டிக் கொண்டார். அவருக்குத்தான் வரிகளை எப்படியெப்படியெல்லாம் குறைக்கலாம் என்பது தண்ணீர் பட்ட பாடாயிற்றே. இந்த ஒரு வாரத்திலேயே ஏழெட்டு பேர் தங்கள் வரிச் சுமைகளைக் குறைக்க அவரை நாடி வழி கேட்டார்கள். ஏக வரும்படி'' என்றார் நண்பர்.

கிருஷ்ணகுமார் மூளையில் இந்தச் சமாசாரம் பளிச்சென்று தாக்கி இவருக்கும் ஒரு வழியைக் காட்டிற்று.

''தொழிற்சங்கக் கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள், சமரசப் பேச்சுக்களை நடத்த வேண்டிய முறைகள் இவை எனக்குத் தண்ணீர்ப்பட்ட பாடாச்சே. நானும் ஒரு கன்ஸல்டன்ஸி ஆரம்பித்துவிடுகிறேன்!'' என்றார்.

மறு வாரம் அவர் வீட்டில் ஒரு பெரிய விளம்பர போர்டு பொருத்தப்பட்டது: ''கிருஷ்ணகுமார் அண்டு கம்பெனி: தொழிலாளர்கள் பிரச்னைகள் கன்ஸல்டன்ஸி ஏஜென்ஸி.''

இரண்டாம் நாளே கன்ஸல்டன்ஸி ஏஜென்ஸிக்கு ஒரு ஆள் வந்தார். ''ஸார், எனக்கு ஒரு பிரச்னை. நான் ஒரு தையற்கடை வைத்திருக்கிறேன். காஜா எடுக்கும் பையன்கள் இரண்டு பேர் கடையினுள்ளேயே உட்கார்ந்து வேலை நிறுத்தம் செய்தார்கள். சம்ப

ளத்தை வெட்டினேன். அடுத்த நாளே அகில இந்திய கா ஜா தைக்கும் பையன்கள் சமஷ்டியிலிருந்து ஒரு பெரும் கூட்டம் கடை வாசலில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. இதை எப்படிச் சமாளிப்பது?''

''சரி, உன் கடையைப் பற்றிய விவரம், உன் மாத வருமானம், எவ்வளவு பேர் நியமித்திருக்கிறாய், ஒவ்வொருவரும் எந்த வருஷம் சேர்ந்தார்கள், வருஷ சம்பள உயர்வு எவ்வளவு, போனஸ் எவ்வளவு என்ற விவரமெல்லாம் எழுதிக்கொண்டு வா'' என்றார் கிருஷ்ணகுமார்.

''இதெல்லாம் நம்மகிட்ட ஏதுங்க. ஏதோ கடை ஆரம்பித்தேன். இப்பத்தாங்க இந்த மாதிரி ஒரு நிலைமை. கடை ஆரம்பித்துப் பத்து வருஷமாகுதுங்க''

''விவரங்கள் இல்லையென்றால் தயாரித்துக் கொண்டு வா. பிரச்னையை ஆராய்ந்து எப்படிச் செய்தால் நல்லது என்று சொல்லுகிறேன்.''

''சரி, பார்க்கலாங்க'' என்று கிளம்பினார் தையற் கடைக்காரர்.

''கன்ஸல்டன்ஸி பீஸ் 25 ரூபாய்'' என்றார் கிருஷ்ணகுமார்.


''இதென்னங்க ஒன்றுமே செய்யாமே 25 ரூபாய் கேட்கறீங்க. உங்கள் உதவி வேணும்னா அப்புறம் வர்றேன்'' என்று நடையைக் கட்டினார் அவர்.

''இதுபோன்ற சின்ன வியாபாரத்திலெல்லாம் கன்ஸல்டன்ஸி வைத்துக் கொள்ளக் கூடாது. பெரிய தொழிற்சங்கங்களுடன் தொடர்பு கொண்டு இயங்க வேண்டும்'' என்று தீர்மானித்தார் கிருஷ்ணகுமார்.

''சரி! உங்கள் கன்ஸல்டென்ஸியை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அப்படி நாங்கள் எங்கள் தொழிற்பிரச்னைகளை உங்களிடம் கொண்டு வந்தால் எங்களுக்கு எவ்வளவு கமிஷன் கொடுப்பீர்கள்?'' என்று இவர் நாடிய பெரிய தொழிற்சங்கத் தலைவர்கள் கேட்டனர்.

கிருஷ்ணகுமார் பதில் பேசாமல் கிளம்பி யோசனையுடன் வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தார். பஸ்ஸுக்கு நின்று கொண்டிருக்கும்போது ஒரு பெரிய கட்டிடம். ''பாலி கிளினிக்'' என்று பெரிய போர்டு. இருபது டாக்டர்கள். ஒவ்வொருவரும் ஒரு நோயில் ஸ்பெஷலிஸ்ட். கிருஷ்ணகுமாருக்கு ஒரு மின்னல் ஐடியா! அவருடைய நண்பர்கள். இரண்டு மூன்று பேர் சமீபத்தில் ஓய்வெடுத்தவர்கள். ஒருவர் பாங்கில் லீகல் டிபார்ட்மெண்டில் வேலை செய்த தொழிற்சங்கக் காரியதரிசி. மற்றொருவர் ஆஸ்பத்திரியில் மருந்து விநியோகம் செய்யும் இலாகாவில் பணியாற்றி, ஊழியர் தலைவராயிருந்து ரிடையர் ஆனவர். மற்றொருவர் காலேஜ் புரொபஸராய் இருந்து கல்லூரி ஆசிரியர்களின் உரிமைகளுக்காகப் பாடுபட்டவர். கிருஷ்ணகுமார் அவர்களை அணுகினார்.

''மருத்துவர்கள் பலர் சேர்ந்து பாலி கிளினிக் நடத்துகிறார்களே, அதுபோல் நாமும் ஒன்று சேர்ந்து 'தொழில் உரிமை, கோரிக்கை கன்ஸல்டென்ஸி' ஆரம்பித்தால் என்ன? நம் அனுபவம் தொழிலாளர் நலனுக்கு உபயோகப்பட வேண்டும். நாம் மூவரும் சேர்ந்தால் தொழிற்சங்கத் தலைவர்கள் மட்டுமின்றி தொழிலாளர் நலத் துறையில் தொடர்பு கொண்ட பெரிய உத்தியோகஸ்தர்கள் கூட கன்ஸல்டென்ஸிக்கு வருவார்கள். என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டார்.



நம் மனத்தைக் கல்வியிடம் ஈடுபடுத்துவதற்கு ஆசிரியரிடம் இருக்க வேண்டிய முக்கிய இரண்டு சக்திகள்:

1. புதியதை அறிந்ததாகச் செய்வது.
2. அறிந்ததைப் புதியதாகச் செய்வது.

—கதே. தொகுப்பு: சொர்ணு.

அடுத்த மாதம் நகரின் பிரதான சாலையில் ஒரு பெரிய கட்டிடத்தில் கண்ணைக் கவரும் போர்டு தொங்கிற்று: ''கிருஷ்ணகுமார் அஸோஸியேட்ஸ் — தொழிலாளர் கன்ஸல்டென்ஸி.'' முகப்பில் ஒரு பெரிய நாக்க மரப்பலகையில் பத்து பேர்கள் பொறிக்கப்பட்டு ஒவ்வொருவரும் எந்த வகைத் தொழிலாளர் பிரச்னையில் எத்தகைய ஸ்பெஷலிஸ்ட் என்ற விவரங்கள் பறைசாற்றப்பட்டன.

போர்டு மாட்டிய இரண்டாம் நாள் ஒருவர் வந்தார். 'ஆகா! ஒரு ஆசாமி — முதல் கஸ்டமர் கன்ஸல்டென்ஸிக்கு வந்துவிட்டார்' என்று எல்லோருக்கும் ஆனந்தம். ஏக உபசாரம்.

வந்தவர், ''நான் ஆலோசனை பெற வரவில்லை. உங்களோடு சேர்ந்துகொண்டு மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்க வந்திருக்கிறேன்'' என்றார்.

''அப்படியா, நீங்கள் எதில் ஸ்பெஷலிஸ்ட்?''

''நான் கன்ஸல்டென்ஸி நடத்தி அனுபவப்பட்டு ரிடையரானவன். அதனால் கன்ஸல்டென்ஸி ஆரம்பித்து ஈஸியாக நடத்த முடியாதவர்கள் என்னிடம் கன்ஸல்டென்ஸிக்கு வந்தால் ரிடெய்னராக ஒரு தொகை பெற்றுக் கொண்டு அவர்களுக்கு ஆலோசனை வழங்குவேன்!'' என்றார் வந்தவர்.

கிருஷ்ணகுமாரும் நண்பர்களும் அவர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தனர்.

வட்டமேஜை



* "சிறை" தந்த சிறந்த நடிகர் ராஜேஷ்" பேட்டி கண்டேன். தான் ஒரு நடிகர் மட்டுமல்ல! ஆழ்ந்த ரசனையுள்ள சிந்தனையாளன் என்பதையும் கடுமையாக உழைத்து எதனையும் வெற்றி கொள்ளக் கூடியவர் என்பதை தெளிவுபடுத்திவிட்டார்.
சென்னை—1. கே. ஆர். ரவீந்திரன்.

* அன்று துர்வாசருடன், இன்று 'கல்கி' யுடன், ஹேமா ஆனந்ததீர்த்தருக்கு ஏன் இப்படி அடிக்கடி வேர்த்து வடிகிறது!
ஸ்ரீரங்கம், ஆர். கோபாலன்.

* மண்டபம் முகாமில் இலங்கைத் தமிழர்கள் படும் துன்பம் கண்களைக் கலங்க வைத்து விட்டது. பொருள், உடைமைகள் அனைத்தையும் இழந்துவிட்டு அமைதி தேடி இங்கு வந்திருக்கும் அவர்களின் நிலைமாற தமிழக அரசு ஏதேனும் செய்யுமா?
சென்னை—5, எஸ். சம்பத்குமார்.

* அ. தி. மு. க. உட்கட்சிப் பூசல் பிப்ரவரி 4—ல் எப்படியிருக்கும் எனும் கருத்துப் படம் வெகு பொருத்தமாக அமையப் பெற்றிருந்தது.
கோவை—43, என். பாலகிருஷ்ணன்.

* மிகப்பெரிய தேசத்துரோகத்தைச் செய்து, இந்நாட்டையே விலைக்கு விற்கப் பார்த்த மோசடிக்காரர்களை நிச்சயம் விட்டு வைக்கக்கூடாது.
சென்னை—5, எஸ். வி. ராஜசேகர்.

* கல்லூரியைக் கோயிலைப் போல் வைத்திருக்கும் ஜி. ஆர். ஜி. குடும்பத்தைக் கோவிலாகவும் அங்கே நடமாடுபவர்களைத் தெய்வங்களாகவும் கோயம்புத்தூர் மக்கள் கருதினால் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.
லால்குடி, எம். இராஜேந்திரன்.

* மூன்றுமாண்டு இளங்கலைப் பிரிவு மாணவியரின் கண்ணீர்க் கடிதம் கண்டேன். மாணவ—மாணவியரின் துயர் துடைக்க முன் வந்துள்ள கல்கியின் பணி பாராட்டத்தக்கது. "இளைஞர் ஆண்டு" என்பதற்கேற்பச் செயல்பட்டு வரும் கல்கியை, மாணவ—மாணவியரின் சார்பாகப் பாராட்டுகிறேன்!
திருச்சி—20, ஆர். அப்துல் சலாம்.

* "சென்றோம், பார்த்தோம்"—சிங்களப் படையின் அட்டூழியத்தை அவர்கள் செய்யும் அராஜகத்தைப் படிக்கும் போது—தமிழ் மீனவர்கள் பட்ட அவஸ்தையை நினைக்கும் போதும்—இதற்கு ஒரு முடிவு காண மத்திய சர்க்கார் உடனடியாக வெறும் அறிக்கை மட்டும் விடாமல் செயலில் இறங்க வேண்டும் போல் தோன்றுகிறது. அதற்கு முன் மாதிரியாய் இலங்கைப் படகைப் பிடித்தது தமிழ் மீனவர்கள் மத்தியில் ஒரு மகிழ்ச்சி ஏற்படுத்துகிறது. அதேசமயம் படகைப் பிடித்த காப்டன் கன்வார் அவர்களுக்கு இந்தத் தமிழகமே நன்றி சொல்ல வேண்டும்.
மயிலாடுதுறை, தேரழுந்தூர் சி. சுப்பு.

* கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில், வழங்கப்படும் சத்துணவைப் பிள்ளைகள் பலர் தட்டில் வாங்கி வந்து தங்கள் வீட்டிலுள்ள கோழிப்பண்ணைகளில் வளரும் கோழிகளுக்கும், நாய் போன்ற வளர்ப்புப் பிராணிகளுக்கும் போடுவதை நான் பல முறை கண்டிருக்கிறேன். "இதை நீங்கள் சாப்பிடுவதில்லையா?" என்று கேட்டதற்கு, "நாங்கள் வீட்டில் சாப்பிட்டுக் கொள்வோம், பள்ளியில் வாங்கி வருவதை இவ்வாறு போட்டுவிடுவோம்," என்றனர். இதுபோல எத்தனை இடங்களில் உணவு வீணாகிறதோ தெரியவில்லை. இத்திட்டத்தை நான் குறை சொல்லவில்லை. உணவு விரும்பிச் சாப்பிடும் ஏழைக் குழந்தைகளுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும். வசதி உள்ள வீட்டுக் குழந்தைகளும் மற்றவர்களுடன் சேர்ந்து உண்பதால் சமத்துவ உணர்வு உண்டாவது உண்மை. எனினும் அதை உணராது உணவை வீணடிப்பவர்களுக்குச் சத்துணவு தருவதைவிடத் தராதிருப்பதே மேல்.
இராசிபுரம், இரா. சம்பத்குமார்.

(கடைசி கடிதம் பரிசு பெறுகிறது.)

# வீணாகும் சத்துணவு

# பந்தம்



வானத்தில் எத்தனையோ நட்சத்திரங்கள். ஒரு சூரியன், ஒரு சந்திரன். இயல்பு மாறாமல் சுற்றிக்கொண்டிருக்கும் கிரகங்கள். ஆனால், எப்போதாவதுதான் வால் நட்சத்திரங்கள் தோன்றும். தோன்றிய நாட்களில் சூரியனைப் பற்றியும், சந்திரனைப் பற்றியும் யாரும் பேசுவதில்லை.

இதோ ஒரு ராசியான வால் நட்சத்திரம். பேபி ஷாலினி. (திருஷ்டி சுற்றுங்கள், திருஷ்டி சுற்றுங்கள்.) ஜாம்பவான்களையெல்லாம் பிஞ்சுக் கைகளால் அந்தண்டை இந்தண்டை தள்ளிவிட்டு, நெஞ்சு நிறைக்க நிற்கும் அந்தக் குழந்தை நட்சத்திரத்தைப் பாராட்ட வேண்டுமென்றால், அகராதியில் புது வார்த்தைகளைச் சேர்க்க வேண்டும்.

எடுத்தவுடனே ராணுவ ஆஸ்பத்திரியில், சிவாஜி அறிமுகமாகும் காட்சியே நிறைய ஆசைகளைக் கிளப்பி விடுகிறது. அங்கங்கே கிழிந்த யூனிஃபார்ம், பஞ்சு பறக்கும் தலை, புருவங்கள், தாடி, மீசை, கண்களில் மூப்பின் சுருக்கம். கூடவே நிழலாய் சோகம். சிவாஜிப் புதையலில் இன்னும் வைரங்களும், வைடூரியங்களும் அள்ளி எடுக்க பாக்கி இருக்கின்றன.

வெகு எளிமையான கதைதான்.

கண்ணியம், கௌரவம் பேசும் மிலிட்டரி ரிடையர்டு சிவாஜி. ஒரே பெண். செல்லமும், பிரியமுமாய்க் கொட்டி வளர்க்கிறார். அது வயது வந்தவுடன் தானே ஒரு துணையைத் தேடிக் கொள்ள 'வெளியே போடி.' ஏழைக் கணவனுடன் அது அல்லாடுகிறது. குழந்தையைப் பெற்றுச் சந்தோஷப்படுகிறது. கணவனை விபத்தில் பறிகொடுத்து விதவையாகிறது. கோப அப்பாவுக்கு அவளை ஏற்க இன்னமும் மனமில்லை. ரஹீம் என்று ஒரு குடும்ப நண்பர் வீட்டில் குழந்தை வளர்கிறது. அதை மெ தாத்தாவுடன் சேர்த்து வைக்கிறார் ரஹீம். (ஜெய்சங்கருக்கும் கௌரவமான பாத்திரம்). தன் பேத்தி என்று தெரியாமலேயே அதன் சுட்டித்தனத்தில் மனத்தைப் பறிகொடுக்கும் தாத்தா. அது பேத்திதான் என்று தெரிந்த பின்னாலும் விட்டுக் கொடுக்க முடியாமல் தவிக்கும் பந்தம் பற்றித் தான் கதை.

ஆனந்த் பாபு, காஜல்கிரன், காதல் காட்சிகளில் கொஞ்சம் போல கிளுகிளு. இண்டர்வல் வரவே வராதோ என்று நெஞ்சு பதைக்கும் நேரத்தில் இண்டர்வல்.

ஷாலினி எப்போது திரையில் அறிமுகமாகிறதோ அந்தக் கணத்திலிருந்துதான் படத்திற்கு உயிர். அரை விளிம்புக் கண்ணாடிகளை மூக்கில் நழுவ மாட்டிக் கொண்டு, புஸ்தகத்தைத் தலைகீழாய்ப் பிடித்துக் கொண்டு பெரிய மனித தோரணையோடு, 'ஹூ ஆர் யூ?' என்று சிவாஜியைக் கேட்கும் அழகு என்ன, **'Big Uncle'** என்று வந்து குழையும் லாகவமென்ன, ராத்திரி சிவாஜி கொறட்டையோ, கொறட்டை என்று இரைச்சல் போட, மேடிட்ட தொப்பையைத் தடவி, 'அங்கிள், உங்க வயித்தில என்ன இருக்கு—சிங்கமா?' என்று கேட்கும் குழந்தைத்தனமென்ன, அம்மாவிடமிருந்து விடைபெறு முன் கூப்பிட்டு இச் இச் என்று முத்தம் கொடுக்கும் அவசரமென்ன — எப்படித்தான் காமிராவைப் பார்க்காமல் இத்தனை இயல்பாய்ச் செய்ய முடிகிறதோ?

மலையாளத்திலிருந்து இரவல் வாங்கிய படம் என்றாலும், விஜயன் மனத்தில் பதிகிற மாதிரி காட்சிகளை அமைத்திருப்பது சந்தோஷமாயிருக்கிறது. சங்கர் கணேஷும் காலை வாரவில்லை.

எதற்கு இத்தனை நீளம் என்ற ஒரே கேள்விக்கு மட்டும் பதிலில்லை.

சிவாஜி — ஷாலினி காட்சிகளில்... சபாஷ் —சரியான போட்டி!

# சந்தோஷக் கனவுகள்



ஆர். சி. சக்திக்கு இந்தப் படம் ஒரு பாடமாக அமையுமோ?

அலை அடிக்கும் கடலோரம் வீடு. அதன் மாடி. அந்த மாடியில் இருந்து தெரியும் கடல் என்று அட்டகாசமான சிச்சுவேஷன்தான். மீனவர் பற்றிச் சொல்லத் தேர்ந்தெடுத்த சிச்சுவேஷன்.

ஆனால்—

மீனவரின் வாழ்க்கையைத்தான் காண முடியவில்லை. சும்மா ஒரு ஆளை நிறுத்தி இவர் ஒரு மீனவர் என்று சொன்னால் அந்தச் சமுதாயம் பற்றிய பிரக்ஞையுடன் எடுத்த படமாகிவிடுமா என்ன?

இரு நண்பர்கள். ஒருவருக்கு ஒரு முறைப் பெண். அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப்போகிற நேரத்தில் ஒரு சொத்தை டாக்டர் இவருக்கு டி.பி., கான்சர் என்று எல்லாப் பெரிய வியாதிகள் பெயரையும் 'டிக்' பண்ணிக் கொடுத்து, இவர் மேலே போக நாள் எண்ண வேண்டியதுதான் என்று சொல்ல, இந்த 'வெளுத்ததெல்லாம் பால்' கேஸ்கள் நம்பி முறைப் பெண்ணை நண்பருக்கு விட்டுக் கொடுத்த பின்னால், நகர டாக்டர் 'யாரய்யா சொன்னான் இவருக்கு வியாதி என்று?' என்று பிளேட்டைத் திருப்பியவுடன் — நல்ல ஸ்ட்ராங்கான முடிச்சு தான். கயிறுதான் சரியில்லை.

அப்புறம் அந்த முறைப்பெண்ணை விட்டுக் கொடுத்த தையல்கார மீனவர், பிராமணப் பெண்ணைக் காதலிக்க, ஊர் எதிர்க்க, கடைசியில் மீனவரும், பிராமணப் பெண்ணும் சாவில் இணைகிறார்கள்.

ஹாஜாஷெரீப் ஒரு பிராமணப் பையன். தீபா ஒரு பிராமணப் பெண். தே. சீனிவாசன் ஒரு பிராமண குருக்கள். வசனங்களாவது இயல்பாக இருக்க வேண்டாம்?

'நான் பிராமணன் இல்லே.' 'நான் பிராமணன் இல்லே' என்று தேங்காய் கத்துவது உணர்ச்சிப் பூர்வமாய் இல்லை. நாராசமாய் இருக்கிறது.

அற்பமான காமெடிக்கு (அங்க குத்தாதடா, புண் இருக்கு) ஒரு எஸ். எஸ். சந்திரன்.

நளினி, வி. காந்த் சொமட்டில் குத்தி சிருங்காரம் பண்ணுவது ரசமாய் இருக்கிறது.

மீண்டும் குடிகார ராஜேஷ் (இதில் சிகரெட் இல்லை, பீடி) இயல்பாய்ப் பண்ணி இருக்கிறார்.

பாடல்கள் பரவாயில்லை ரகம்.

செருகப்பட்ட ஸ்டண்ட் சீனும், காலே அரைக்காலணா சில்க் டான்ஸும்.

சக்தி இப்போதெல்லாம் ஆற்றில் ஒரு கால். சேற்றில் ஒரு கால்.

ஒரு 'சிறை'யிலிருந்து தப்பித்துவிட்டால் எல்லாமே சந்தோஷக்கனவுகள்தானா என்ன?

# ஜெயமன்மதன் சொல்லிய படக்கதை

சென்ற வாரத்தின் ஒரு மாலையில் ஜெயமன்மதன் சந்திரோதயம் ஆனவுடனேயே பலகாரஞ் செய்து, பானமருந்தி, தியேட்டர் படிகளில் விடுவிடென்று மேலேறி கடைசிப் படியில் நின்றுகொண்டு, கைகொட்டிக் கலீர் என்று சிரித்து, "அகோ பதுமைகளே, கேளுங்கள். இந்த வாரம் என் முறை. பொறுமை, விசிலடிக்கும் குணாதிசயம் ஆகியவையுடன் இன்ன பிற என்னென்னவோ இருக்கிறதாவெனக் கேட்டீர்களே, நான் சொல்லும் கதையைக் காது கொடுத்துக் கேளுங்கள். அப்புறம் ஙீங்கள் திருவாயைத் திறக்கலாம்" என்று துவங்கி:—

**ஜெயமன்மதன் சொல்லிய ஒரு கைதியின் டைரி**

இரைச்சலற்ற அறிமுகத்தில் எத்தனை கவிதை மின்னல்கள்!

'—டேவிட், வெளியே போகாதே, வெளியே எல்லாம் அயோக்கியப் பசங்க,

போகாதே... போகாதே...

'என்னைத் தூக்குலே போடப் போறாங்க டேவிட்... எம் பொண்டாட்டிகிட்ட இன்னொருத்தனைக் கட்டிக்கிட்டுச் சந்தோஷமா இருக்கச் சொல்லு'—

சமூகப் பிரக்ஞையுள்ள ஆரம்ப வசனங்கள் (பாக்கியராஜ்தானே?) மனத்தில் ஒரு திடுக்கிடலை வேரூன்றச் செய்ய, இருபத்திரண்டு வருடங்களாய் மௌனம் போற்றும் டேவிடை கவனத்துடன் பார்க்கத் தொடங்குகிறோம்.

•

ஜெயிலில் இருந்து வெளிவந்தவுடன் தடாலடித்துச் செல்லும் அந்த மின்வண்டி டேவிடின் சுதந்திரத்தைச் சொல்ல (விஷுவல் எஃபெக்டிற்குப் பாரதிராஜாவை விட்டால் தமிழில் வேறு ஆள் இல்லை, இல்லவே இல்லை) டேவிட் சர்ச் முன் போய் நிற்க முதலில் மணக்கோலம் பூண்ட கார், பின் நான்கு பேர், பின் எட்டு பேர் என டேவிடின் மனம் தனது கடந்து போன வாழ்க்கையில், பாதியில் நின்ற அத்தியாயத்தை அசை போடுவது — ரசிக்கப்பட வேண்டிய புதுக்கவிதை.

டேவிட் வாழ்க்கையில் மனைவி என்ற அற்புதமான அத்தியாயம் ஒருவனால் சிதைக்கப்பட்டு, வேறு இருவரால் கல்லறைக்கு அனுப்பப்படுகிறது — அந்த மூவரை இருபத்திரண்டு வருடங்களாகத் தினம் தினம் மனத்தில் கொன்று — இப்போது நிஜத்தில் செயல்படுத்த வந்திருக்கும் ஒரு சிறகிழந்த பறவையின் கதை. ஒரு பழிவாங்கல் கதைதான் என்றாலும் அதனை நவீனமாகச் சொன்ன விதம் இருக்கிறதே — பாராட்டுக்கள்.

இங்கே கடிதம் எரிக்கப்பட, ஆணவச் சிரிப்புகள் இறைபட, கமல் துடிக்க, இடையிடையே நீதிபதியின் ஆர்டர், ஆர்டர் — அப்புறம் அந்தத் தனித்த குழந்தையின் தொடரும் அழுகுரல்—

கமல் தொப்பியை விசிறியடிக்க, சட்டையை விசிறியடிக்க அது அத்தனை உயர் அதிகாரிகள் மத்தியிலும் விழுவது— பாரதிராஜாவும், எடிட்டரும் எத்தனை 'பாடுபட்டார்களோ இவ்வளவு அழகாய்க் காட்ட,

துடிப்பான ரேவதி, அமரிக்கையான ராதா, ஹாஸ்யமான ஜனகராஜ் — குட்!

ஜெயிலில் இருந்து வெளியே வருகிற நேரத்தில் ஷூ லேஸ் கட்டும் ஒரு பிட்டைச் செருக நம் கமலால் மட்டுமே முடியும்.'

ஸ்டண்ட் ஸீனில் க்ளோஸப்பில் எல்லாம் கமல் அந்தர்பல்டியடிப்பது வயிற்றைக் கலக்குகிறது. ப்ளீஸ், பீ கேர்ஃபுல், டியர் கமல்!

இத்தனை பெரிய தலைகள்தான் உழைக்கிறதே, நாமாவது ஓய்வு எடுத்துக் கொள்வோம் என்று நினைத்துவிட்ட இளையராஜா—

ஒரு சுறுசுறுப்பான எட்டு, பத்து மாடிக் கட்டடத்திற்குப் பக்கத்தில் அந்த உயரத்திற்கு ஒரு பாழடைந்த வீடு,

வீர சிவாஜி கமல், அனுராதாவின் அழகற்ற ஆட்டம் (யூ டூ பாரதிராஜா?) என்று சில சறுக்கல்கள் —

இருந்தும் படத்தை ரசிக்க முடிகிறது என்றால் — உழைப்புத்தான்!

கமலை வைத்து அடுத்த படம் எப்போது பாரதிராஜா?

* * * * *

ஆகவே பதுமைகளே, எத்தனை மோசமான படங்களாக வந்து கொண்டிருந்தாலும் கூட, இம்மாதிரி சிற்சில படங்கள் அவ்வப்போது ரசிக்கத் தக்கதாய் தலைகாட்டுவதாலே இந்தத் தியேட்டரில் நுழைய எந்த ரசிகருக்கும் நீங்கள் சொல்லிய குணாதிசயங்கள் எதுவுமே தேவையில்லை என்பதை இதுவரைக்கும் கேட்டதிலிருந்தே நீங்கள் அறிந்திருப்பீர்களேயானால், இனி யார் இப்படிக் கடந்தாலும் நீங்கள் கைகொட்டி, கலீர் சிரிப்புச் சிந்துவதை விடுத்துப் பேசாமடந்தைகளாக இருக்க வேண்டியது, என்று சொல்லிவிட்டு ஜெயமன்மதன் எல்லாப் படிகளையும் கடந்த தோடு—

பதுமைகள் சொல்லிய படக்கதைகளும் அதற்கு மாறாக ஜெயமன்மதன் சொல்லிய படக்கதையும் நிறைவு பெறுகிறது.

சுபம்! சுபம்! சுபம்!



# படகுத் துறையிலே



அடையாறு போட் கிளப்பில் திரண்டிருந்த இளைஞர்களும், யுவதிகளும் இளைஞர் ஆண்டை வரவேற்கக் கூடிய மாதிரி உற்சாகக் கூட்டமாக இருந்தார்கள்.

இந்தக் கிழக்கத்திய அமெச்சூர் ரோயிங் அசோஸியேஷன் படகுப் போட்டியில், முதல் முதலாகப் பெண்கள் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். எல்லோரும் பத்தொன்பதுக்குக் கீழே. பூனாவிலிருந்து பலர் வந்திருந்தனர்.

ஸ்மிதா ஷிரோலி, பூனா அபிநவ கலாமந்திரில் கமர்ஷியல் ஆர்ட் பயிலும் மாணவி. இங்கே சென்னையில் தங்க மெடலைத் தட்டிக் கொண்டு போனார்.

மௌஷ்மி மட்டுமே பள்ளி மாணவி; கல்கத்தா சௌத் பாயின்ட் பள்ளியில் ப்ளஸ்டூ. ஏற்கெனவே தேசிய அளவில் தங்க மெடல் பெற்றவர்! ஆனால் இங்கே பாவம், நழுவ விட்டார்!

"போட்டிகளின் போது காற்று வீசும் திசையும் சாதகமாக இருக்க வேண்டும்!'' என்றார் பூனம். பயிற்சியின் போது, நீரில் நிலையாகப் படகை நிறுத்திவிட்டு, துடுப்புப் போடச் சொல்லித் தருவார்களாம்!

தனி நபர் செலுத்தும் படகு 18 அடி நீளம் இருக்கிறது. இருவர் செலுத்தும் படகு 34 முதல் 36 அடி. நாலு பேர் எனில் 44 அடி. நாலு பேர் பங்கெடுத்துக் கொள்ளும்போது மட்டும், ஐந்தாவதாக ஒருவர் படகு முனையில் இருந்து கொண்டு நால்வரையும் ஒரே மாதிரி இயங்க வைக்கிறார். இவரை ''காக்ஸன்'' என்கிறார்கள். ராணுவ அதிகாரி, ''லெஃப்ட், ரைட்'' கூறுவது போலத்தான்.

சென்னை அடையாறு போட் கிளப்புக்கு வயசு ரொம்ப அதிகம். பிறந்த வருஷம்: 1867. முதல் படகுப் போட்டி நடந்தது 1888—ல்.

இரண்டு வகை உறுப்பினர்கள். ரோயிங் மெம்பர்ஸ் (40 வயசுக்குக் கீழே.) லான் மெம்பர்ஸ் (40—க்கு மேலே.). இரண்டு உறுப்பினர்கள் முன்மொழிய வேண்டும். நுழைவுக் கட்டணம் 1000 ரூபாய்; மாதச் சந்தா 35 ரூபாய்.


பள்ளி, கல்லூரி மாணவரிடையே படகோட்டும் ஆர்வம் அதிகமாக வேண்டும் என்பதற்காக மாதம் 15 ரூபாய் மட்டுமே வசூலிக்கிறார்கள். 30 ரூபாய் டெபாஸிட். இது விலகுகிறபோது திருப்பித்தரப்படும்!


''சினிமா ஸ்டார், அரசியல் பிரமுகர், யாராவது, மெம்பர்களாய் இருக்கிறார்களா?''

படகுகளைப் பற்றி விளக்கிய இளைஞர் நாராயண் குறும்பாகச் சொன்னார்: ''தொழில், வர்த்தகப் புள்ளிகள் இருக்கிறார்கள். சினிமா நடிகர்கள்?... ஊஹூம்... இது மற்ற விளையாட்டுக்கள் மாதிரி பார்வையாளர்களை ஏராளமாய் ஈர்ப்பது இல்லை. தவிர இதில் சிரமம் இருக்கிறது... திறமையும் தேவை... அதனால் அரசியல்வாதிகள் யாரும் அங்கத்தினராயில்லை!''

— சாருகேசி.

**மேலட்டை வண்ணப்படம்: யோகா.**





"நிஜமாகச் சொல்லு! குமாரசாமி பண்ணின காரியம் தப்பே இல்லையா?" என்று கேட்டார் பெரியவர்.

உடன் வந்த நண்பரைப் பார்க்கிறேன். முகத்தில் ஒரு முறுவலுடன் அவர் மௌன மாகிறார்.

"சொல்ல மாட்டியே! அவன் பண்ணினது நியாயம்னு தோணினா... சட்டுனு சொல்லி டுவியே... ஏன் சொல்லல்லே...? நியாயம் இல்லேன்னுத் தோணறது.. அதான் சொல்ல முடியல்லே..."

சிரித்துக் கொண்டார் பெரியவர்.

"இல்லே சார்! அப்படித் தயக்கம் இல்லே. குமாரசாமியோட நிலையிலே நான் இருந்தா எப்படின்னு யோசிச்சேன். அவன் பண்ணினது நியாயமோ இல்லியோ, தப்புன்னு சொல்லமாட்டேன்..."

"ஏன்?" ஒற்றை வார்த்தையில் கேள்வி பிறந்தது.

"குமாரசாமி ஓர் இண்டலக்சுவல்.. அவ னுக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிறவள் ஒரு

பெண்... சாதாரணமான குடும்ப் வளையத்துக்காரி. அருமையாய்ச் சமைத்துப் போடுவாள். அடுக்கடுக்காய்க் குழந்தை பெற்றுத் தருவாள்... அவனுக்காக மட்டுமே கதவைத் திறந்து வைத்துக் கொண்டு ராத்திரிப் பத்து மணி, பதினொரு மணின்னு குலேப்பட்டினியோடு சாப்பிடாமல் காத்திருப்பாள்... ஆனால்...''

''சொல்லு... கம்டுத பாயிண்ட்... என்ன ஆனால்...?''

''குமாரசாமி ம்ாதிரி ஒரு இண்டலக்சுவலுக்குத் தேவை இந்த மாதிரி ஒரு மனைவி மட்டுமில்லே... அதுக்கும் மேலே... அவனை ரஸிக்கிறது மட்டுமில்லாமே அவனோட ரஸனைகளையும் சேர்ந்து ர ஸி க் க ணு ம். பீதோவனோ... மொஸார்ட்டோ... இல்லே மில்டன்... ஷெல்லி.. வகையறுவோ... எதுவானாலும் அவனோட சேர்ந்து ரஸிக்கிற, விவாதம் பண்ணற ஒரு கம்பானியன்தான் வேணும். தர்ம நியாயம் அது. இதுன்னுப் பார்த்தா குமாரசாமி பண்ணினது தப்புத்தான். ஆனா... கோதை மாதிரி ஒரு கம்பானியன் கிடைக்க முடியும்னு... நான் கூட அம்பேல்தான்...''

கடகடவென்று சிரிப்பு.. கும்பகோணம் வெற்றிலையை மென்று ரஸித்துக் கொண்ட நிலையிலேயே மெய்மறந்த சிரிப்பு... புரை ஏறுகிறது... சமாளித்துக் கொண்டு போய் வாசலில் வெற்றிலையைத் துப்பி, வாய் கொப்பளித்துவிட்டுக் கொஞ்சம் தண்ணீரைக் குடித்துவிட்டுச் செருமலிலிருந்து விடுபடுகிறார். மறுபடி, அனிச்சைச் செயலாக வெற்றிலைச் செல்லத்தைத் திறந்து அடுத்த 'வேளை' வெற்றிலையைத் தயார் பண்ணுகிறார்.



''பர்ஃபெக்ட்லி ரைட் மாது! நீ மட்டுமில்லே... எழுபத்து மூணு வ ய சி லே எனக்கே அப்படி ஒரு கம்பானியன் கிடைச்சாலும் வேண்டாம்னு சொல்வேன்? இது ஸெக்ஸ் சம்பந்தப்பட்டது மட்டுமில்லே. ஸெண்டிமெண்ட் இருக்கு. பரஸ்பரம் இருக்கிற ரஸனைதான் இங்கே முக்கியம். ஆனால் எல்லோருக்கும் இது அமையறதில்லே... பயல் யோகக்காரன். ஜமாய்க்கட்டும் போ...'' என்று பேசிக் கொண்டே போனவர், பேச்சு சட்டென்று திசைமாறுகிறது.

''ஆமாம்... ஒனக்கு எந்த ஊருன்னு சொன்னே...? புதுக்கோட்டையா...?''

''ஆமாம்... பக்கத்திலே திருக்கோகர்ணம்...''

''அப்போ ஒனக்கு சாஸ்திரியைத் தெரிஞ்சிருக்கணுமே. வக்கீல்... ஒய். வி. சாஸ்திரின்னு பேரு. என் கூடப் பாடசாலேலே அத்யயனம் பண்ணினவன். அபார வித்வத்.. மடத்திலே சால்வையெல்லாம் வாங்கினவன்... என்ன பண்ணினான் தெரியுமோல்லியோ? அத்யயனத்தையெல்லாம் விட்டுட்டுக் கருப்புக் கோட்டுக்குப் படிக்கப் போனான். ஒனக்கு அவனைத் தெரியுமோ?''

மனத்தில் எங்கேயோ 'மனக்' கென்று முறிந்து போன மாதிரி ஒரு உணர்வு...

''தெரியுமே! அப்பாகூட அவரண்டை ஜூனியரா இருந்தார்...''

## சுப்ரபாலன்

''சமீபத்திலே அவனைப் பார்த்தியோ?''

மனசில் மறுபடியும் ஒரு 'மனக்.'

''இல்லே சார். பார்த்து ஒரு வ ரு ஷ த்துக்கு மேலே ஆச்சு... புதுக்கோட்டைப் பக்கம் போயே ரொம்ப நாளாச்சு...'' ஒரே பதிலில் இரண்டு பொய்கள், எ ப் ப டிச் சொல்ல முடிந்தது என்று எனக்குள்ளேயே ஒரு வியப்பு.

''பிராண சினேகிதம்னு... அவன்தான்... திடீர்னு வருவன்... என்னமோ கேஸ்... கட்சிக்காரன்..னு சொல்லிண்டு ராஜ்யம் பூரா அலேயறவன்.. மூணு மாசம் முன்னாலே இங்கே என்னைத் தேடிண்டு வந்தான். இந்தக் கழி... மழமழன்னு இருக்கு பாரு... அவன்தான் பிரசண்ட் பண்ணினான். கிழவனுக்கு என்ன வேணும்.:. கைத்தடித் தானே!''




'பெரியவர் காட்டிய கைத்தடியின் முகப்பில் யாளியோ, எதுவோ சிரித்தது. அழகான வேலைப்பாடு நிறைந்த அந்தக் கழியை வந்தது முதலே பார்த்து ரஸித்துக் கொண்டிருந்தேன். இப்போது அதைத் தொடக் கூடப் பார்க்கக் கூட ஒரு நடுக்கம்...

''ஒண்ணு செய்யறியா, மாது! இப்போ மதுரைக்குத்தானே போயிண்டிருக்கே.. அப்படியே புதுக்கோட்டையிலே எறங்கிட்டுப் போயேன்.. அதான் மணிக்கு மூணு பஸ் போயிண்டே இருக்கே.. அவனுக்கு மோர் மிளகாய் வத்தல்னு சிரு... இங்கே வந்த போது ஆசையாச்சாப்பிட்டான். போறச்சேயும் ஒரு பை நிறைய வாங்கிண்டு வேறே போனன்.. கொஞ்சங்கூட வெட்கப்படவே மாட்டான். இன்னிக்கு மறுபடியும் என் பேத்தி பண்ணி வச்சிருக்கா. தரச் சொல்றேன். அவன்கிட்டே நான் குடுத்தேன்னு சொல்லிக் குடுத்துட்டுப் போயேன்...''

மனசில் 'மளக்' என்று இதுவரை நான் கைந்து முறிவுகள் ஆகிவிட்டன. அங்கே. இருக்கவே பிடிக்கவில்லை. நண்பருக்கு ஜாடை காட்டினேன். புறப்பட ஆயத்தமாவதற்குள் கிழவரின் கட்டளை பொட்டலமாக என் கையில் வந்து விழுந்துவிட்டது.

படியை விட்டு நண்பருடன் இறங்கித் தெருவில் நடந்தபோது மனம் இன்னும் இறுகிப் போய்விட்டிருந்தது. சிரமப்பட்டு வார்த்தைகளைத் தேடிப் பேச முயன்றேன்.

''கணபதி! பெரியவர் ஹார்ட் வீக்குன்னு சொன்னியே நிஜம்தானா? இப்படி வெத்தலை மேயறார்... இப்படிச் சளசளன்னு பேசறார்...''

''ஆமாம், மாது! இதுதான் இப்போ அவருக்கு டானிக். மனசிலே சின்ன அதிர்ச்சி கூட இல்லாமச் சந்தோஷமாச் சிரிச்சுப் பேசிண்டிருக்கிற வரைக்கும் அவருக்குக் கவலை இல்லே. சந்தோஷம் ஆனந்தம்'தான் அவருக்கு மருந்து. பேப்பர் படிக்கறதில்லே... பார்வை அநேகமாப் போயாச்சு... இல்லேன்னா ஏதாவது இழவு நியூஸ் காதிலே விழுந்துடுமோன்னு பயம்... அஞ்சலே, பத்துலே வருவேன்... வந்து பார்த்துப் பேசிண்டிருப்பேன்... எப்பவும் இதை மாதிரிச் சலசலப்புத்தான்...''

''கணபதி, நான் இந்த வத்தலை என்ன பண்ணட்டும்?

''பெரியவர் பரவாயில்லே! நீ தாங்குவியோ? அவரோட சினேகிதர் ஒய். வி. சாஸ்திரிக்கு இனிமேல் மோர் மிளகாய் வத்தல் வேண்டாம். இன்னிக்கு 'ஆபீச்சுவரி' பார்த்தியோ?''

தெரு, என்றும் பாராமல் அப்படியே என்னைக் கட்டிக் கொண்டான் கணபதி.

''ஓ... காட்...''

அந்த இனிமையான சந்திப்பின் கடைசி நிமிஷங்களில், பெரியவரின் நண்பர் மறைந்துவிட்ட செய்தியைச் சொல்லாமல் சமாளிக்க முயன்றதின் அழுத்தம் இப்போது சற்று லேசாய்க் குறைந்தது...

# உலகம் சுற்றும் சிவாச்சாரியார்



சாம்பமூர்த்தி சிவாச்சாரியர் என்றதும் சென்னை தம்புசெட்டித் தெருவிலுள்ள ஸ்ரீ காளிகாம்பாள் கோவிலும், காளிகாம்பாள் கோவில் என்றதும் திரு. சாம்பமூர்த்தி சிவாச்சாரியாரும் வடசென்னைவாசிகளுக்கு ஞாபகத்திற்கு வருவது இயற்கை. வருகிறவர்களுக்கெல்லாம் தங்கள் கோவில், நம் கோவில் என்கிற உணர்வை ஏற்படுத்துபவர்.

அதிக உயரமில்லாது போனாலும் கம்பீரத் தோற்றம். சற்றே தூக்கி முடிந்த கூந்தல். ருத்திராட்சம். தீட்சண்யப் பார்வை. உதட்டில் சிரிப்போடு சதா இழையோடும் 'தாயே காப்பாத்தும்மா...' யார் போய் நமஸ்கரித்தாலும் சொல்கிற 'அம்பாளைச் சேரட்டும்...'

நம் நாட்டில் மட்டுமின்றி எந்த தேசத்தில் இந்துக்கள் கோவில் கட்டினாலும் சாம்பமூர்த்தி சிவாச்சாரியாரைத் தருவித்துக் கும்பாபிஷேகம் நடத்த முயற்சி செய்வர். அறுபது கடந்து மணிவிழாக் கண்ட இந்த ஆகமச் சக்கரவர்த்தியிடம் சில கேள்விகள்...

இந்துமதி: தங்களை உலகம் சுற்றும் சிவாச்சாரியார் என்று எல்லோரும் அழைப்பதை அறிவேன். எப்படி இந்த சேவை நடக்கிறது என்பதைச் சற்று விரிவாகச் சொல்ல முடியுமா...?

சா. சிவா: முதல் முதலாக 1969, அக்டோபரில் மலேசியாவிற்கு மந்திரி துன் சம்பந்தம் வீரமாகாளியம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை நடத்திக் கொடுக்கக் கூப்பிட்டார். ஒரு நாடியில் படித்தே என்னை அழைத்தார்.

இ.மதி: நாடி படித்துக் கூப்பிட்டாரா...?

சா. சிவா: ஆமாம். மீனாட்சி நாடியில் 'இன்னார்தான் இந்தக் கும்பாபிஷேகத்தை நடத்த வேண்டும்'மென்று வந்ததால் துன் சம்பந்தம் என்னைக் கூப்பிட்டார். அதுதான் நான் வெளிநாடு சென்று நடத்திய முதல் கும்பாபிஷேகம். அதன் பின்னர் தமிழர்கள் எங்கெல்லாம் கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் நடத்துகிறார்களோ, அங்கெல்லாம், அழைப்பின் பேரில் சென்று கும்பாபிஷேகம் விளக்கு பூஜை எல்லாம் செய்துவிட்டு வருகிறேன்.

இ. மதி: அப்படி எந்தெந்த நாடுகளுக்குச் சென்றிருக்கிறீர்கள்?

சா. சிவா: மலேசியா, சிங்கப்பூர், நிறைய தரம் போயிருக்கிறேன். அமெரிக்காவில் ஹூஸ்டன், டெக்ஸாஸ், ராலே, பிட்ஸ்பர்க், நியூயார்க், லாஸ் ஏஞ்ஜெல்ஸ், பென்சில்வேனியா முதலிய இடங்களுக்கும், ஜப்பானில் டோக்கியோ, ஒஸாகா, நாரா ஆகிய இடங்களுக்கும், இரண்டு முறை லண்டனுக்கும் சென்றிருக்கிறேன்.

இ. மதி: நீங்கள் சென்ற அந்நிய நாடுகளில் சீதோஷ்ண நிலைக்கேற்ப ஆகம முறைகள் மாறுபடுகிறதா அல்லது இங்கே செய்கிற மாதிரியே செய்யப்படுகிறதா...?

சா. சிவா: எந்த இடமானாலும் ஒரேமாதிரித்தான் பூஜையோ, ஆகம சாஸ்திரமோ முரண்பாடற்று நடைபெறுகிறது. லண்டனில் மட்டுமே சில சந்தர்ப்பங்களில் சட்டை, ஸ்வெட்டர் போட்டுக் கொண்டு செய்ய வேண்டியதாயிற்று.

இ. மதி: வெளிநாட்டு பக்தர்களுக்கும் இங்கே இருக்கிற பக்தர்களுக்கும் ஏதாவது வித்தியாசம் காணுகிறீர்களா?

சா. சிவா: ஒரே ஒரு வித்தியாசத்தைத் தவிர வேறு எந்த வித்தியாசமும் என் கண்ணுக்குப் புலப்படவில்லை. அங்கே பக்தி அதிகமிருக்கிறது. இங்கே புறக்கடைக் கீரை மாதிரிக் கோவில்கள் அதிகம் இருப்பதால், பக்தி சற்றுக் குறைந்து காணப்படுகிறது.

இ. மதி: அமெரிக்கா, லண்டன், ஜப்பான், போன்ற தேசங்களில் பஞ்சகச்சம், ருத்திராட்சம் இவற்றுடன் போன போது உங்கள் உணர்வும், அந்த தேசத்தவர் உணர்வும் எப்படி இருந்தது?

சா. சிவா: இந்த தேசத்தில் என்னை இப்படிப் பார்க்கிறபோது சிரிக்கிறவர்களும், கேலி பண்ணுகிறவர்களும் இன்னமும் இருக்கிறார்கள். ஆனால் அங்கெல்லாம் என்னை நிறுத்தி, என்னோடு புகைப்படம் எடுத்துக் கொள்கிறார்கள். மரியாதை காட்டுகிறார்கள். நமது மந்திரங்கள் ஒவ்வொன்றிற்கும் அர்த்தம் கேட்கிறார்கள். அதிலும் ஜப்பானியர்களைப் போல் மரியாதை மிகுந்தவர்களை நான் பார்த்ததே இல்லை.

இ. மதி: கும்பாபிஷேகத்தின் தாத்பரியம் என்ன? கும்பாபிஷேகம் செய்யாமல் கோவில் கட்டினதும் அப்படியே வழிபாடு செய்யக் கூடாதா?

சா. சிவா: கூடாது. வீடு கட்டி முடித்ததும் அப்படியே குடித்தனம் நடத்தப் போய்விடுவ

இந்துமதி

தில்லை. கிரகப் பிரவேசம் செய்த பின்னரே போகிறோம். அதே மாதிரித்தான் கும்பாபிஷேகமும். புனிதம் ஏற்படுவதற்காகச் செய்யப்படுவது. மந்திரங்களாலும், ஒலிகளாலும்தான் இந்தப் புனிதத் தன்மையை ஏற்படுத்த முடியும். கடவுள் இல்லாத இடம் இல்லை. கோவில் கட்டி நிர்மாணிக்கிறபோது எங்கும் நிறைந்திருக்கிற கடவுளை ஓர் இடத்தில் கொண்டு வந்து நிறுத்துகிறோம். மின்சாரம் எங்கே இருந்தாலும், டிரான்ஸ்ஃபார்மர் கொண்டு வந்து வைத்து மின்சாரத்தை ஈர்த்து அதன் மூலம்தானே விநியோகிக்கிறோம். அதேபோலத்தான் கோவிலுக்குள் விக்கிரகமாகக் கடவுளை ஈர்த்துப் பிரதிஷ்டை செய்து தெய்வீகத்தை விநியோகிக்கிறோம். விக்கிரகம் செதுக்கப்படுகிற கல்லில் ஆண் கல், பெண் கல், அலிக்கல் என்றிருக்கிறது. ஆண் கல்லில் பிள்ளையார், முருகன், விஷ்ணு, சிவன் முதலிய ஆண் கடவுள்களும், பெண் கல்லில் அம்பாள், லக்ஷ்மி, சரஸ்வதி, துர்க்கை, பார்வதி, முதலிய பெண் கடவுள்களையும் வடிக்கிறார்கள். அலிக்கற்கள், தரை, வாசற்படி, மற்ற படிகள் போட உபயோகப்படுகிறது. எல்லாவற்றிற்கும் ஒலி வித்தியாசம் உண்டு. அஷ்டபந்தன மருந்துகளிலும் சில வித்தியாசங்கள் உண்டு. திருமேனிகளின் பஞ்ச உலோகங்களில் செம்பு அதிகம் கலந்தால் ஈர்ப்பு அதிகம் ஏற்படும். கோவில்களில் ஜனங்கள் அதிகம் வரவர ஈர்ப்புச் சக்தியும் அதிகமாகும்.

இ. மதி: நம் தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டாலே ஆயிரமாயிரம் கோவில்கள் உண்டே. இவை அனைத்தும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டவைதாமா?

சா. சிவா: செய்தால்தான் நல்லது. ஆனால் மகான்களால், பெரிய பெரிய சித்தர்களால் நிர்மாணிக்கப்பட்ட சில கோவில்கள் — அந்தந்த மகான்களின் தவ வலிமையாலேயே சக்தி பெற்றுப் புனிதமடைகின்றன.

இ. மதி: ஒரு காலக்கட்டத்தில் பிரபலமாகிற ஆலயங்கள் மற்றொரு காலகட்டத்தில் பிராபல்யம் குறைந்து வேறொரு ஆலயம் பிரபலமாகிறது. கட்சி மாறுகிற அரசியல்வாதிகளைப் போல் ஜனங்கள் இந்த ஆலயத்தை நோக்கி ஓடுவதன் காரணமென்ன?

சா. சிவாச்: இதற்கு மக்களின் நிலையாமை — காரணமாகிறது. நினைத்த காரியங்கள், அல்லது பிரார்த்தனைகள் நிறைவேறுகிறது என்று செய்தி பரவினால் அந்தக் கோவில்களில் கூட்டம் சேருவது இயல்பு. இது அவரவர் மனப்பக்குவத்தைப் பொறுத்தது.

இ. மதி: அபிஷேகக் செய்யப்படுகிற பால், தேன் இவை முற்றிலும் வீணாகின்றன. இந்தியா மாதிரி ஏழை தேசத்தில் வறுமையில் வாடுபவர்களுக்கு அவற்றை விநியோகிக்கலாம் என்று ஒரு கருத்து நிலவுகிறது. இதற்கு உங்கள் பதில்...?

சா. சிவாச்: நிச்சயம் இவை வீணானவை அல்ல. உழவன் நிலத்தை உழுது ஒரு மூட்டை நெல்லைக் கொண்டு போய் மீண்டும் நிலத்

## அழகியல் ரசனைக்கு அறுபது வயது

பத்து வயதுச் சிறுவனுக்கு ஒரு வித்தியாசமான ஆசை; கடைகளில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களைப் பார்க்கும்போதெல்லாம், இப்படி ஒரு புத்தகத்தில் தன்னுடைய பெயர் இருக்காதா என்று.

நிறைவேறியது.

படித்த படிப்புக்கும் உத்தியோகத்துக்கும் பல நேரங்களில் தொடர்பு இருப்பதில்லை. அப்படியே, ரெயில்வே உயர் அதிகாரியாகப் பல ஆண்டுகள் பணியாற்றிய திரு. ஏ. வி. சுப்பிரமணியனுக்கும் அமைந்தது.

சங்க இலக்கியங்கள், இதிகாச புராணங்கள், மேலை நாட்டு இலக்கியங்கள், சமஸ்கிருத காவியங்கள் — என்று படிப்பது, தான் பெற்ற இன்பத்தை மற்றையோரும் பெற வேண்டும் என்பதற்காக எழுதுவது என்றே ஏ.வி.எஸ்.ஸின் ஓய்வு நேரங்கள் பயன்பட்டன.

சராசரியாக ஆண்டுக்கு ஒன்று என்கிற அளவில் முப்பத்தெட்டு நூல்களுக்கு ஆசிரியரான ஏ.வி.எஸ்., இப்போது அறுபதாவது வயதை நிறைவு செய்கிறார். அன்பர்கள் அண்மையில் இவருக்கு விழா எடுத்துப் பாராட்டினார்கள். விழாவிலும் ஒரு சிறப்பு.



ஏ. வி. எஸ். எழுதிய இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன. ஆங்கிலத்தில் ஒன்று, தமிழில் ஒன்று.

தமிழிலக்கியத்தில் காணப்படும் அழகியல் அனுபவங்களை ஆராய்ந்து பல்வேறு தலைப்புக்களில் நூல்களை வெளியிட்டுள்ள வகையில் ஏ.வி.எஸ். மற்ற நூலாசிரியர்களிலிருந்து மிகவும் வித்தியாசமானவர். கம்பராமாயணத்தில் பூக்கொய் படலம், உண்டாட்டுப் படலம் என்று வருகிற மாதிரி இலக்கியங்களில் கள வர்ணனைகளாக அமைவதைப் பலரும் ஒதுக்கிவிட்டுப் போவார்கள். ஆனால் அவற்றையே ஏ.வி.எஸ். தேடிப் பிடித்து அலசுவார். அழகியல் நுகர்வில் புகழ் பெற்ற ஆங்கில நூலாசிரியர்கள் போல இவரும் தமிழில் எழுதினார். தமிழில் அதிகம் பேர் ஈடுபடாத துறை இது. விரிவான முறையில் ''சூழ்களனும் சுவை வளமும்'' என்கிற தலைப்பில் ஒரு நூல் விரைவில் வெளியாக இருக்கிறது.

அஸ்ஸாம், கல்கத்தா, பம்பாய் என்று பாரதம் முழுவதும் சுற்றிச் சுற்றிப் பணியாற்றிய காலத்து அனுபவங்களை வைத்து நாவல்களும், சிறுவர்க்கான வரலாற்று நூல்களும் எழுதியுள்ள ஏ.வி.எஸ். அண்மையில் தமிழக அரசால் மொழி பெயர்ப்புப் பணிக்காகப் பாராட்டப்பட்டிருக்கிறார். சங்கப் பாடல்களின் ஆங்கில மொழி பெயர்ப்பான **"The Squirrel in the Courtyard"** குறிப்பிடத்தக்க ஒரு நூல்.

— சுப்ர பாலன்

நாராயணன் கிருபை! உ நாராயணன் சகாயம்!

## காசி – காஷ்மீர் – பத்ரிநாத் – நேபாள யாத்திரை

நாளது 2.5.85ல் ஈரோட்டிலிருந்து, ஒரு 3டயர் ஸ்லீப்பர் கோச், புறப்பட்டு சேலம்-பெங்களூர் வழியாக 30 நாட்களில்

**பண்டரிபுரம் - பம்பாய் - ஆக்ரா - மதுரா - டெல்லி - காஷ்மீரம் - அமிர்தசரஸ் - ஹரித்துவார் - ரிஷிகேஸ் - பத்ரிநாத் (கேதார் நாத்) - அலகாபாத் - அயோத்தி - காசி - நேபாளம் - கயா - கல்கத்தா - பூரி - கோனாரக், சிம்மாசலம்**

முதலிய ஸ்தலங்களில் சேவித்து, சேலம் திரும்பிவர ஏற்பாடு செய்துள்ளோம். ரயில் கட்டணம் (பிராமணர்கள் தயார் செய்யும்) தினசரி 3 வேளை காபி, டிபன், போஜன வசதி ஊர்சுற்றிப்பார்க்கும் செலவு தங்குமிட வாடகையுள்பட

**டிக்கெட் கட்டணம் ரூ. 1990/- மட்டும்**

(நேபாளம் உள்பட காஷ்மீர், பத்திரி நாத் மலைப்பயண செலவுகள் ரூ 750 தனி)

பயணத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் ரூ 300 அட்வான்சுடன் விண்ணப்பிக்கவும்.



ஸ்ரீ சந்திரசேகரா டிராவல்ஸ்
29 - C, சிங்காரப்பேட்டை கடை தெரு
குகை - சேலம் 636 006. போன்: 62531

குறிப்பு: 1. நேபாளம் உள்பட, மற்றெந்தயாத்திரைக்கும்பெஷியையும் விட, குறைந்த செலவில், நிறைவ க்ஷேத்திரங்களுக்கு ஒவ்வொரு முறையும் அழைத்து சென்று வருகிறோம்.
2. எக்காரணம் கொண்டும், யாத்திரை நடுவில் யாத்திரிகர்களிடம் பணம் கேட்டு தொந்தரவு செய்ய மாட்டோம்.
3. LTC & LFC சலுகையில் அரசு ஊழியர்கள் இதில் கலந்து கொள்ளலாம்.

அன்பும் பணிவுமுடையவர்கள்
C. திருவேங்கடம் & காங்கேயன்
(டூர் ஆர்கனைஸர்ஸ்)

தில் கொட்டுகிறான். அது வீணா, சொல்லுங்கள்...?

இ. மதி: உழவன் கொட்டுகிற நெல் மீண்டும் நெல்லாகி அறுவடை செய்யப்பட்டு விடுகிறதே?

சா. சிவாச்: அதுபோல உலகைப் படைத்து நமக்கு இத்தனை வசதிகளைச் செய்துகொடுத்த இறைவனுக்கு நன்றி செலுத்தி பிரார்த்தித்துச் செய்யச் செய்ய ஒன்றுக்குப் பத்தாகக் கிடைக்கும். ஆண்டவனுக்குச் செய்கிற எதுவும் வீணில்லை. வீண் என்பவர்கள் வேறுவிதமான கண்ணாடி போட்டுக் கொண்டு பார்க்கிறார்கள்.

இ. மதி: நீங்கள் செய்கிற யாகம், ஹோமம் இவற்றிற்கு என்ன பலன்? அல்லது வெறும் மனோதத்துவ ரீதியில் செய்யப்படுகிற சைக்கோதெரபிதானா?

சா. சிவாச்: இல்லை. ஹோமம், யாகம் இவைகளுக்கு நிச்சயம் பலன்கள் உண்டு. அப்போது ஏற்படுத்தப்படுகிற புகையினால் தீய சக்திகள் விரட்டப்படுகின்றன. இன்னின்ன சமித்துக்களால் ஏற்படுத்தப்படுகிற புகை இன்னின்ன சக்தியைத் தரும் என்பது நிஜம்.

இ. மதி: ஆலயங்களில் குறி சொல்வது அதிகரித்து விட்டதே. இது வியாபார நோக்கத்திற்காக ஏற்பட்டதுதானே?

சா. சிவாச்: இல்லை. குறி கேட்பதால் மனிதர்களுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. ஊக்க சக்தியை அது அளிக்கிறது. நம்பிக்கையே வாழ்க்கையின் ஆதாரம். ஆனால் குறியினாலேயே மொத்த காரியமும் நடைபெறுவதில்லை. முயற்சி வேண்டும்.

இ. மதி: மிருத்யுஞ்ஜ ஹோமம் செய்வதால் உயிர் போவது தடுக்கப்படும் என்பது எப்படி நிஜமாகும்?

சா. சிவாச்: இது ஒரு நம்பிக்கை, முயற்சி தான். ஒரு நோயாளியின் உயிர் பிரியப் போகிற கடைசி நேரத்திலும் டாக்டர் ஊசி போட்டு மரணத்தைத் தடுக்கப் பார்க்கிறாரே ஏன்? இதயத் துடிப்பு நின்று போன ஒருவருக்குக் கூட இதயத்தை மஸாஜ் செய்து துடிப்பை ஏற்படுத்த முயற்சி செய்கிறார் அல்லவா? கிரகங்களுக்குச் சாந்திகளும் பரிகாரங்களும் கூட இதே போன்ற முயற்சிகள்தாம். விஞ்ஞான உணர்வும், இறையுணர்வும் ஒன்றுக்கொன்று அனுசரணை.

இ. மதி: ஆன்மீக விஷயங்களில் அரசியல் கலப்பதாகக் கருதப்படுகிறதே?

சா. சிவாச்: ஆன்மா லயிக்கிற இடமே ஆலயம். இதில் நிர்வாகம் சரிவர நடக்காமல் தனிப்பட்ட மனிதர்களால் கருட்டப்படுகிறபோது அதைத் தடுக்க அரசாங்கம் நுழைகிறது. ஆனால் நுழைகிற சில அரசாங்க அதிகாரிகளும் அதே தவற்றைச் செய்து விடுகிறார்கள்.

இ. மதி: தமிழில் செய்யப்படுகிற அர்ச்சனையில் சமஸ்கிருத மொழிக்கு இருக்கிற அதே த்வனி, அதே மகிமை உண்டா?

சா. சிவாச்: மூல மந்திரங்களை சமஸ்கிருதத்தில் மட்டுமே சொல்ல வேண்டும். ஆனால் போற்றிகளைத் தமிழில் சொல்லலாம். மதுரையில் எல்லாக் கோவில்களிலும் மிக அழகாகத் தமிழில் அர்ச்சனை செய்யப்படுகிறது.

இ. மதி: கோவில் தொழிலைப் பிராமணர்கள்தான் செய்ய வேண்டுமா?

சா. சிவாச்: அப்படி அல்ல. இத்தொழில் பரம்பரையாக வருவதால் ரத்தத்தில் ஊறிப் போகிறது. என் பையனைத் தேங்காய் உடைக்கச்சொல்லுங்கள். ஒரே அடியில் சரியாக உடைப்பான். உங்கள் பையனை உடைக்கச் சொன்னால் ஏறுமாறாக உடையும். பரம்பரையாக இருப்பதால் நுட்பம் சுலபமாகத் தொடருகிறதே தவிர மற்றபடி ஜாதிக்கும், இதற்கும் சம்பந்தமில்லை. ஜாதி இரண்டொழிய வேறில்லை.

இ. மதி: நான் சென்ற ஒரு மடத்தில் பக்தர்களுக்குப் பகல் உணவு தரப்படுகிறது. ஆனால் அதை பிராமணர், பிராமணர் அல்லாதார் என்று பிரிக்கப்பட்டுச் சாப்பிடுகிற இடங்கள் கூட தனித்தனியாக ஒதுக்கப்படுகிறது. எதற்காக இந்தப் பாகுபாடு?

சா. சிவாச்: அனுஷ்டானங்களில் ஏற்படுகிற வித்தியாசங்கள் தான் இதற்குக் காரணமே தவிர ஜாதி அல்ல. நான் எல்லோருடனும் உட்கார்ந்து சாப்பிடுவேன். ஒரு பெரிய பந்தியில் சாப்பாடு பரிமாறப்படுகிற போது எல்லாம் பரிமாறி முடித்த பின்னர் பரிசேஷணம் செய்துவிட்டே நான் இலையில் உள்ளதைத் தொடுவேன். வேறு சிலர் இலையில் போடப் போடச் சாப்பிடுபவர்களாக இருக்கலாம்.

இ. மதி: கிறிஸ்துவ மதத்தில் ஞாயிற்றுக் கிழமையானால் சர்ச்சிற்குப் போக வேண்டும் என்றும், இஸ்லாமிய மதத்தில் ஒரு நாளைக்கு ஐந்து தரம் தொழுகை நடத்த வேண்டும் என்றும் இருக்கிற மாதிரி இந்து மதத்தில் ஒரு ஒழுங்குமுறை ஏன் இல்லை?

சா. சிவாச்: இருக்கிறது. கடைப்பிடிக்கப் படுவது இல்லை. கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள மத ஒற்றுமை இங்கே இல்லை. அந்த ஒற்றுமையைக் கூட்டுப் பிரார்த்தனைகளினால்தான் ஏற்படுத்த முடியும். கூட்டுப் பிரார்த்தனையை மடாதிபதிகள் நடத்த முடியும். ஆனால் சில மடாதிபதிகளைப் பார்க்கவே முடிவதில்லை. பிரதம மந்திரியைக் கூடச் சந்தித்துவிடலாம். ஆனால் மடாதிபதிகளைச் சந்திப்பது கடினமாக இருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும். இந்து மத வளர்ச்சி, ஒற்றுமை இவற்றுக்காக மதத் தலைவர்கள் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்துப் பாடுபட வேண்டும். கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் உலகம் முழுதும் தங்கள் மதம் பரவ வேண்டும் என்று பாடுபடுகிற போது நாம் நம் நாட்டிலாவது இந்துமதம் நிலைக்க, தழைக்க, ஒற்றுமையாகப் பாடுபடக் கூடாதா? ஓர் உயர்ந்த நோக்கில் இதைச் சொல்கிறேன், ஏதோ குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காக அல்ல.




3.3.85 இதழில்

புதிதாய்ப் பிறந்தாள்

ஜெயரதன்

எழுதும்

புதிய தொடர்கதை ஆரம்பம்

அஞ்சலி

# கே.டி.கே

வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து நடந்த போராட்டத்தின் உச்சகட்டமான 1942—

"வெள்ளை ஆட்சியின் போலீஸ் கொடுமையை ஒடுக்க வேண்டுமானால் நம்மில் பலர் கடமையை முடித்துவிட்டுத் தற்கொலைக்கும் தயாராக இருக்க வேண்டும். உங்களில் எத்தனை பேர் இதற்குத் தயார். தயார் என்றால் உடனே ரத்தக் கையெழுத்திடுங்கள்"— இவ்வாறு சொல்லிவிட்டு முதல் ரத்தக் கையெழுத்தைப் போட்டு அமர்ந்தான் அந்த வாலிபன். கூட்டம், 'வந்தே மாதரம்' கோஷம் போட்டு உணர்ச்சி வெள்ளத்தில் விம்மி வடிந்தது. கூட்டத்தினரை அந்த அளவுக்குத் தேச பக்தியூட்டி விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற வைத்த வாலிபன் 27 வயதான கே. டி. கோசல்ராம்தான்.

தெற்கத்திய மாவட்டங்களில் கே. டி. கே. என்றால் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அந்த அளவுக்குப் பொது மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதில் ஆர்வம் காட்டிச் செயல் ஆற்றினார். தனக்கு எந்த விதப் பிரச்னை, துக்கம் இருந்தாலும், பொது மக்களின் பிரச்னைக்குப் பரிகாரம் தேடுவதில் ஆர்வமாக இருந்தார் என்பதற்கு ஒரு உதாரணம்—

1948—ல் கடுமையான பஞ்சம். கோசல்ராம் அவர்களின் குழந்தை அச்சமயம் இறந்துவிட்டது. மயானத்தில் செய்ய வேண்டிய சடங்குகளை முடித்துவிட்டு உடனே திருநெல்வேலிக்குப் புறப்பட்டுவிட்டார். மயானத்திற்குச் சென்றுவிட்டு நேராக வீட்டிற்குத்தான் செல்ல வேண்டும் என்ற உறவினர்களின் வேண்டுகோளை உதறித் தள்ளினார். திருநெல்வேலிக்கு உடனடியாகச் சென்றது கலெக்டர் கூட்டிய 'உணவு நெருக்கடியைத் தீர்க்கப் போட்ட ஆலோசனைக் கமிட்டி' கூட்டத்திற்காகத்தான்.

மணிமுத்தாறு திட்டம் நிறைவேறியதே கே.டி.கே. யினால்தான். அரசு பலவித சாக்குப் போக்குகள் சொல்லித் திட்டத்தைக் கிடப்பில் போட எத்தனித்த போது விடாப்பிடியாக போராடினார் கே. டி. கே. கடைசியாக அரசு, பொதுமக்களின் பங்கை ஒரு கோடி ரூபாய் வசூலித்துத் தாருங்கள் என்று கே. டி. கே. யிடம் கூறியது. ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டார். கிராமம், கிராமமாகச் சென்று அந்தத் திட்டம் நிறைவேறினால் அந்தப் பகுதி மக்கள் எப்படிப் பயனடைவார்கள் என்பதை விளக்கினார். ஒரு வாரத்திற்குள்ளேயே அரசு கேட்ட பணத்திற்கும் மேலாக 25 லட்ச ரூபாயை வசூலித்துக் காட்டினார். திட்டமும் நிறைவேற்றப்பட்டு இன்று அந்தப் பகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் முப்போகம் விளைவிக்கின்றனர்.

ஒரு காரியத்தை எடுத்துக் கொண்டால் அதை முடிக்கும் வரை ஓய மாட்டார். ஆறுமுகநேரியில் சிதறிக் கிடந்த உப்பளத் தொழிலாளரை ஒன்றுபடுத்திக் கூட்டுறவு நிறுவனம்



அமைத்த பெருமை அவரையே சாரும். இதே போல் அகதிகளுக்காக நாசரேத்தில் நிறுவிய கூட்டுறவு நூற்பாலை.

அவருடன் பேசும்போது ஒருவித படபடப்பும், கோபமும், விரக்தியும் வெளிவந்தாலும், இதயம் இளகியது: இரக்க சுபாவம் மிக்கது. கே. டி. கே.யை நன்கு புரிந்து கொண்டவர்கள் இதை அறிவார்கள்.

'தினச்செய்தி' என்ற பத்திரிகையை அவர் நடத்திவந்தபோது பாடப் புத்தகங்களில் பிரிவினையைத் தூண்டக் கூடிய கருத்துடைய கட்டுரைகள் வெளிவந்தன. அப்போது காங்கிரஸ் அரசு நடந்தாலும், பத்திரிகையில் கடுமையாகச் சாடி, டெல்லிவரை சென்று, பாடப்புத்தகங்களில் இருந்த அந்தக் கட்டுரைகளை நீக்கினார்.

நெல்லை மாவட்டம் சிறந்த தேச பக்தரை, தொண்டுள்ளத்தை இழந்து நிற்கிறது.

—ப்ரியன்

புதிய முயற்சி

# அரங்கேறுகிறார் ஆதிகவி

சில ஆண்டுகளுக்கு முன்னர் "கம்பர் தரும் காட்சி" என்ற தலைப்பில் ஒலி, ஒளி அமைப்புடன் கூடிய ராமாயண நாடகத்தைப் பரந்த திறந்தவெளி அமைப்பில் சென்னை வாசிகள் கண்டுகளித்தனர். இதனை உருவாக்கித் தந்தவர் கே. எஸ். ஸ்ரீனிவாசன்.

கம்பனையும், வால்மீகியையும் கரைத்துக் குடித்தவர் இவர். இரு மகாகவிகளையும் ஒப்பு நோக்கிக் காவியச் சுவைகளை விளக்கி "காவிய ராமாயணம்" என்ற நூல் படைத்தவர்.

இப்போது புதிதாக ஒரு முயற்சியில் இறங்கியிருக்கிறார். வால்மீகியின் இலக்கியச் சுவை உணரப்பட்டால் போதாது. அவரது நாடகப் பாங்கையும் அனைவரும் அறிய வேண்டும் என்பதற்காக நூறு நிமிட நேர இசை நாடகம் ஒன்றை அமைத்துள்ளார்.

முழுக்க முழுக்க வால்மீகி சுலோகங்களையும், அவற்றையொட்டிய உரையாடல்களையும் இணைத்து சமஸ்கிருத இசை நாடகம் உருவாக்கியுள்ளார்.

சமஸ்கிருத மொழி தொடர்பான ஆக்கபூர்வமான காரியங்களுக்காக மத்திய அரசின் கல்வி இலாகா 'தேசிய சமஸ்கிருத கேந்திரம்' நிறுவியுள்ளது. அதன் ஆதரவுடன் நடக்கிறது கே. எஸ். ஸ்ரீனிவாசன் தயாரிப்பான வால்மீகி ராமாயணம்.

இசை நாடகத்துக்கு இசைதானே அதிமுக்கியம்? டேப்பில் பதிவு செய்யப்பட்டு ஒலிக்கும் இசை மற்றும் குரல்களுக்கு ஏற்ப, நாடக நடிகர்கள் அரங்கில் தோன்றி வாயசைப்பார்கள். இந்த இசையை நாடகத்தைப் பார்த்து ரசிக்க மட்டுமின்றித் தனித்துக்கேட்டும் மகிழத் தக்கவிதத்தில் சிறப்பாக அமைத்துள்ளார் எஸ்.வி.ரமணன். ஆம், நேரம் நல்ல நேரம் எஸ். வி. ரமணனேதான்!



• கே. எஸ். ஸ்ரீனிவாசன்.



• ஆதி காவியத்தின் மூல விதை. ஆண் பறவை வேடன் அம்புக்கு இரையாக, பெண் பறவை பரிதவித்துத் துடிக்கிற காட்சி. — தேசிய மியூசியமில் உள்ள பழங்கால ஓவியம்.

இந்த இதழ் வெளியாகும் போது உதவி ஜனாதிபதி ஆர்.வி. ஆரம்பித்து வைக்க, நாடகம் அரங்கேறியிருக்கும் புதுதில்லியிலே.

எஸ். வி. ரமணன் சொல்வது: ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கு மட்டுமே, லாகவமாகப் பேச வரும் மொழி சமஸ்கிருதம் என்கிற எண்ணம் அடிபட்டுப் போகிற அளவில் வசனங்களைத் தெளிவாகவும், இனிமையாகவும் எல்லாத் தரப்பாருமே பேசியிருக்கிறார்கள். இது வெறும் மந்திரங்களின் மொழி மட்டுமில்லை. பாரதம் முழுமைக்குமே பொதுவான பண்பாட்டுச் செல்வம் என்பதைப் பறைசாற்றச் செய்யப்பட்ட முயற்சி."

சுப்ர. பாலன்.

## எதிர்க்கட்சிகளின் எதிர்காலம்

**நடந்து முடிந்த தேர்தலையொட்டி ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ் அவர்களிடம் சில கேள்விகளைச் சமர்ப்பித்தோம். அவரது தனிப்பட்ட தோல்வி, எதிர்க்கட்சிகளுக்குக் கிட்டிய ஒட்டுமொத்தமான பலத்த அடி, அவற்றின் எதிர்காலம், இன்றையச் சூழலில் பத்திரிகைகளின் பணி ஆகிய அம்சங்கள் குறித்த வினாக்களுக்குத் திரு. ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ் தமது பதில் கடிதத்தில் விடைகளைத் தருகிறார்.**



அன்புள்ள ஆசிரியருக்கு:

பங்களூர் வடக்குத் தொகுதியில் நான் தோற்றுப் போனதற்கான காரணங்களை விரிவாக விவாதிக்க நான் விரும்பவில்லை. எளிய பதில் என்னவெனில், எனக்குக் கிடைத்தது **2,19,000** வோட்டுக்கள். காங்கிரஸ் எதிராளிக்குக் கிடைத்தது **2,59,000** வோட்டுக்கள் என்பதே. இந்த நிலைமை உருவானதற்குப் பல காரணங்கள் இருப்பினும் ,அவற்றை நான் எழுத்தில் வடிக்க விரும்பவில்லை.

சாமானிய மக்களின் வாழ்க்கையைத் தொடுகின்ற விதத்தில் அரசியல் கட்சிகள், கொள்கைகள், திட்டங்கள் வகுத்துப் பணியாற்றுவதில்லை; அடிமட்ட நிலையில் கட்சிகளின் ஜனநாயக அமைப்புகளும் உருவாவதில்லை. இந்தச் சூழலில் மக்கள் வெகு எளிதாக அனுதாப அலை போன்ற மனோரீதியான அம்சங்களாலும், பிரச்னைகளே அல்லாத விஷயங்களாலும், திசை திருப்பப்படுவார்கள். கடந்த ஏழு ஆண்டுகளாக இந்தியாவில் எந்த அரசியல் கட்சியுமே அடிமட்ட நிலையில் அரசியல் பணியாற்றி அஸ்திவாரத்தைப் பலப்படுத்தவில்லை. உட்கட்சி ஜனநாயகம் கிராமங்கள், நகரங்கள், வட்டங்கள் என்று படிப்படியாக வளரவில்லை. மேலும் இந்த அரசியல் கட்சிகள் கொஞ்ச நஞ்சமிருந்த லட்சிய நோக்கையும், கொள்கைகளையும், திட்டங்களையும் தூக்கி எறிந்துவிட்டன. தங்கள் கட்சி பதவிக்கு வந்தால் பிரதம மந்திரி யார் என்று அவரை முன்னிருத்திப் பிரபலப்படுத்துவதிலேயே காலம் கழித்தன. இம்மாதிரியான விளையாட்டில் காங்கிரஸைத் தோற்கடிக்க எந்த எதிர்க் கட்சியாலும் முடியாது. ஏனெனில் காங்கிரஸ் இந்தக் காரியத்தை வெகு காலமாகவே செய்து வந்து அனுபவம் பெற்றிருக்கிறது. பின்னால் உருவான எந்தக் கட்சியும் அதற்கு இந்த விஷயத்தில் ஈடு கொடுக்க முடியாது. எனவே நான் மக்களைக் குறை கூற மாட்டேன்.

எதிர்க்கட்சிகள் தனித்துவத்துடன் கூடிய ஒரு லட்சியத்தையும், செயல் திட்டத்தையும் வகுத்துக் கொண்டு தத்தம் அமைப்புக்களை ஜனநாயக ரீதியாக வளர்க்க வேண்டும். மக்களுடைய பிரச்னைகளைத் தமதாக்கிக்கொண்டு அவர்களுடைய எதிர்பார்ப்புகள் நம்பிக்கைகளுக்குக் குரல் கொடுக்க வேண்டும்.

வறண்டதான ஏழு ஆண்டு அரசியல் வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற்றது போல நான் உணர்கிறேன். மறுபடி நான் மக்கள் மத்தியில் இருப்பேன். அவர்கள் பிரச்னைகளை எனதாக்கிக் கொள்வேன். மனிதனை மனிதன் ஏய்த்துப் பிழைக்கும் சமூக அமைப்பு இன்று நமது தேசத்தை மரணப் பிடியில் சிக்க வைத்துள்ளது. போராட்டமும், தியாகமும் இன்றி இதனை மாற்றி அமைக்க முடியாது என்று கருதுகிறேன்.

எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை என்பது பலருக்கும் பலவிதமான அர்த்தத்தைக் கொடுக்கிறது. வெவ்வேறு லட்சிய நோக்குகளும் செயல் திட்டங்களும் கொண்ட கட்சிகள் ஒருங்கிணைவது சாத்தியமேயில்லை. இந்த எண்ணமே அபத்தமாயிருக்கிறது. தனித்துப் போட்டியிட்டுப் பதவிக்கு வர முடியாது என்றும் பட்சத்தில் தொகுதிகளைப் பகிர்ந்து கொள்வது, குறைந்த பட்சச் செயல் திட்டத்தின் அடிப்படையில் கூட்டாட்சி அமைப்பது ஆகிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பார்க்கலாம்.

இன்றையச் சூழலில் பத்திரிகைகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நான் புத்தி சொல்லத் தயாராயில்லை. ஆனால் நாடாளுமன்றத்தில் எதிர்ப்புப் பணி என்று சொல்லும்படி விசேஷமாக ஏதும் இல்லாத போது நாடாளுமன்றத்துக்கு வெளியே அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளுக்குப் பத்திரிகைகள் முக்கியத்துவம் தருவது அவசியம் என்று நான் நம்புகிறேன்..

ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ்

# அஸ்திவாரத்தைப் பலப்படுத்துங்கள்!

# ஆர்வலர் ஆர்.வி.

சென்னையில் ஈஸன் நிறுவனம் தொழில் தொடங்கியது. உற்பத்தியான பொருள்களுக்கு ஏற்ற சந்தை அமையவில்லை. அந்தப் பொருள்களுக்குக் கிழக்கு ஜெர்மனியில் தேவை இருந்தது தெரிய வந்தது. அது சோஷலிஸ்ட் நாடு. சர்வதேச சோஷலிச அமைப்புடன் தொடர்புடையவர் என்கிற அளவில் ஜெயப்பிரகாஷ் நாராயணனுக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, அவரைக் கிழக்கு ஜெர்மனிக்கு அனுப்பி உற்பத்திப் பொருள் ஏற்றுமதிக்கு உதவியவர் அப்போதைய தொழில் அமைச்சராக இருந்த ஆர். வி.

அரசாங்கத்தின் கடமை தொழிலுக்கு வேண்டிய மூலதனத்தைக் கடனாகவோ, முதலீடாகவோ வழங்கி உதவுவதோடு முடிந்து விடவில்லை. தொழில் வளர்ச்சியிலும் அரசு பலவிதங்களில் கைகொடுக்க முடியும். அப்படி உதவுவது நாட்டின் முன்னேற்றத்துக்கு அவசியம். இதனை நிர்வாகத்தில் தலையிடாமலே செய்யலாம் என்று உணர்ந்து செயல்பட்டவர் ’ஆர்.வி.

தமிழக அமைச்சராக ஆர். வி. இருந்த போதுதான், சென்னையில் மிகப் பெரிய அளவில் உலகப் பொருட்காட்சி நடைபெற்றது. மேற்குச் சென்னைப் புறநகர்ப் பகுதி என்று வழங்கப்பட்ட பகுதியைச் சீரமைத்து, நூற்றிருபது அடி அகலச் சாலைகள் போட்டுத் திருத்தியமைத்த பெருமையில் ஆர். விக்குப் பெரும்பங்கு உண்டு. பின்னாளில் இப்பகுதியே அண்ணாநகர் என்று விரிவடைந்து சென்னை நகரின் மிக முக்கியமான இடமாகிவிட்டது. அவ்வாறே இந்திரா நகர், சாஸ்திரி நகர், அசோக் நகர் என்னும் பெயர்களைப் புதிய பகுதிகளுக்குச் சூட்டிய பெருமையும் ஆர்.விக்கு உண்டு.

தான் பொறுப்பேற்ற எந்தத் துறையிலும் உள்ள நுணுக்கமான விவரங்களை வெகு ஆர்வத்துடன் தெரிந்துகொண்டு செயல்படுவார் அவர். அதிகாரிகள் விளக்கித்தான் ஆக வேண்டும் என்பதில்லை. எந்தவிதமான சிறிய தயக்கமோ, சந்தேகமோ கூட எழாதவாறு பிரச்னைகளைச் சமாளிப்பார்.

உருவம், பேச்சு, நடை, உடை எல்லாவற்றிலுமே பண்பாடு மிளிரும். எதிராளி கூட மனம் புண்படாமல் நடந்து கொள்வார். தன்னுடைய உடன்பாடின்மையைக் காட்ட, வாய் பேசாமல் மௌனமாக இருந்தே சமாளித்துவிடுவார்.

67 தேர்தலில் காங்கிரஸ் தோற்றுப் போய்க் காமராஜர், மனம் புண்பட்டிருந்த போது. ஆர். வி. யிடம்தான் தம்முடைய வேதனையைப் பகிர்ந்து கொண்டார்.

தம்முடைய அந்தரங்கமான விஷயங்களைக் காமராஜர் பகிர்ந்து கொள்ள இரண்டு மூன்று பேர்களை மட்டுமே நாடுவார். அவர்களில் ஆர். வி. ஒருவர்.

தேர்தல் நிதி வசூல் என்று வருகிற நேரங்களில் காமராஜர் ஆர்.வி.யைத் தான் பெரிதும் நம்புவார். பணம் பைசா விடாமல் முறையாகக் கணக்கில் வர ஆர். வி. யின் நாணயம் அவருக்குப் பெருத்த உதவியாக இருந்தது.

இந்த நாணயமும், நேர்மையும் மத்திய அமைச்சராக ஆன பின்னரும் பன்மடங்குச் சிறப்பாகப் பரிணமித்தது. ஒரு சமயம் டெல்லித் தொழிலதிபர்கள் சிலருடன் பேசும் வாய்ப்புக் கிடைத்தபோது அவர்கள் சொன்னது: "இந்த அமைச்சரவையிலேயே இரண்டு பேரை ரொம்பவும் சுத்தமானவர்கள் என்று சொல்லலாம். ஒருவர் ஆர். வி. இன்னொருவர் வி. பி. ஸிங்." அப்போதைய வணிகத்துறை அமைச்ராக இருந்தவர் இவர். கேட்க மிகவும் பெருமையாக இருந்தது.

காமராஜர் அமைச்சரவையில் திறமையானவர்கள், மும்மூர்த்திகள் என்று குறிப்பிடப்பட்டவர்களுள் ஆர். வி. ஒருவர். மற்றவர்கள் ஸி.எஸ்.ஸும் பக்தவத்சலமும்.

தமிழ் ஆட்சி மொழி என்று சிம்மாசனம் ஏறியிருந்த காலம். 'எலக்ட்ரிஸிடி போர்ட்' என்பதைத் தமிழில் எப்படி எழுதலாம் என்று கேட்டார்கள். "வாரியம்" என்று வழங்கலாம் என்று குறிப்பு அனுப்பப்பட்டது.

"இது சாதாரணமாக உள்ளவர்களுக்குப் புரியுமா?" என்று கேட்டார் ஆர். வி. "இந்தச் சொல் மக்களோடு புழக்கத்திலிருந்த ஒன்றுதான். தமிழ் மன்னர்கள் காலத்தில் ஏரி வாரியம், தோட்ட வாரியம் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்" என்று விளக்கப்பட்டது.

அப்போது ஆர். வி. ஏற்றுக் கொண்டது தான் "மின்சார வாரியம்" என்ற சொல். இப்போது தாங்களே ஆண்டு கொள்கிற மற்ற பல அமைப்புக்களுக்கெல்லாம் வாரியம் என்ற சொல் பயனாகிப் பழகிவிட்டது.

சர்வதேச நிதி ஸ்தாபனங்களிலும், ஐ.நா. சபையிலும் அரும்பணியாற்றியுள்ளார் ஆர்.வி. என்றாலும், எல்லாவற்றிற்கும் மேலாக அவருக்கு மனநிறைவும், சாந்தியும் அளித்த பணி புதுதில்லியில் சுப்பிரமணிய சுவாமி கோயில் திருப்பணிதான்.

கு. ராஜவேலு கூறியவை.
தொகுப்பு: —யெஸ்பால்.
வண்ணப்படம்: யோகா.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032· (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

அறிமுகம்!

மன்சீஸ் பிஸ்கட்ஸ்




கையளவு மன்சீஸை இன்றே ருசியுங்கள்!

கரகரப்பானது. காரசாரமானது.
சிறிதளவு மன்சீஸை ருசித்தவர்,
பாக்கெட்டு முழுவதையும் காலி
செய்தே தீருவர்.




OBM/9665/TAM

Bakeman's
Home Baked Freshness

சில விசேஷ நகரங்களில்
மற்றுமே கிடைக்கும்.

ஜீரா - விறுவிறுப்பான சீரகம் கலந்த கார பிஸ்கட்டுகள்
அஜ்வைன் - மொறுமொறுப்பான ஓமம் கலந்த உப்பு பிஸ்கட்டுகள்

